# மொழியியல்

தொகுதி 6 அக்டோபர்-டிசம்பர் எண் 2

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

கி. கருணாகரன்

ந. நடராசபிள்ளை

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1982

T13389
R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

## அண்ணாமலைநகர்

## செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் : | டாக்டர் சி. சுப்பிரமணியம் (நாகர்கோவில்) |
| துணைத் தலைவர் : | டாக்டர் இ. அண்ணாமலை (மைசூர்) |
| செயலாளர் : | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் : | டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் : | திரு ஜி. கிருட்டிணபகவான் (மலேசியா) |
| | டாக்டர் கே. குத்தாலம்பிள்ளை (திருவனந்தபுரம்) |
| | டாக்டர் பி. சாம்டேனியல் (அல்ஜீரியா) |
| | திரு ந. அருணபாரதி (வாரணாசி) |
| | செல்வி மு. சுசீலா (அண்ணாமலைநகர்) |

## மொழியியல்

### அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200-00 | US $ 50-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 300-00 | US $ 75-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20-00 | US $ 5-00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 30-00 | US $ 7-00 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ 10-00 | |

மொழியியல் 6. 2. (1982)

# முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும்

ச. அகத்தியலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

## 1. தமிழ்மொழி

### 1.1. தமிழும் பிற பழைய மொழிகளும்

நீண்ட ஒரு வரலாற்றையும் நெடிய ஒரு பாரம்பரியத்தையும் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றூண்டுகளுக்கு முன்னரே தனக்கெனத் தனி வாழ்வையும் வரலாற்றையும் கொண்டு விளங்கும் மொழி தமிழ் மொழி.

இத்தகைய பழமையும் பெருமையும் தொடர்ச்சியும் கொண்ட மொழிகள் ஒரு சிலவே. கிரேக்கம், லத்தீன், சீனம், எகிப்தியன், சமஸ்கிருதம் போன்ற விரல் விட்டு எண்ணக் கூடிய மொழிகளே தமிழோடு ஒப்ப வைத்து எண்ணற்பாலன. எனினும் இம் மொழிகளும் ஒரு சில பண்புகளில் குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றன.

நைல் நதிக்கரையில் நல்லதொரு நாகரீகத்தைக் கண்ட எகிப்திய மொழி என்றோ அழிந்து விட்ட நிலையைக் காண்கின்றோம். அராபிக் மொழியின் ஆற்றல் மிகுந்த செல்வாக்கில் அது மறைந்துவிட்டது. இன்று அதைப் பேசுவோரில்லை.

இதைப் போன்றே லத்தீன் மொழியும் இன்று பேச்சு மொழியாக இல்லை. கிறித்தவ கோயில்களில் பயன்படும் கோயில் மொழியாகவே அது உள்ளது. பேச்சு மொழியாக அது இல்லை.

சீனமொழி இன்று சீன நாட்டின் மொழியே. எனினும் பல வேறு கிளை மொழியாக மாறி ஒரு கிளையினைப் பேசுவோர் மற்றொரு கிளை மொழியைப் பேசும் நிலைமையில் இல்லை. எழுத்து மொழியே அவர்களை இணைக்கும் பாலமாக உள்ளது. ஆனால் இந்நிலை தமிழ் மொழிக்கு இல்லை.

சமஸ்கிருத மொழி பற்றி நாம் நன்கு அறிவோம். உலக மொழிகளில் சிறந்ததொரு செம்மொழியாக இது இருப்பினும் லத்தீன் மொழியைப் போலவே வழக்கற்று விட்ட பண்பைக் காண்கிறோம். பாணினி, காளிதாசன் போன்ற இலக்கண இலக்கிய அறிஞர்களைப் பெற்றெடுத்த பெருமை கொண்ட மொழியாயினும் இதுவும் லத்தீன் மொழியைப் போலவே வழக்கற்று விட்ட நிலையிலேயே உள்ளது.

ஆனால் தமிழ் மொழியோ அன்று முதல் இன்றுவரை வாழும் மொழியாகவும் வளரும் மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் உள்ளமை கண்கூடு. எத்தனையோ நூற்றாண்டுகளாக வளர்ந்து வரும் இம்மொழி மாறாத இளமையோடும் மங்காத செல்வத்தோடும் வாழ்ந்து வரும் மொழியாக உள்ளது. கன்னித் தமிழ் என்று அழைக்கப்படுவது பொருத்தமாகவே உள்ளது. இரண்டாயிரம் ஆண்டு வளர்ச்சியில் இது எத்தனையோ மாற்றங்களைக் கண்டுள்ளது. ஆயினும் பழைய ஆங்கிலத்துக்கும் இன்றைய ஆங்கிலத்துக்குமிடையே காணப்படும் வேறுபாடு சங்கத் தமிழுக்கும் தற்காலத் தமிழ் மொழிக்கும் இடையே இல்லை.

### 1.1. இலக்கிய, இலக்கணப் பாரம்பரியம்

தமிழ் சிறந்ததொரு இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்டது. கி. மு. 3 ஆவது நூற்றாண்டிற்கு முன்பே தனக்கென எழுத்துச் சான்றைக் கொண்டுள்ளது. இது இக்காலப் பகுதியில் தோன்றிய தாகக் கருதப்படும் தொல்காப்பியத்திற்குப் பின்னர் வாழையடி வாழையாக ஒரு இலக்கிய வரலாற்றைக் கொண்டு விளங்குவது. இந்நிலையில் தமிழ் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களையும் வேறு பாடுகளையும் வரன்முறையாக வரலாற்று அடிப்படையில் ஆராய் வதற்கு நல்லதொரு வாய்ப்பு இருப்பதைக் காணலாம்.

இலக்கியப் பாரம்பரியத்தைப் போலவே முறையான தொடர்ச்சி கொண்ட ஒரு இலக்கணப் பாரம்பரியமும் தமிழுக்கு உண்டு. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம் போன்ற பல்வேறு மரபு இலக்கண நூல்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளன. இவற்றைப் போன்றே ரேனியஸ், கிரால், போப், பெஸ்கி, ஆர்டன் போன்ற மேனாட்டு அறிஞர்களாலும் பல வேறு தமிழ் அறிஞர்களாலும் நல்ல இலக்கண நூல்கள் பல எழுந்துள்ளன. இவர்கள் அனைவரும் ஒரு சிறந்த இலக்கணப் பாரம்பரியத்தை அமைத்துத் தந்துள்ளனர். இந்நிலையிலும் தமிழ் மொழியில் காணப்பட்ட மாற்றங்களை நாம் நன்கு அறுதியிட முடியும். இவ்வாசிரியர்கள் குறித்துச் சென்ற இலக்கண விளக்கங்களி லிருந்து பல்வேறு உண்மைகளை நாம் நன்கு புரிந்து கொள்ள லாம். இதைப் போன்றே, இவ்விலக்கண நூல்களுக்கு உரை கண்ட இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் போன்ற உரையாசிரியர்கள் பலர் தங்கள் நுண்மாண் நுழைபுலத்தினால் ஆங்காங்கே குறித்துச் சென்ற இலக்கண விளக்கங்களும், எடுத்துக்காட்டுக்களும் தமிழ் மொழியின் வரலாற்றை அறுதியிடவும், இதன்கண் காணப்படும் பல்வேறு இலக்கணக் கூறுகளின் வரலாற்றையும், வாழ்வையும் அறிந்திட வும், இவற்றின்கண் காணப்படும் மாற்றங்களைத் தெரிந்து கொள்ளவும் பயன்படுகின்றன.

இன்றைய தமிழ் மொழியின் பலவேறு கிளை மொழிகளுக்கு இன்றைய மொழியியலாளர் வகுத்துள்ள இலக்கணங்களும்,

அவர்கள் மொழியியல் அடிப்படையில் முன்னர்த் தோன்றியுள்ள இலக்கணங்களுக்குத் தந்துள்ள விளக்கங்களும், ஆய்வு உரைகளும் ஏராளமாக எழுந்துள்ளன. இவையும் தமிழ் மொழி ஆராய்ச்சிக்கு உதவுவதாக உள்ளன.

## 2. தமிழ்மொழியின் காலப் பகுப்பு

மேலே கூறிய இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்துத் தமிழ் மொழியைப் பண்டைத்தமிழ் (Ancient Tamil), இடைக்காலத் தமிழ் (Middle Tamil), தற்காலத்தமிழ் (Modern Tamil) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றின் சில பண்புகளைக் கருத்தில் கொண்டு இவற்றை முறையே சங்கத்தமிழ் (Sangam Tamil), தெய்வத்தமிழ் (Devotional Tamil), வளரும் தமிழ் என அழைப்பது மிகப் பொருத்தமாகும்.

### 2.1. பண்டைத்தமிழ்

மிகப்பழைய காலத்தில் காணப்பட்ட தமிழையே பண்டைத் தமிழ் என்கிறோம். தமிழில் என்று எழுத்துச் சான்றுகள் தொடங்கிற்றோ அன்று முதல் உள்ள தமிழே பண்டைத் தமிழ். தொல்காப்பியம் முதல் நூல் ஆயினும் அதற்கு முன்னர் சில குகைகளில் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களே முதல் எழுத்துச் சான்றுகளாகக் கருதப்படுகின்றன. இவை கி. மு. மூன்று, நான்காம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பது சிலர் (Iravatham Mahadevan, 1969) எண்ணம். இக்கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்டவை. இதுவரையிலும் எழுபத்தாறு கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் காணப்படும் தமிழ் மொழியும் தமிழ்மொழி வரலாற்றுக்கு மிக மிக உதவுவது.

எனவே இக்கல்வெட்டுக்களின் காலம் முதல் கி.பி. ஆறாவது நூற்றாண்டு வரையிலும் உள்ள காலப் பகுதியைப் பண்டைத் தமிழ்க் காலம் என்றும் அக்காலத் தமிழைப் பண்டைத் தமிழ் என்றும் கூறலாம்.

இக்காலப் பகுதியில் காணப்படும் தமிழ்மொழிக்கெனத் தனிப் பண்புகள் பல உள்ளன. இக்காலப் பகுதியில்தான் பிராமிக் கல்வெட்டுக்கள், தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் என்று கருதப்

படும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள், சங்கம் மருவிய காலம் என்று கருதப்படும் காலத்தில் உண்டான திருக் குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் தோன்றின. இந்நூல்களில் காணப்படும் மொழி நிலைக்கும் பின்னர்த்தோன்றிய நூல்களில் காணப்படும் மொழி நிலைக்குமிடையே வேற்றுமைகள் பலவற்றைக் காணலாம்.

பண்டைத் தமிழையும் தொல் பழந்தமிழ் (குகைக்கல்வெட்டு, தொல்காப்பியம்), பழந்தமிழ் என இரண்டாகப் பிரிக்கலாம். பழந் தமிழையும் முன்பழந்தமிழ், பின் பழந்தமிழ் என மீண்டும் பிரிக்க முடியும். இதுபற்றிப் பின்னர்க் காண்போம்.

## 2.2. இடைக்காலத் தமிழ்

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரையிலும் உள்ள காலப்பகுதியில் உள்ள தமிழ் மொழியே இடைக்காலத்தமிழ் என அழைக்கப்படுவது. கி.பி. ஆறாம் நூற்றாண்டையொட்டித் தோன்றிய காரைக்கால் அம்மை யார் புராணம், தேவாரம், கம்பராமாயணம், வில்லிபாரதம் போன்ற நூல்களில் காணப்படும் மொழிநிலைக்கும் பண்டைத் தமிழ் மொழிநிலைக்குமிடையே வேறுபாடுகள் பல உண்டு. இதனால்தான் இதனை இடைக்காலத் தமிழ் என்கிறோம். இந் நிலையை வினைகளில் காணப்படும் பால்காட்டும் விகுதிகளிலேயே நன்கு காண முடியும். பக்தி இலக்கியங்கள் என்று கருதப்படும் தேவாரத் திருவாசகங்களும், நாலாயிரத் திவ்விய பிரபந்தமும், சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பிய நூல்களும் இன் னோரன்ன பிறவும் தமிழ்மொழியின் பொற்கால இலக்கியங் களாகக் கருதப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பாடல்களைத் தன்னகத்தே கொண்ட நூல்கள் பலப்பல. இத்தகைய நூல்கள் தெய்வ மணம் கமழ்ந்து பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட எழுந்தவையாகும். இதனால்தான் இக்காலத் தமிழைத் தெய்வத் தமிழ் என்கிறோம்.

சங்க கால இலக்கியங்கள் சமயச் சார்பற்ற நூல்கள். வீர யுகம் என்றழைக்கப்படும் காலத்தையொட்டிய நூல்களாகக் கருதப்

பட வேண்டியவை. ஆனால் இடைக்காலத்தில் வளமான, ஏராள மான நூல்கள் தோன்றின. கம்பராமாயணம், சிந்தாமணி, வில்லிபாரதம் போன்ற பெரும் பெரும் காப்பியங்கள் தோன்றிய காலம். தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக ஏராளமான இலக்கியங் கள் தோன்றிய காலமும் இதுவே. தமிழ் வளர்ச்சி உச்சகட்டத் தில் இருந்த காலம் இதுவேயாகும்.

## 2.3. தற்காலத்தமிழ்

கி.பி. பதினேழாம் நூற்றாண்டு முதல் இன்று வரையுள்ள காலப்பகுதியையே தற்காலம் என்றும் இக்காலத்தமிழையே தற் காலத்தமிழ் என்றும் அழைக்கிறோம். பொதுவாக ஐரோப்பியர் களின் வருகைக்குப் பின்னர் தமிழ் மொழி வரலாற்றில் பெரிய தொரு மாற்றம் ஏற்பட்டது எனக் கருதலாம். இலக்கிய வர லாற்றில் மட்டுமன்றி மொழி வரலாற்றிலும் இதனை நன்கு காண முடியும். ஐரோப்பிய மொழிகளின் அதிலும் குறிப்பாக ஆங்கில மொழியின் செல்வாக்கை நன்கு உணரலாம். சிறுகதை, புதினம், குறுநாவல், பத்திரிகைகள், உரைநடை போன்ற பலவேறு துறைகளில் தமிழ் வீறுகொண்ட ஒரு எழுச்சியுடன் வளர்ந்த நிலையில் தமிழ் மொழியும் நவீன மொழியாக வாழத் தலைப்பட்டது. அறிவியல், சமூக அறிவியல் போன்ற பலதுறை கள் வளரவளரத் தமிழும் பலவேறு மாற்றங்களைக் கண்டது எனக் கூறலாம். புதிய புதிய கலைச் சொற்கள், புதிய வாக்கிய அமைப்புக்கள், புதிய சில இலக்கணக் கூறுகள் போன்ற பல நிலைகளில் தமிழில் மாற்றங்கள் பல ஏற்பட்டன. புதிய புதிய சொல்லாக்கம், துணைவினை போன்றவற்றில் காணப்பட்ட மாற்றம் போன்றின்னோரன்ன பல வேறுபாடுகளை நன்கு காண முடியும். இதனால்தான் இக்காலப் பகுதியைத் தனியொரு காலப் பகுதியாகக் கருதுகிறோம். ''வளரும் தமிழ்'' என அழைப்பதும் இதனாலேயே.

## 2.4. பண்டைத் தமிழ்க் காலம்

தொடக்க காலம் முதல் கி. பி. 6 வது நூற்றாண்டு காலம் வரையுள்ள காலப்பகுதி பண்டைத் தமிழ்க் காலப்பகுதி எனக் கண்

டோம். இக்காலப் பகுதியில்தான் தொல்காப்பியம் உருவாயிற்று என்றும் அதன் முன்னர்ப் பல கல்வெட்டுக்கள் உண்டாயிருந்தன என்றும் கண்டோம். இப்பண்டைத் தமிழ்க்காலத்தைத் தொல் பழந் தமிழ், பழந்தமிழ் என இரண்டாகப் பிரிக்கலாம்.

### 2. 4. 1. தொல் பழந்தமிழ்

பிராமிக் கல்வெட்டுக்கள், தொல்காப்பியம் ஆகியவை தோன்றிய காலப்பகுதியையே தொல் தமிழ்க்காலம் என்கிறோம். மிகத் தொடக்கக் காலம் முதல் கி. பி. முதல் நூற்றாண்டுவரை உள்ள காலப்பகுதியே இது.

### 2. 4. 1. 1. குகைத்தமிழ்

இக்காலப் பகுதியில் எழுதப்பட்டவை எனக் கருதப்படும் கல்வெட்டுக்கள் பல தமிழ்நாட்டின் தென்பகுதிகள் பலவற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. குகைப் பகுதிகளில் கண்டெடுக்கப் பட்டமையால் இவற்றைக் குகைக் கல்வெட்டுக்கள் (Cave inscriptions) எனவும், பிராமி லிபியில் எழுதப்பட்டிருக்கின்ற நிலையில் பிராமிக் கல்வெட்டுக்கள் (Brahmi inscriptions) எனவும் கூறுவர். மதுரைக்குப் பக்கத்தில் உள்ள கீழ வளவு, திருநெல்வேலிப் பக்கம் உள்ள மறுகால்தலை போன்ற 21 இடங்களில் இருந்து கிடைத்த 76க்கும் அதிகமானக் கல்வெட்டுக்கள் உள்ளன.

இவற்றை முதன் முதலில் ஆராய்ந்து கூறிய அறிஞர் கே.வி. சுப்பிரமணிய ஐயர் ஆவார். இக்கல்வெட்டுக்களில் காணப்படும் மொழியையே பிராமிக் கல்வெட்டுத் தமிழ் அல்லது குகைத்தமிழ் எனக் கூறுகிறோம். இவரைப் பின்பற்றிப் பலர் இவை பற்றி ஆராய்ந்துள்ளனர். பாண்டிய நாட்டில் பரந்து காணப்படும் இக் குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்து முறையைத் தமிழ் பிராமி எழுத்து முறை என்றும் இது பிராமி எழுத்து முறையிலிருந்து உருவானது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். தமிழ் ஒலிக் கேற்ப பிராமி எழுத்து முறை சில மாற்றத்துடன் வழங்கப்பட்டிருக்கின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக இக்கல்வெட்டுக்கள் இருக்கலாம் என்பது அறிஞர்களின் (தெ. பொ. மீனாட்சிசுந்தரன், 1977 : 54) முடிபு.

இதன்கண் காணப்படும் பெயர்ச்சொற்களில் சில பிராகிருதச் சொற்களாக இருத்தலின் இக்கல்வெட்டும் பிராகிருத மொழியாக இருக்கலாம் என எண்ணினர். ஆனால் வேறு. ல பெயர்ச்சொற்க ளும், வினைச்சொற்களும் பிறவும் தமிழ் மொழி என்பதை வெள் ளிடைமலைபோல் தெரிவிக்கின்றன.

இதன் மொழிநிலை பற்றித் தெ. பொ. மீ., ஐராவதம் மகா தேவன் போன்றவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளனர்.

இதன்கண் காணப்படும் வினைமுற்றுச் சொற்கள் படர்க்கை யிடத்தனவாக உள்ளன (ஐராவதம் மகாதேவன், 1969).

கொடுப்பித்தோன்
கொடியவன்
கொடுப்போர்

போன்றவை வினைமுற்றாக மட்டுமின்றி வினையாலணையும் பெயராகவும் உள்ளன.

இக்கல்வெட்டு மொழிகளே மிகப்பழங்கால எழுத்து வடிவின தாக உள்ளது. தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே இது தோன்றியிருந்த நிலையில் இதனை மிகப் பழந்தமிழ்க்காலத்தின் முந்திய பகுதியினதாகக் கருதலாம்.

### 2.4.1.2. தொல்காப்பியம்

தமிழில் காணப்படும் மிகப் பழமையான நூல் தொல்காப்பி யம். இது ஒரு இலக்கண நூல் என்பதும் இதுவே திராவிட மொழிகளில் மிகப் பழமையான நூல் என்பதும் இங்கு குறிப்பிடத் தகுந்த செய்திகள். இது ஒரு இலக்கண நூல் என்ற நிலையில் இதற்கு முன்னர் எத்தனையோ இலக்கியங்கள் இருந்திருக்கவேண் டும் என்பதும் இந்நிலையில்தான் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் தோன்றியிருக்க முடியும் என்பதும் ஒருதலை· விரிவான ஒரு இலக்கியப் பாரம்பரியம் இருந்தாலன்றி இத்தகைய இலக்கண நூல்கள் தோன்ற முடியாது என்பது பலர் அறிந்த செய்தியாகும். எனவேதான் தொல்காப்பியம் எழுந்ததாகக்

கருதப்படும் கி. மு. மூன்று அல்லது இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ் இலக்கிய நூல்கள் பலவற்றையும் இலக்கண நூல்கள் சிலவற்றையேனும் கொண்டிருத்தல் வேண்டும் என எண்ணலாம். தொல்காப்பியம் பல இடங்களில் ''வழக்கு'' ''செய்யுள்'' எனக் கூறியிருப்பது முன்னர் இருந்த இலக்கியப் பரப்பினையும் ''என்மனார்'' ''என்மனார் புலவர்'' ''என்ப'' ''மொழிப'' போன்ற தொடர்கள் முன்னால் இருந்த இலக்கணப் படிப்பையும் காட்டுவனவாக உள்ளன. இதனால்தான் பாயிரம் எழுதிய பனம் பாரனாரும்

''வழக்குஞ் செய்யுளும் ஆயீறு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு, முறைப்பட எண்ணி''

என்றெல்லாம் கூறாநிற்பர்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களில் ஐந்திலக்கணங்களைக் கொண்டுள்ளது. எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற இலக்கணங்களைப் பிறமொழி இலக்கணங்களிலும் காணமுடியும். ஆனால் பொருள் இலக்கணம் காணமுடியாத ஒன்று. ஒரு மொழியைப் பற்றி நன்கு அறிய வேண்டின் அம்மொழி பேசும் மக்களின் வாழ்வியல் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும் என்ற நிலையில்தான் பொருளிலக்கணம் பேசப்படுகின்றது என எண்ணலாம்.

### 2. 4. 2. பழந்தமிழ்க் காலம்

தொல்காப்பியத்திற்குப் பின்னரே சங்க நூல்கள் தோன்றின என எண்ணப்படுகின்றது. சங்கம் மருவிய நூல்களாகக் கருதப்படும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களும் பின்னர்த் தோன்றியவைகளே. இந்நூல்களே பழந்தமிழ் நூல்களாகவும் இந்நூல்கள் தோன்றிய காலப்பகுதியே பழந்தமிழ்க் காலப் பகுதி என்றும் (கி. மு. முதல் நூற்றாண்டு முதல் கி. பி. 5 ஆவது நூற்றாண்டுவரை) எண்ணப்படுகின்றன.

### 2. 4. 3. முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும்

பழந்தமிழ் நூல்களில் பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு. அக நானூறு, நற்றினை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு ஆகிய நூல்களுக்கும் பரிபாடல், கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களுக்குமிடையே மொழி நிலையில் பலவேறு வேறுபாடுகளைக் காணலாம். சிலப்பதிகாரம், மணிமேகலை, குறள் ஆகிய நூல்கள் சங்க காலத்தையடுத்துத் தோன்றின என்றும் அதனால்தான் அவை சங்கம் மருவிய நூல்கள் என்றும் அக்காலம் சங்கம் மருவிய காலம் என்றும் அறிஞர்களால் கருதப்படுகின்றன. இதைப் போன்றே எட்டுத்தொகையைச் சார்ந்த பரிபாடலும் கலித்தொகையும் பிற சங்கநூல்களினின்றும் மாறுபட்டு நிற்பதையும் அறிஞர்கள் பலர் ஆங்காங்கே குறிப் பிட்டுச் சென்றுள்ளனர். சங்ககால நூல்களின் மொழி நிலைபற்றி அதிலும் குறிப்பாக வினைச் சொற்களைப் பற்றி ஆராய்ந்த எல். வி. ராமசாமி ஐயர் சங்க நூல்களில் புறம், அகம், நற்றிணை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய நூல்கள் முந்தி யவை என்றும் கலித்தொகை, பரிபாடல் ஆகியவை பிந்தியவை என்றும் (1938:749) கூறிச் செல்வார். மேலும் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவையும் பிந்தியன என்பது அவர் எண்ணம்.

இதே கருத்தினைத்தான் வையாபுரிப்பிள்ளையும் கொண் டுள்ளார். பலவேறு காரணங்களைக் காட்டிக் கலித்தொகையும், பரிபாடலும் (காவிய காலம் 37:39) பிற சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியன என்பார். சங்க காலத்தை இரண்டாகப் பிரித்து இவை பிற்சங்ககாலத்தில் தோன்றியன என்பார். இவ்வாறு இரு சங்கங்கள் எனக் குறிப்பிடுவதை ஒத்துக் கொள்ளுவது முடியாத ஒன்றாகும். இதைப்போன்றே இவர் காட்டும் மொழிக் கூறுகளில் சிலவும் (அல் ஈறு, அல்லால் போன்ற சொற்களின் ஆட்சி, போன்றவை), பிற சங்க நூல்களில் காணப்படுமாயினும் கலியும், பரியும் பிந்தியவை எனக் கருதலாம்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரனும் இதே கருத்தைக் கொண் டுள்ளார். பழம் இலக்கியங்களைப் பாகுபாடு செய்யும்போது (1965 : 118).

1. பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப் பத்து, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு.
2. திருக்குறள்.
3. பரிபாடல், கலித்தொகை.
4. சிலப்பதிகாரம்.
5. மணிமேகலை.

எனப் பகுத்து நிற்பார்.

பரிபாடல், மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் மொழி நிலை பற்றி ஆராய்ந்த பலரும் இந்நூல்கள் பிந்திய கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளன எனக்கூறுவர். பேராசிரியர் வ. சுப. மாணிக்கம் (1976), டாக்டர் கந்தசாமி (1978), டாக்டர் சாரங்கபாணி (1977:13-26) போன்றவர்களும் தங்கள் தங்கள் நூல்களிலும் கட்டுரைகளிலும் இதுபற்றி விளக்கமாக எழுதியுள்ள னர். இன்னும் பலரும் இதுபற்றி ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

திருக்குறள் பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுவதைக் காண்கிறோம். சங்க இலக்கியங்களுக்கு இது முந்தியதா அன்றிப் பிந்தியதா என்ற வினா அறிஞர்களிடையே பன்னெடுங்காலமாக இருந்து வருவதை நாம் நன்கு அறிவோம். சிலர் முந்தியது என்றும் இன்னும் சிலர் பிந்தியது என்றும் கருதுகின்றனர்.

திருக்குறள் மிக மிகப் பிந்தியது என்பது பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையின் எண்ணம். ஆனால் அவர் காட்டும் காரணங்கள் இன்று ஒத்துக் கொள்ளப் படுவதில்லை. அவர் காட்டும் பல இலக்கணக் கூறுகள் வேறுபல நூல்களிலும் காணப்படுவதால் நிச்சயமாக அத்தனை அளவுக்குக் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு) குறள் பிந்தியது அல்ல என்று முடிவு கட்டலாம். எனினும் சங்க இலக்கியங்களுக்கு முந்தியதா என்பது வாதத்திற் குரியதே. முந்தியது எனப் பலவேறு காரணங்களைக் காட்டி டாக்டர் இராசமாணிக்கம்பிள்ளை வாதாடுவார். (1963: 117-123)

டாக்டர் ப. அருணாசலம் போன்றவர்கள் பிந்தியது (1968) என்பர். டாக்டர் இலட்சுமணசாமி (1979: 28) ''அறம் பாடிற்றே ஆயிழை கணவ'' என்பதில் வரும் அறம் என்பது திருக்குறள் அன்று என்றும் வேறு ஏதோ ஒரு அறநூலைக் குறிப்பது என்றும் குறிப்பிட்டுச் செல்லுவார். முன்னர்க் குறிப்பிட்டதுபோன்று எல். வி. இராமசாமிஐயர் திருக்குறளைச் சங்க இலக்கியங்களிலேயே இணைக்கமாட்டார். தெ. பொ. மீ. இது சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்டது (1965:118) எனத்திட்டவட்டமாகக் குறிப்பிடுவார். திருக்குறளின் மொழி நிலையை நோக்க சங்க இலக்கியங்களுக்கு இது பிந்தியது என்றும் எனவே இதைப் பின்பழந்தமிழ் நூல்களில் ஒன்றாகக் கருதலாம் என்பதும் நிச்சயமாக விளங்கும். பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வினைமுற்று விகுதிகளின் போக்கே இப்பண்பை நன்கு காட்டும்.

இந்நிலையில் பழந்தமிழ்க் காலத்தையும் முன்பழந்தமிழ்க் காலம் (Early Old Tamil, EOT) என்றும் பின்பழந்தமிழ்க்காலம் (Late Old Tamil, LOT) என்றும் பிரிக்கலாம். இதுபோன்றே பழந் தமிழ் நூல்களையும் முன்பழந்தமிழ் நூல்கள் என்றும் பின்பழந் தமிழ் நூல்கள் என்றும் பகுக்கலாம்.

### 3. முன்பழந்தமிழ்க் கூறுகளும் பின்பழந்தமிழ்க் கூறுகளும்

பரி, கலி, திருக்குறள், சிலம்பு, மணி ஆகிய நூல்கள் தோன்றிய காலப்பகுதியே பின்பழந்தமிழ்க்காலம் (Late Old Tamil) எனப்படுகிறது, திருக்குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்கள் சங்கம் மருவிய கால நூல்களாகக் கருதப் படுகின்றன. இந்நூல்களுக்கும் பிற சங்க நூல்களுக்குமிடையே வேற்றுமை பலவற்றைக் காணமுடிகிறது. பலவேறு இலக்கணக் கூறுகளில் இப்பண்பைக் காணலாம்.

இந்நூல்களைப் பற்றி ஆராய்ந்த வையாபுரிப்பிள்ளை (1952), கந்தசாமி (1978), இராசமாணிக்கம் பிள்ளை (19ό3), வ. சுப. மாணிக்கம் (1976) போன்ற பலர் இந்நூல்களின் தனித் தன்மை பற்றிப் பலவேறு கோணங்களில் நின்று இவற்றின்

காலத்தை நிர்ணயிக்க முயன்றுள்ளனர். பலவேறு காரணங்களைக் காட்டும் இவர்கள் பலவேறு மொழிக்கூறுகளையும் தந்து இவை பிற நூல்களைவிடப் பிந்தியன எனக் கூறுவர். இவர்கள் காட்டும் மொழிக்கூறுகளில் பல முன்னரே முன் பழந்தமிழ் நூல்களில் வந்துள்ளன என்றாலும் இந்நூல்கள் பிற நூல்களுக்குப் பிந்தியன என்பது வெள்ளிடைமலையாகும். தனித்தனி நூல்களின் காலத்தை ஆராயும் இவர்கள் காட்டும் மொழிக்கூறுகள் யாவும் பொதுவாகப் பின்பழந்தமிழ் நூல்களின் பண்புகளாகவே கருதப் படவேண்டும். தனிப்பட்ட நூல்களில் மட்டும் காணப்படுபவையாக ஒரு சிலக் கூறுகளே உள்ளன. இவற்றுள்ளும் சிலக் கூறுகள் பிற நூல்களில் தற்செயலாக விடுபட்டனவாகவே கருதத்தக்கன.

கீழே தரப்படும் பலவேறு கூறுகள் மேல் குறிப்பிட்ட அறிஞர்களாலும் பிறராலும் குறிப்பிடப்பட்டுள்ளவையாகும். அவற்றோடு வேறு பல புதிய கூறுகளும் தரப்பட்டுள்ளன.

3.1. நின் - உன்

முன்பழந்தமிழ் நூல்களில் முன்னிலை ஒருமை வேற்றுமை அடிச்சொல்லாக நின் பெருவாரியாகக் காணப்பட உன் என்ற சொல்லோ அகநானூற்றில் ஒரு இடத்திலும் சிலப்பதிகாரம் (6) மணிமேகலை (29) ஆகிய நூல்களில் பல இடங்களிலும் காணப்படுகிறது. நகரம் கெட்டுவருதல், பழந்தமிழ் இலக்கியங்களில் (நீர் : ஈரம்) காணப்படுகின்ற போதிலும் முன்னிலைப் பதிலிடு பெயர்களில் காணப்படுவதில்லை. ஆனால் பின் பழந்தமிழ் நூல்கள் என்று கூறப்படுகின்ற சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் இடைக்கால நூல்களிலும் காணப்படுகிறது. அகநானூற்றுக் காலத்திலேயே உன் இலக்கியத்தில் ஏறிவிட்ட போதிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை காலத்துக்குப் பின்னரே தொடர்ச்சியாக இலக்கியங்களில் இது வருகிறது. சம்பந்தர் தேவாரம் (11) அப்பர் தேவாரம் (128) சுந்தரர் தேவாரம் (113) போன்ற நூல்களிலெல்லாம் இதன் ஆட்சியைக் காணலாம். இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும்.

கான நாடன் உறீஇய நோய்க்குன்
மேனி ஆய்நலந் தொலைதலின் மொழிவென்
அகம் 222. 2-3 (கபிலர்)

உன் பெருந் தானத் துறுதி யொழியாது
சிலம்பு 15. 34[1]

ஒரு தனி நின்றாய் உன்றிற மறிந்தேன்
மணி 4. 96[2]

போன்ற இடங்களில் 'உன்' வருதல் காணத்தக்கது.

### 3.2. நும் - உம்

முன்னிலை ஒருமையைப்போலவே முன்னிலைப் பன்மைப் பதிலிடு வேற்றுமை அடிச்சொல்லும் நகர ஒற்று இழந்து காணப் படுகிறது. உம், என்னும் வேற்றுமை அடிச்சொல்லும் பின் பழந்தமிழ் நூல்களாகிய பரிபாடல், கலித்தொகை, மணிமேகலை, ஆகிய நூல்களிலும் முன்பழந்தமிழ் நூல்களாகிய அகநானூறு, நற்றிணை ஆகிய நூல்களிலும் உள்ளது. தேவார, நூல்களில் இது அதிகமாகக் காணப்படுகிறது. முன்பழந்தமிழ் காலத்திலேயே இது இலக்கியத்தில் ஏறிவிட்ட போதிலும் பின்பழந்தமிழ் கூறாகவே இது கருதப்படவேண்டும். இவற்றுள் இரு இடங்கள் உயர்வு ஒருமையாகவும் வந்துள்ளன.

உம்மோடு (உயர்வு ஒருமை) (நற் 368-3-4) (கபிலர்)

ஆடினம்
இம்மனை அன்றஃ தும்மனை (உயர்வு ஒருமை)
(அகம்56-14) (மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்)
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
(புறம் 45-5) (கோவூர் கிழார்)

1. சிலம்பு 15-34, 68, 23-29, 25-158, 30-62, 30-64
2. மணி 2-17, 4-96, 7-27, 9-63, 67, 10-18, 38, 42, 43 48, 79, 14-35, 16-37, 113, 119, 17-46, 18-169, 171, 21-18, 108, 22-71, 129, 23-74, 80 102, 24 62, 144, 25-100, 26-68.

வச்சிய மானே மறவினை மாற்றுமக்கு
(பரி 20-84) (நல்லந்துவனார்)

சான்றீர் உமக்கொன் றறிவுறுப்பேன் (கலி 139-4)

செறிதொடி நல்லீர் உம்பிறப் பீங்கு (மணி 11-141)

3. 3. கள்

பழந்தமிழ் இலக்கியங்களில் - கள் விகுதி பொதுவாக அஃறிணை காட்டும் சொற்களிலேயே வரும். அதுவும் மிக மிக அருகியே காணப்படும். பதி (2), ஐங் (2). அகம் (2), நற் (1), குறு (2) புறம் (2), பத்து (3), பரி (5), கலி (10), குறள் (5), சிலம்பு (56), மணி (74) ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நிலைகள் | பதி. | 27 - 10 |
| அரண்கள் | பதி. | 44 - 13 |
| மயில்கள் | ஐங். | 291 - 2<br>292 - 1 |
| வழிகள் | அகம். | 18 - 11 |
| பார்ப்பினங்கள் | | 31 - 6 |
| பலிகள் | நற் | 293 - 2 |
| யாண்டுகள் | புறம் | 357 - 6 |
| அழிகள் | | 399 - 10 |
| பொருள்கள் | பத்து | 1 - 97 |
| இயங்கள் | | 10 - 277 |
| களங்கள் | | 10 - 464 |
| முடிகள் | பரி | 2 39 |

| | | | |
|---|---|---|---|
| கண்கள் | | 7 | 52 |
| இழைகள் | | 10 | 92 |
| கைகள் | குறள் | | 1238 |
| சொற்கள் | | | 1100 |
| உயிர்கள் | சிலம்பு | 10 | - 175 |
| கருவிகள் | | 3 | - 139 |
| இடங்கள் | மணி | 6 | - 199 |
| அணுக்கள் | | 27 | - 126 |

இதனால்தான் அஃறிணைப் பெயர்களைப் பால்பகா அஃறிணைப் பெயர்கள் என இலக்கண நூலோர் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் காலம் செல்லச்செல்ல அஃறிணைச் சொற்களுடன் — கள் விகுதியை இணைத்துப் பன்மை கூறும் வழக்கம் பெருகிற்று. பின்னர் இது உயர்திணைப் பன்மைப் பெயர்களிலும் உயர்திணைப் பெயர்களிலும் வர ஆரம்பித்தது. உயர்வு ஒருமையிலிருந்து பிரித்தறியவே இது பன்மைப் பெயர்களில் வந்தது. எனவேதான் இவற்றை இரட்டைப் பன்மை என அழைக்கிறோம்.

3. 4. இரட்டைப்பன்மை

ஐவரென் றுலகேத்தும் அரசர்கள் கலி 25. 3

தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோல கலி 26 - 6

என்னோர்க ளிடும்பையுங் களைந்தீவாய்
நினக்கே கலி 100 - 23

கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற
செல்வங்கள் கலி 149 - 8

...............மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் குறள் 263

.. ... .. .. .........புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு — குறள் 919

உடன்வயிற் றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
சிலம்பு 10 - 227

பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே
சிலம்பு 24 - 19 - 18

கோவலர்தஞ் சிறுமியர்கள்
குழற்கோதை புறஞ்சோர — சிலம்பு 17 - 28 - 2

வெடிபட வருபவர் எயினர்கள் — சிலம்பு 12 - 20 - 2

இறந்த காலத் தெண்ணில்புத் தர்களுஞ்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது
மணி 30 - 14 - 15

நிறையுடைப் பத்தினி பெண்டிர்காள்
சிலம்பு 19 - 2

சமணீர் காள்நுஞ் சரணென்றோலை
மணி 5 - 52

போன்றவற்றில் அரசர்கள், ஐவர்கள், என்றோர்கள், கேளிர்கள், மற்றையவர்கள், பூரியர்கள், வயிற்றோர்கள், வானோர்கள், சிறுமியர்கள், எயினர்கள், புத்தர்கள், சமணீர்காள், பெண்டிர்காள் ஆகிய சொற்கள் உயர்திணை இரட்டைப் பன்மைச் சொற்களாக வந்துள்ளன. இவை -கள் விகுதி உயர்திணைப் பன்மைகாட்டும் விகுதிக்குப் பின் வருவதை உணர்த்தும். இத்தகைய நிலையை முன்பழந்தமிழ் நூல்களில் காணமுடிவதில்லை.

### 3. 5. இரட்டைப் பன்மைப் பதிலிடுபெயர்கள்

இவ்வாறு இரட்டைப்பன்மை விகுதியாக உயர்திணையில் வந்த -கள் பின்னர் பதிலிடு பெயர்களிலும், ஆண்பால், பெண்பால் பெயர்களிலும் வரத் தொடங்கின. கலித்தொகை, மணிமேகலை, சிலம்பு ஆகிய நூல்களில் இப்பண்பைக் காணலாம்.

3. 5. 1. எங்கள்

……………மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ கலி 22. 20 - 21

வெவ்வுரை யெங்கட்கு விளம்பினிர் மணி 25 - 53

3. 5. 2. யாங்கள்

யாங்கள் நினைப்பினும் அறியேம் சிலம்பு 25-62
யாங்களும் நீள்நெறிப் படர்குதும் சிலம்பு 11-161
காண்குவம் யாங்களும் மணி 16-82

3. 5. 3. நுங்கள்

முதிர்வினை நுங்கட்கு முடிந்த
தாகலின் சிலம்பு பதிகம் 45

3. 5. 4. தங்கள்

வானோர் தங்கள் வடிவீன் அல்லதை
ஈனோர் வடிவிற் காண்ட லில்லென சிலம்பு பதிகம் 52
வானோர் தங்கள் வடிவின் அல்லதை
ஈனோர் வடிவிற் காண்டல் இல்லென
சிலம்பு 23- 175

...... கொங்கிளங் கோசர் தங்கணாட்ட
கத்து நங்கைக்கு சிலம்பு உரைபெறு கட்டுரை 2-1

விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து
நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களும் மணி 28, 64-65

மேலே காட்டிய இப்பன்மைச் சொற்கள் கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப் படுவது குறிப்பிடத்தக்கது.

3. 6. உயர்திணைப்பன்மை

மேலும் - கள்விகுதி உயர்திணைச் சொற்களுடனும் வருதல் காணலாம். உயர்வு ஒருமைச் சொற்களிலிருந்து பன்மைச் சொற்களைப் பிரித்து அறிவதற்காக உயர்திணைப்பன்மைச்

சொற்களில் இணைந்த -கள் விகுதி பின்னர்ச் சாதாரண உயர் திணைச் சொற்களுடனும் இணைந்துவிட்டது. இத்தகைய சொற்கள் பரிபாடல், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் வந்துள்ளன.

வாளிகள் நிலைபெற மறலுவார் பரி 9- 54

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது குறள் 1075

சிலப்பதிகாரத்தில் பெண்கள் (30-50) நோன்பிகள் (10-24, 15-153, 164, 16-18) சாரிகள் (10-13, 27-93) அடிகள் (பதி 2, 62, 88, 10-62, 11-166, 13-87, 14-24, 16-18, 43) ஆகியவையும் மணிமேகலையில் அடிகள் (2-5, 3-92, 93, 24-50, 29 45) அறவணஅடிகள் (பதி 57, 2-61, 11-140, 12-1, 28-81, 236) அந்தரசாரிகள் (28-69) செட்டிகள் (25-165) முனிகள் (28-114) ஆகிய சொற்களிலெல்லாம் -கள் விகுதி இணைந்துள்ளது.

### 3.7. உயர்வு ஒருமைப்பெயர்கள்

பெயர்ச்சொற்கள் - ஆர் சிறப்பு விகுதி பெற்று வரும் பண்பினைப் பின்பழந்தமிழ் நூல்களிலேயே காண்கிறோம்.

| | | |
|---|---|---|
| சாமனார் | கலி | 94-34 |
| அசோதையார் | சிலம்பு | 17-28-3<br>17-32-3 |
| கஞ்சனார் | சிலம்பு | 17-37-1 |
| நாரதனார் | சிலம்பு | 17-26-4<br>17-27-4 |
| வேலனார் | சிலம்பு | 24-14-1 |
| மகளார் | சிலம்பு | 24-15-2<br>24-16-2 |
| மகனார் | சிலம்பு | 16 17 |

-ஆர் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் வரவில்லையாயினும் வேறு பல விகுதிகள் சிறப்புக் குறித்து வந்துள்ளமை காணலாம்.

காதலர் (குறு 4.3) காதலோர் (குறு 118.5) ஒருவீர் (புறம் 45.5) மலைக் கிழவோர் (குறு 392. 8) சான்றோர் (குறு 10 2 - 4) போன்ற சொற்கள் ஏராளமாக முன்பழந்தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன. காதலர் என்ற சொல் குறுந்தொகையில் மட்டுமே 23 இடங்களில் வந்துள்ளது. இது போன்றே ஐங்குறு நூறு (18 அகம் (32) நற்றிணை (21) ஆகிய முன்பழந்தமிழ் நூல்களிலும் உள்ளன. இதனால் பன்மைவிகுதிகள் உயர்வு குறிப்பது பண்டைத்தமிழ் நூல்கள் அனைத்திலும் காணக் கிடக்கும் ஒரு பண்பாகும். எனினும் -ஆர் ஈற்றுச் சொற்கள் முன்பழந் தமிழ் நூல்களில் காணப்படாதது விட்டாகவே உள்ளது. ஆனால் தொல்காப்பியம்

> இயற் பெயர் முன்னர் ஆரைக் கிளவி
> பலர்க்குரி எழுத்தின் வினையோடு முடிமே

என்ற சூத்திரத்தில் இயற்பெயர் முன்னர் -ஆர் வரும் என்றும் அது பலர்க்குரிய விகுதியுடன் முடியும் என்றும் கூறியுள்ளார். இந்நிலையில் தொல்காப்பியர் காலத்திலேயே இயற்பெயர் -ஆர் விகுதி ஏற்று வரும் என்றாகிறது. ஆனால் தொல்காப்பியத்திற்கும் பின்னர்த் தோன்றியனவாகக் கருதப்படும் முன்பழந்தமிழ் இலக்கியங்களில் இவை வரவில்லை.

இந்நிலையில் தொல்காப்பியர் காலத்திலேயே ஆரீற்றுச் சொற்கள் வழக்கில் வந்துவிட்டது என்றும் ஆனால் செய்யுள் நடையில் அல்லது இலக்கிய வழக்கில் ஏறவில்லை என்றும் எண்ணலாம். இக்கருத்து வலுப்பெறுதற்குச் சங்கப் பாடல்கள் தொகுப்பும் அவற்றில் காணப்படும் பெயர்களுமே சான்றாக உள்ளன.

ஐங்குறுநூறு சங்ககாலச் சேரவரசனாகிய யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை காலத்திலேயே தொகுக்கப்பட்டு விட்டது என்பது நாம் அறிந்த செய்தியாகும். இதுபற்றி ஐங்குறு நூற்றின் இறுதியில்.

''இத்தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; இத்தொகை தொகுப்பித்தார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையார்'' என -ஆர் விகுதி கொடுத்துக் கூறி யிருப்பது காண்க.

இதுபோன்றே சங்கப் புலவர்களும் பலவேறு தொகுப்புகளில் பேயனார், ஓதலாந்தையார், காக்கைப்பாடினியார் நச்செள்ளை யார் போன்று -ஆர் விகுதி பெற்றிருப்பதும் உணரத்தக்கது. எனவே முன்பழந்தமிழ் இலக்கியங்களில் -ஆர் விகுதி பெற்ற சொற்கள் இல்லையாயினும் அக்காலத்திலேயே இவ்வழக்கு வந்து விட்டதாகக் கருதலாம். எனவேதான் தொல்காப்பியரும் ''வழக்கும் செய்யுளும்'' நாடி -ஆர் விகுதி பற்றிப் பேசுகிறார் என எண்ணலாம்.

எனினும்-ஆர் விகுதி இலக்கிய வழக்கில் ஏறி வருவதை ஒரு பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும். பின்பழந்தமிழ் நூல்களிலும் இடைக்காலத் தமிழ்நூல்களிலுமே இவை காணப் படுகின்றன.

### 3.8. எகர வினாச்சொற்கள்

முன்பழந்தமிழ் நூல்களில் யாங்கணும் (அகம் 7-3) யாங்கனம் (நற் 381-6) யாங்கு (நற் 29-6) போன்ற யா முதல் சொற்கள் மாத்திரமே காணப்பட, பரிபாடல், கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை முதலிய நூல்களில் இவற்றுடன் எ முதல் சொற்களாகிய எங்கணும், எங்ஙனம், எங்கு போன்றவையும் அவற்றிலிருந்து உருவாகும் பிற சொற்களும் காணப்படு கின்றன. படிப்படியாக இச்சொற்கள் பெரு வழக்கில் வந்து விட்டமையைக் காண்கிறோம்.

### 3. 8. 1. எங்கும்

இச்சொல் கலித்தொகை (1) சிலம்பு (2) மணிமேகலை (8) ஆகிய நூல்களில் காணப்படுகிறது.

எங்குந் தெரிந்தது கொள்வேன் அவனுள் வழி

கலி 144-16

......நிலாக்கோட்டம் புக்கெங்குந்
தேவிர்காள் எம்முறுநோய் தீர்மென்று
சிலம்பு 9-3-14

ஆர்த்த கணவன் அகன்றனன் போயெங்கும்
தீர்த்தத் துறைபடிவே னென்றவளை ......
சிலம்பு 9-37-38

...... பொருள்களி லெங்குமெப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற ...... மணி 27-187

நன்றா யெங்கும் பரந்து மணி 27-226

3. 8. 2. எங்கணும்

இச்சொல் சிலப்பதிகாரத்தில் 4 இடங்களில் வந்துள்ளது.

இறையுயர் மாட மெங்கணும் போர்த்து சிலம்பு 10-145

ஆவும் ஆரமும் ஓங்கின எங்கணும் சிலம்பு 12-2-1

மலைபுரை மாடம் எங்கணும் கேட்ப சிலம்பு 23-124

ஆடு கூத்த ராகி யெங்கணும்
ஏந்துவா ளொழியத் ...... சிலம்பு 26-228

3. 8. 3. எங்ஙனம்

இச்சொல் குறள் (1) சிலம்பு (1) ஆகிய இரு நூல்களில் உள்ளது.

தன் ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் குறள் 251

இறைவளைகள் தூற்றுவதை ஏழையம்
எங்ஙனம் யாங்கறிகோ சிலம்பு 7. 29-2

3. 8. 4. எங்கு

இச்சொல் சிலப்பதிகாரத்தில் இரு இடங்களில் காணப் படுகிறது. இது இடைக்காலத் தமிழில் மிக அதிகமாகக் காணப் படுகிறது.

போயெங்கு நாடுகேன் சிலம்பு 19-69

...... எங்கொளித் தாயோ சிலம்பு 30-111

3. 8. 5. எப்பொழுதும்

இச்சொல் கலித்தொகையில் ஒரு இடத்திலும் மணிமேகலை யில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.

எல்லாருங் கேட்ப அறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள் கலி 102-11

எல்லையில் பொருள்களி லெங்குமெப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற மணி 27-110

3. 8. 6. எஞ்ஞான்றும்

இது பரிபாடல். கலித்தொகை ஆகிய நூல்களில் இரண் டிரண்டு இடங்களிலும் குறளில் 18 இடங்களிலும் வந்துள்ளது.

வானம் பெயர்ந்த மருங்கொத்தல் எஞ்ஞான்றும்
தேனிமிர் வையைக்கியல்பு பரி XVI-37

வினவன் மின் ஊரலிர் என்னையெஞ் ஞான்றும்
கலி. 147-53

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் குறள் 44

3. 8. 7. எவள்

முன்பழந்தமிழ் நூல்களில் 'யாவள்' என்ற சொல் (தொல், சொல் 162-6, ஐங் 370-4) காணப்பட பரிபாடலில் எவள் என்ற சொல் வருதல் குறிப்பிடத்தக்கது.

உள்ளழுத்தி யாளெவளோ தோய்ந்த தியாதென பரி 6 91

இத்தகைய சொற்கள் மேலே குறிப்பிட்டபடி கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப் படுகின்றன. ஆனால் காலப்போக்கில் அப்பர் தேவாரம் போன்ற இடைக்காலத் தமிழ் நூல்களில் அதிகமாகித் தற்காலத்தமிழில் இவை மட்டுமே ஆட்சி பெற்று நிற்பது காணலாம்.

3.9. அங்கு, இங்கு, எங்கு

முன்பழந்தமிழ் நூல்களில் ஆங்கு, ஈங்கு, யாங்கு என்ற சொற்கள் முறையே அந்த இடம், இந்த இடம் எந்த இடம் என்ற பொருளில வரப் பின்பழந்தமிழ் நூல்களில் அங்கு, இங்கு, எங்கு என்ற சொற்கள் வருவதைக் காணலாம். குறிஞ்சிப்பாட் டில் (1) அங்கு என்ற சொல் வரினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும். இச்சொல் கலி (2) சிலம்பு (5) மணி (10) ஆகிய பின்பழந்தமிழ் நூல்களில் வந்துள்ளது. இதைப் போன்றே இங்கு என்ற சொல்லும் அகம் (1), குறு (1), ஆகிய இரு முன்பழந்தமிழ் நூல்களிலும் காணப்படினும் சிலம்பு, மணி ஆகிய இருநூல்களிலும் பல இடங்களில் (5, 7) வந்துள்ளது. எங்கு என்ற சொல்லும் கலி, சிலம்பு, மணி ஆகிய நூல்களிலேயே வந்துள்ளது.

இவற்றைப் போலவே அந்த, இந்த, அப்படி, இப்படி, அப் போது, இப்போது ஆகிய சொர்களும் பின்பழந்தமிழ்க் கூறு களாகும்.

| | | |
|---|---|---|
| அந்த | மணி | 17-34, 23-61, 28-55 29-30 |
| இந்த | சிலம்பு | 15-107, 21-51 |
| | மணி | 6-165, 13-42, 15-107, 21-51, 22-155, 26-63, 27-285, 28-198 |
| அப்படி | மணி | 27-189, 29-400, 409 |
| இப்படி | மணி | 29-469, 30-178 |
| இப்போது | மணி | 27-85 |

| | | |
|---|---|---|
| அங்கு | பத்து | 8-97 |
| | கலி | 145-46 |
| | சிலம்பு | 6-25 |
| | மணி | 6-26 |
| இங்கு | அகம் | 85-3 |
| | குறு | 175-5 |
| | கலி | 47-10 |
| | சிலம்பு | 2-72 |
| | மணி | 4-104 |
| எங்கு | சிலம்பு | 19-69 |
| | மணி | 6-187 |

### 3. 10. நான்

முன்பழந்தமிழில் தன்மை ஒருமை பதிலிடு பெயராக யான் என்ற சொல்லே ஆட்சிபெற்றுள்ளது. இச்சொல்லிலிருந்தே நான் என்ற சொல் ஒப்புமை ஆக்கத்தினால் உருவாயிற்று என்பது மொழியியல் அறிஞர்களின் எண்ணம். இச்சொல் பரிபாடல், சிலம்பு மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நான் | பரி | 6-87 |
| நான் | சிலம்பு | 29-2-4 |
| நான் | மணி | 23-95 |

### 3. 11. அல்லால்

இவ்வடிவமும் பின்பழந்தமிழ் நூல்களிலேயே காணப்படுகிறது. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை குறள் பற்றிக் குறிப்பிடும்போது

---

| | | |
|---|---|---|
| அங்கு | சிலம்பு | 24-1-6 29-1-10, 19-1, 30-89 |
| | மணி | 14-86, 18-83, 21-8, 23-37, 25-185, 26-18, 27-32, 28-116, 210. |
| இங்கு | சிலம்பு | 9-76, 13-54, 15-110 20-60 |
| | மணி | 20-89, 123, 21 107, 23-128, 25-10 27-221 |
| எங்கு | சிலம்பு | 30-111 |
| | மணி | 6-191 |

இதனை எடுத்தாள்வார். குறளில் (12) மட்டுமின்றிக் கலித்தொகையிலும் (10) இது வருகிறது.

| | | |
|---|---|---|
| பொருளல்லால் பொருளுமுண்டோ | கலி | 14-10 |
| புறங் காண்டலல்லால் | கலி | 15-2 |
| பகை அல்லால் | கலி | 67-4 |
| தாங்கியதல்லால் | கலி | 83-24 |
| பெறினல்லால் | கலி | 88-8 |

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'' குறள் 377

## 3. 12. தான், தன்

தான், தன் ஆகியவை தேற்றங் காட்டும் இடைச் சொல் போன்று தன்மையிலும் முன்னிலையிலும் வருவதைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு நூல்களிலும் காண்கிறோம். பலவேறு பெயர்களுடன் வருவதை முன்பழந்தமிழ் நூல்களிலும் காணமுடியும்.

| | | |
|---|---|---|
| என்றன் மேல் | சிலம்பு | 9-48 |
| என்றன் வஞ்சியொடு | சிலம்பு | 25-135 |
| உன்றன் அருந்துயர் | சிலம்பு | 15-68 |
| என்றன் வான்பதி தன்னுள் | மணி | 1-6 |
| என்றன் பழவினை | மணி | 17-14 |
| என்றன் உள்ளகம் புகுந்து | மணி | 18-120 |
| உன்றனுக்கு | மணி | 16-113 |
| உன்றன் கோட்டம் | மணி | 18-169 |

## 3. 13. மல்லீற்று வினையெச்சம்

முன்பழந்தமிழ் நூல்களில் பலவேறு வாய்பாட்டு வினை எச்சங்கள் காணப்பட, கலித்தொகை, பரிபாடல், குறள், சிலப்பதி

காரம், மணிமேகலை ஆகிய பின்பழந்தமிழ் நூல்களில் - மல் விகுதி வந்துள்ளது. கலித்தொகையில் 12 இடங்களிலும் பரி பாடலில் 2 இடங்களிலும் திருக்குறளில் 4 இடங்களிலும் சிலப்பதி காரத்தில் 6 இடங்களிலும் மணிமேகலையில் 4 இடங்களிலும் காணப்படுகிறது. பத்துப்பாட்டில் மலைபடுகடாத்தில் ஒரு இடத் தில் காணப்படுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| காஅய்க் கொண்டநும் இயந்தொய் படாமல் | பத்து | 10-365 |
| கொளுத்தாமல் | பரி | 11-126 |
| போழ்திடைப் படா அமன் முயங்கியு மமையார் | கலி | 4-10 |
| செய்யாமல் | குறள் | 101 |
| பிரியாமல் | சிலம்பு | 1-61 |
| அறியாமல் | மணி | 26-21 |

போன்றவை இப்பண்பினைக் காட்டும். பத்துப்பாட்டில் இது வரினும் இதனையும் பின்பழந்தமிழ் கூறாகவே கருதலாம்.

### 3.14. நிபந்தனை எச்சம்

#### 3. 14. 1. - ஏல்

முன்பழந்தமிழ் நூல்களில் செயின் வாய்பாட்டு வினைஎச்சமே நிபந்தனை எச்சமாக உள்ளது. எனினும் செயில் வாய்பாட்டு எச்சமும் அகம் (5) நற்றினை (1) பரிபாடல் (1) கலித்தொகை (4) திருக்குறள் (1) சிலப்பதிகாரம் (9) மணிமேகலை (21) ஆகிய நூல்களில் வந்துள்ளது. இதைப்போன்றே – ஆல் ஈற்றைக் கொண்ட வினை எச்சமும் ஐங்குறுநூறு (1) புறம் (1) பரிபாடல் (2) கலித்தொகை (5) குறள் (15) சிலப்பதிகாரம் (13) மணி மேகலை (9) உள்ளது.

ஆனால் (வினை முற்று + ஏல், 'செய்யாயேல்' வாய்பாட்டு எச்சம் கலித்தொகை (11) திருக்குறள் (13) சிலம்பு (8), மணி மேகலை (3) ஆகிய பின்பழந்தமிழ் நூல்களிலேயே காணப்படு கின்றது.

| | | |
|---|---|---|
| வல்லைநீ துறப்பாயேல் | கலி | 3-10 |
| செய்வானேல் | குறள் | 655 |
| வருமேல் | சிலம்பு | 17-19-2 |
| என்றியேல் | மணி | 3-73 |

3. 14. 2. - ஏன்

– ஏல் மட்டுமன்றி - ஏன் விகுதியும் கூட நிபந்தனை வினை எச்சவிகுதியாக கலித்தொகையில் (1) காணப்படுகிறது.

நலனுண் டொளித்தானைக் காட்டீமோ காட்டாயேன்
கலி 144-42-43.

3. 14. 3. ஆல்

முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஆலீற்று நிபந்தனை யெச்சமும் ஐங்குறுநூறு (1) புறம் (1) ஆகியவற்றில் ஒவ்வொரு இடத்தில் வரினும் இதனையும் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதலாம்.

| | | |
|---|---|---|
| என்றால் | ஐங் | 248-3 |
| கண்டால் | புறம் | 390-25 |
| மடுத்தால் | பரி | 20-42 |
| கேட்டால் | கலி | 107-13 |
| கண்டால் | குறள் | 1246 |
| உரைத்தால் | சிலம்பு | 11- 22 |
| போனால் | மணி | 6-158 |

இவ்வெச்சமும் பின்தமிழ் நூல்களாகிய பரி (2), கலித்தொகை (5) திருக்குறள் (2) சிலம்பு (13) மணி (9) ஆகிய எல்லா நூல்களிலும் உள்ளன.

3.15. பெயரெச்சம்

பெயரெச்சத்திலும் சில புதிய பண்புகளைக் கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களில் காணலாம். 'செய்யாத' வாய்பாட்டுப் பெயரெச்சம் இந்நூல்களில் கலித்தொகை

(7) குறள் (14) சிலம்பு (10) மணிமேகலை (1) ஆகியவற்றில் வந்துள்ளது. முன்பழந்தமிழ் நூலாகிய புறநானூற்றில் இரு இடங்களில் வந்துள்ளது எனினும் இதனைப் பின்பழந்தமிழ்க் கூறாகவே கருதவேண்டும்

| | | |
|---|---|---|
| கெடாத | புறம் | 27-19 |
| தாவாத | கலி | 86-29 |
| அகலாத | குறள் | 1226 |
| வளையாத | சிலம்பு | 19-18 |
| இல்லாத | மணி | 27-270 |

முன்பழந்தமிழ் நூல்களில் - ஆ எதிர்மறையாக வர, பின்பழந் தமிழ் நூல்களில் - ஆத் - வருவதும் குறிப்பிடத்தக்கது.

| | -ஆ- | -ஆத்- |
|---|---|---|
| பதி | 93 | 0 |
| ஐங் | 27 | 0 |
| அகம் | 168 | 0 |
| நற் | 142 | 0 |
| குறு | 59 | 0 |
| புறம் | 265 | 2 |
| பத்து | 150 | 0 |
| பரி | 60 | 0 |
| கலி | 168 | 7 |
| குறள் | 125 | 14 |
| சிலம்பு | 170 | 10 |
| மணி | 123 | 1 |

இவ்விகுதி புறநானூற்றில் இரு இடங்களில் (கெடாத 27-19 செல்கலாத 126-16) வந்துள்ளமை காணத்தக்கது. எனினும் பின்பழந்தமிழ் நூல்களில் இது அதிகமாக வருகிறது. இந்நிலை யில் இதனையும் பின்பழந்தமிழ் கூறாகக் கருதலாம்.

**3.16. இன்று, ஆநின்று**

கின்று, ஆநின்று,- கிறு ஆகிய நிகழ்கால இடைநிலைகள் பின் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| சேர்கின்ற | பரி | 22-35 |
| உருள்கின்ற | சிலம்பு | 29-1-11 |
| என்கின்ற | மணி | 29-293 |
| இறவாநின்ற | குறள் | 1157 |
| சாதிக்கிற | மணி | 29-298 |

**3.17. செய்தாற்போல**

பழந்தமிழ் நூல்களில் வந்தாங்கு, செய்தாங்கு, வந்தன்ன, செய்தன்ன போன்ற ஆட்சி வர, கலித்தொகையில் வந்தாற்போல் போன்ற ஆட்சி வருவது ஒரு புதிய ஆட்சியாகவே உள்ளது. இதனையும் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம்.

| | |
|---|---|
| எழுந்தாற்போல் | கலி 118-3 |

**3.18. பெயரெச்சம் + பின்னர்**

வந்தபின், போனபின் போன்ற சொல்லாட்சியினைப் பின்பழந் தமிழ் நூல்களில் (கண்டபின், குறு 306-6) அதிகமாகக் காணலாம். ஆனால் வந்தபின்னர், சென்றபின்னர் போன்ற ஆட்சியினைச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் மட்டுமே அதிக மாகக் காணமுடிகிறது.

| | |
|---|---|
| அடங்கிய பின்னர் | சிலப்பு 3-147 |
| பொறுத்த பின்னர் | மணி 25-60 |

இத்தகைய சொல்லாட்சி பத்துப்பாட்டில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.

| | |
|---|---|
| கொடுத்தபின்னர் | பத்து 8-174 |

3.19. கண்டதன் பின்னர்

வந்ததன் பின்னர், போனதன் பின்னர் போன்ற அன் சாரியை சேர்ந்த வழக்கு சிலம்பு, மணி ஆகிய நூல்களில் மட்டுமே காணப் படுகிறது.

| | | |
|---|---|---|
| போந்ததன் பின்னர் | சிலம்பு | 26-104 |
| இறந்ததன் பின்னர் | சிலம்பு | 27-159 |
| நடந்ததன் பின்னர் | சிலம்பு | 30 85 |
| கண்டதன் பின்னர் | மணி | 11 32 |
| சென்றதன் பின்னும் | சிலம்பு | 28-130 |

3. 20. 1 வினையாலணையும் பெயர்

320. 1. -ஆத்-

பின்பழந்தமிழில் வினையாலணையும் பெயரில் சில வளர்ச்சி களைக் காணலாம். முன்பழந்தமிழில் -ஆத்- எதிர்மறை (புற நானூறில் ஒரு இடம் தவிர்த்து) -ஓன், -ஓள், -ஓர் விகுதிகளுட னேயே வர, பின்பழந்தமிழில் இவ் எதிர்மறை -ஆன், -ஆள், -ஆர் விகுதிகளுடன் மட்டுமே வரக் காணலாம்.

| | | |
|---|---|---|
| நள்ளாதார் | புறம் | 125-5 |
| உதவாதான் | கலி | 149-6 |
| வாழாதான் | குறள் | 479 |
| நல்காதான் | சிலம்பு | 24-2-7 |
| வாழாதாள் | கலி | 2-13 |
| நல்காதார் | கலி | 148-14 |
| சேராதார் | குறள் | 10 |

3. 20. 2. -அவ்-

வினையாலணையும் பெயர் விகுதியாக -அவ்- கொண்ட சொற்கள் முன்பழந்தமிழில் ஒரு சில இடங்களில் மட்டுமே காணப் பட, பின்பழந்தமிழில் இவ்வகைச் சொற்கள் மிக அதிகமாக வரக் காண்கிறோம். (பதி 0, ஐங் 2, அகம் 8, நற் 7, குறு 1, புறம் 9, பத்து 0, கலி 157, பரி 26, குறள் 166, சிலம்பு 21, மணி 10)

| | | |
|---|---|---|
| காணாதவன் | நற் | 307-9 |
| வந்தவன் | புறம் | 217-8 |
| நட்டவன் | பரி | 4-17 |
| அளித்தவன் | கலி | 146-4 |
| இழந்தவன் | குறள் | 788 |
| பெற்றவன் | சிலம்பு | 30-122 |
| ஈத்தவன் | மணி | 24-19 |
| மேவந்தவள் | புறம் | 344-9 |
| நின்றவள் | பரி | 12-67 |
| ஈன்றவள் | கலி | 29-2 |
| உற்றவள் | மணி, பதிகம் | 85 |
| சென்றவர் | ஐங் | 474-4 |
| துறந்தவர் | அகம் | 298-20 |
| ஆர்ந்தவர் | நற் | 156-8 |
| உடன்றவர் | புறம் | 97-2 |
| அணிந்தவர் | பரி | 20-22 |
| அலந்தவர் | கலி | 133-6 |
| இரந்தவர் | குறள் | 224 |
| இறந்தவர் | சிலம்பு | 30-139 |
| பிறந்தவர் | மணி | 16-86 |

### 3. 21. இறந்தகால எதிர்மறை

எதிர்மறைப் பொருளைக் காட்டும் -இல்- இடைநிலையை இறந்தகால வினையெச்சத்தின் பின்னர் இணைத்து எதிர்மறை காட்டும் நிலை முன்பழந்தமிழ் நூல்களில் ஓரிரு இடங்களில் காணப்பட்டாலும் பின்பழந்தமிழ் நூல்களில் சற்றுக் கூடுதலாகவும், மணிமேகலை காலத்திற்குப் பின்னர் மிக அதிகமாகவும் வரக் காணலாம். தேவார, திருவாசகப் பாசுரங்களிலும், திவ்வியப் பிரபந்தத்திலும் இத்தகைய சொற்களை அதிகமாகக் காண முடியும்.

-இறந்தகாலம் * இல்-

| | |
|---|---|
| பதி | - |
| ஐங் | - |
| அகம் | - |
| நற் | 1 |
| குறு | 1 |
| புறம் | 1 |
| பத்து | - |
| பரி | 2 |
| கலி | 1 |
| குறள் | 1 |
| சிலம்பு | 6 |
| மணி | 13 |

| | | |
|---|---|---|
| நினைத்திலை | நற் | 29-5 |
| மெலிந்திலள் | குறு | 18[illegible]-7 |
| போர்ப்பித்திலது | புறம் | 286-5 |
| அறிந்திலேன் | பரி | 8-60 |
| ஆய்வந்திலார் | பரி | 9-25 |
| இழந்திலேன் | கலி | 146-19 |
| கற்றிலன் | குறள் | 414 |
| கண்டிலேன் | சிலம்பு | 16 209 |
| கண்டிலேன் | மணி | 14-52 |

### 3.22. துணைவினைகள்

துணைவினைகள் பழந்தமிழில் காணப்படினும் வேண்டும், வேண்டா, கூடும் போன்ற துணைவினைகள் 'செயல்' வாய்பாட்டுத் தொழிற்பெயருடனும் பிறவற்றுடனும் வருவது இயற்கை.

| | | |
|---|---|---|
| செலீஇயர் வேண்டும் | நற் | 390-6 |
| உள்ளல் வேண்டும் | குறு | 81-4 |

போன்ற எடுத்துக்காட்டுக்கள் இத்துணைவினைகள் இவற்றுடன் வருதலைக் காட்டும். ஆனால்' 'செயவென்' எச்சத்தோடு இத்துணை

வினைகள் வருவது மிக அருகியே காணப்படுகிறது. முன்பழந் தமிழ் நூல்களில் புறநானூற்றில் 4 இடங்களில் இது செயவென் வாய்பாட்டு வினையெச்சத்தோடு வரினும் இதனையும் பின்பழந் தமிழ்க் கூறாகவே கருதலாம். காலப்போக்கில் இது பெருகி இன்றைய தமிழில் இதுவே ஆட்சிபெற்று நிற்கிறது.

| | |
|---|---|
| வளரவேண்டும் | புறம் 339-11 (பெயர் தெரியாப் புலவர்) |
| நினைக்கவேண்டா | புறம் 70-19 (கோவூர் கிழார்) |
| வருந்த வேண்டா | புறம் 101-10 (ஔவையார்) |
| சொல்ல வேண்டா | புறம் 361-21 (பெயர் தெரியாப் புலவர்) |
| செய்யவேண்டும் | கலி 107-13 |
| என வேண்டா | குறள் 37 |
| உள்ள வேண்டா | குறள் 57 |
| புகவேண்டும் | சிலம்பு 11-153 |
| உரைக்க வேண்டா | சிலம்பு 28-156 |
| சாதிக்கவேண்டும் | மணி 29-95 |
| அனுமிக்கவேண்டும் | மணி 29-101 |
| என வேண்டா | மணி 23-127 |
| நொண்டுகொள்ளவும் கூடும் | சிலம்பு 10-85 |

முன்பழந்தமிழ் நூல்களில் புறம், நற் ஆகிய இரு நூல்களில் மட்டுமே செயவென், செய்பியர் வாய்பாட்டு எச்சம் உள்ளது.

### 3.23. ''உண்டு'' உயர்திணையில்

உண்டு என்ற குறிப்பு வினைமுற்று உயர்திணைப் பெயருடன் வருவதையும் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம்.

சான்றோரும் உண்டு கொல் : சிலம்பு 19-54

3.24. போன, ஆன

போ, ஆ ஆகிய இரு வினைச் சொற்களிலும் இறந்த கால இடை நிலையாக -இன்- ஒற்று வருதலே பண்டைத் தமிழில் பெரும்பான்மையாகக் காணப்படும் பண்பு. இவற்றுள் ஆ னகர ஒற்றை எடுத்து வருதல் (பெயரெச்சம்) தொல்காப்பியத்திலும் முன் பழந்தமிழ் நூல்களிலும் காணப்படும். ஆனீர் (குறு 178-4, ஐங் 304-2) போன்ற சொற்களும் உள்ளன. ஆனால் போ என்ற வினையுடன் னகரம் வருதல் பின்பழந்தமிழ் நூல்களில் மட்டுமே காணப்படுகிறது. (தொல்காப்பியத்திலும் இது ஓரிடத்தில் காணப்படுகின்றது). [1]

| | | |
|---|---|---|
| போன | பரி | 22-11, சிலப்பு 7-31-3 மணி 30-2 |
| போனது | சிலம்பு | 30-106, மணி 5-89 |
| போனபின் | சிலம்பு | 26-166 |
| போனார் | சிலம்பு | 7-41-3, 7-43-2, 3, மணி 16-100 |
| போனால் | மணி | 6-158, 9-49, 21-84 |
| போனான் | சிலம்பு | 19-67 |

3. 25. சைகாரச் சொற்கள்

'சை' கார முதன்மொழிச் சொற்களையும் பின்பழந்தமிழ்க் கூறாகக் கருதலாம். பரிபாடல், மணிமேகலை ஆகிய இரு நூல்களில் மட்டுமே இச்சொற்கள் காணப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| சையம் | பரி | 11-14 |
| சைதனியவான் | மணி | 29-176 |
| சைவவாதி | மணி | 27-87 |

1. சிலப்பு 7-34-1, 52-7, 15-73, 21-21 24-19-3. மணி 16-99, 30-41

மேலே காட்டிய வேறுபாடுகள் முன்பழந்தமிழுக்கும் பின்பழந் தமிழுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை நன்கு புலப் படுத்தும். இவற்றிடையே உள்ள வேற்றுமைகளை வினை முற்றுக்களில் காணப்படும் விகுதிகள் மட்டுமே நன்கு காட்டு வனவாக அமைந்துள்ளன.

விகுதிகள் முன்பழந்தமிழ் நூல்களில் எவ்வாறு உள்ளன என்றும் பின்பழந்தமிழ் நூல்களில் எவ்வாறு காணப்படுகின்றன என்றும் இப்போது ஆராயப்படுகின்றது.

பின்பழந்தமிழ் நூல்களில் காணப்படும் பலவேறு கூறுகளே பின்னர் நிலைபெற்று இடைக்காலத் தமிழ்க் கூறுகளாகப் பரிண மித்தன எனக் கருதலாம். ஆங்காங்கே காணப்பட்ட கூறுகள் நிலைபெற்றுப் பெரும்பான்மையாக மாறிய நிலையில் இடைக் காலத்தமிழுக்கு வித்திட்டன. மேலும் பல புதிய கூறுகளும் இடைக் காலத்தமிழில் உண்டாயின. இந்நிலைதான் பழந்தமிழ் இடைக்காலத் தமிழ் என்ற பிரிவை அரண் செய்து நிற்கின்றன.

முற்றுவினைகளிலும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றிட வினைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் பழங் காலத்தமிழிலேயே வேறுபாடுகள் உள்ளன. இதனால் தான் முன் பழந்தமிழ், பின்பழந்தமிழ் எனப் பிரிவு செய்யப்படுகின்றது.

### 3.26. தன்மை ஒருமை விகுதிகள்

பழந்தமிழில் -ஏன், -என், -அன், -அல், -கு, (-இசின்) ஆகிய விகுதிகள் தன்மை ஒருமையைக் காட்டுவனவாக உள்ளன. இவ்விகுதிகளின் எண்ணிக்கை, இவற்றின் பகிர்வு ஆகியவற்றைக் கவனித்து நோக்கின் முன்பழந்தமிழுக்கும் பின்பழந்தமிழுக்கு மிடையே உள்ள வேறுபாடுகள் நன்கு தோன்றும்.

### 3.26.1. -என்-ஏன்

-என், -ஏன் ஆகிய இரு விகுதிகளும் பழந்தமிழ் நூல்களில் காணப்படினும் முன்பழந்தமிழிலும், பின்பழந்தமிழிலும் இவற் றிடையே காணப்படும் விகிதாசாரத்திற்கிடையே வேறுபாடு

உண்டு. புறநானூற்றில் -என் 36 இடங்களில் வர -ஏன் 59 இடங்களில்தான் (9 : 15) வருகின்றது. இதே நிலையினைத் தான் பிற முன்பழந்தமிழ் நூல்களிலும் காண்கிறோம். பதிற்றுப் பத்தில் - என் அதிகமாகவே உள்ளது. ஆனால் கலித்தொகை, சிலம்பு, மணி ஆகிய நூல்களில் - என் மிகமிகக் குறைவாகவே உள்ளது. கலித்தொகையில் 26 இடங்களில் மட்டும் -என் வர -ஏன் 193 இடங்களில் 1:8 என்ற விகிதாசாரத்தில் வரக் காண்கிறோம். -என் விகுதிகள் எண்ணிக்கை குறைந்து சில நூல்களில் வராத நிலையையே காணமுடிகிறது. இடைக்கால நூல்கள் பலவற்றில் -என் வருவதில்லை. இதனால் -என் விகுதியை முன்பழந்தமிழ் விகுதியாகக் கருதலாம்.

| | -என் | -ஏன் |
|---|---|---|
| பதி | 8 | 3 |
| ஐங் | 19 | 16 |
| அகம் | 38 | 37 |
| நற் | 17 | 61 |
| குறு | 28 | 32 |
| புறம் | 36 | 59 |
| பத்து | 2 | 4 |
| பரி | - | 8 |
| கலி | 26 | 193 |
| குறள் | - | 43 |
| சிலம்பு | 4 | 99 |
| மணி | 1 | 144 |

-ஏன் விகுதியின் பகிர்விலும் (distribution) கூட முன்பழந்தமிழ்க் காலத்திற்கும் பின்பழந்தமிழ்க் காலத்திற்குமிடையே வேற்றுமை உண்டு. முன்பழந்தமிழ் நூல்களில் -ஏன் பெரும்பான்மையாக எதிர்மறையில் (வாரேன், பதி 61-11) வருவதும் பின்பழந்தமிழ் நூல்களில் பெரும்பான்மையாகக் கால இடைநிலைகளுக்குப் பின்னர் (மறந்தேன், பரி 19–60) வருவதும் கண்கூடு. புறநானூற்றில் இவ்விகுதி எதிர்மறையில் 27 இடங்களிலும் கால இடைநிலைகளுக்குப் பின்னர் 14 இடங்களிலும் வருகின்றது.

ஆனால் கலித்தொகையில் இந்நிலை மாறி கால இடைநிலைகளுக்குப்பின்னர் 116 இடங்களிலும் எதிர்மறையில் 29 இடங்களிலும் வருதல் காணலாம். பிற நூல்களிலும் இதே நிலையைத்தான் காண்கிறோம். இப்பண்பே இடைக்காலத் தமிழிலும் தொடர்கின்றது.

-ஏன்

| | எதிர்மறை | காலம் |
|---|---|---|
| | — ϕ — | |
| பதி | 1 | 1 |
| ஐங் | 6 | 6 |
| அகம் | 23 | 6 |
| நற் | 28 | 14 |
| குறு | 12 | 13 |
| புறம் | 27 | 14 |
| பத்து | 1 | 1 |
| பரி | 1 | 4 |
| கலி | 29 | 116 |
| குறள் | 11 | 25 |
| சிலம்பு | 21 | 61 |
| மணி | 18 | 100 |

### 3.26.2. ககர ஒற்று

சிலப்பதிகாரத்தில் 4 இடங்களில் -ஏன் விகுதி ககரத்துடன் வருதல் குறிப்பிடத்தக்கதாகும். களைகேன் (சிலம்பு 15-68). நாடுகேன் (சிலம்பு 19-69,) படர்கேன் (சிலம்பு 27-104); பெறுகேன் (சிலம்பு 9-44). சிலம்பில் காணப்படுவது போன்றே மணிமேகலையில் 9 இடங்களிலும் கலித்தொகையில் ஒரு இடத்திலும் ஏன் விகுதி ககரத்துடன் வருவதைக் காணலாம். உண்கேன் (மணி 10-39), உணர்கேன் (மணி 18-156), உரைக்கேன் (மணி 12-34, 117, 16-113), செய்கேன் (மணி 16-36,25-233), படர்கேன் (மணி 17-74), போகேன் (18-171) (இவற்றுள் போகேன் என்ற சொல் எதிர்மறை காட்டுவது), ஆற்றுகேன் (கலி. 140-14). இந்நிலையில் இதனைப் பின்பழந்தமிழின் ஒரு கூறாகக் கருதலாம்.

### 3.26.3. -அல் விகுதி

-அல் விகுதி பழந்தமிழ் நூல்களில் காணப்படும் விகுதிகளில் ஒன்றாகும். இவ்விகுதியும் கூட முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாக உள்ளது. கலித்தொகையில் அதிகமாகக் காணப் பட்டாலும் பரிபாடல், பத்துப்பாட்டு, குறள், சிலம்பு, மணி ஆகிய நூல்களில் மிகமிகக் குறைவாகவே உள்ளது. இதே நிலையைத் தான் இடைக்கால நூல்களிலும் காணமுடிகின்றது.

-அல்

| | இறப்பில் காலம் |
|---|---|
| பதி | 3 |
| ஐங் | 10 |
| அகம் | 12 |
| நற் | 18 |
| குறு | 9 |
| புறம் | 19 |
| பத்து | 3 |
| பரி | – |
| கலி | 23 |
| குறள் | 5 |
| சிலம்பு | 5 |
| மணி | 6 |

### 3. 26. 4 - கு விகுதி

இதே நிலையைத்தான் -கு விகுதியிலும் காண்கிறோம். கலித்தொகை ஒழிந்த ஏனைய பின்பழந்தமிழ் நூல்களில் இது அதிகமாகக் காணப்படுவதில்லை.

| | வினை அடிகள் + கு | -ஆல் + கு |
|---|---|---|
| பதி | 10 | – |
| ஐங் | 6 | – |
| அகம் | 13 | – |
| நற் | 13 | – |

| | | |
|---|---|---|
| குறு | 9 | 1 |
| புறம் | 28 | - |
| பத்து | 0 | - |
| பரி | 4 | - |
| கலி | 12 | - |
| குறள் | 1 | - |
| சிலம்பு | 7 | - |
| மணி | 5 | - |

### 3. 26. 5. -இசின்

-இசின் சொற்களும் தன்மை ஒருமை காட்டும். இச்சொற்களும் பின்பழந்தமிழ் நூல்களில் காணப்படுவதில்லை. ஆனால் முன்பழந்தமிழில் உள்ளது.

| | |
|---|---|
| பதி | 8 |
| ஐங் | 1 |
| அகம் | 6 |
| நற் | 9 |
| குறு | 5 |
| புறம் | 9 |
| பத்து | 1 |
| பரி | 0 |
| கலி | 0 |
| குறள் | 0 |
| சிலம்பு | 0 |
| மணி | 0 |

### 3.27. தன்மைப் பன்மை

முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் வேறுபாட்டைத் தன்மைப் பன்மை விகுதிகளிலும் காணலாம்.

### 3. 27. 1. -எம் -ஏம்

-என், -ஏன் விகுதிகளைப் போலவே -எம், -ஏம் விகுதிகளின் விகிதாசாரங்களும் உள்ளன. முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் -எம், -ஏம் ஆகியவற்றின் விகிதாசாரங்கள் வேறு

பட்டுள்ளன. பரிபாடல் தவிர ஏனைய பின்பழந்தமிழ் நூல்களில் -எம் விகுதியே காணப்படவில்லை. பரிபாடலில் 1 : 8 என்ற விகிதத்தில் இருக்கப் புறநானூறு போன்ற நூல்களில் 1 : 6 என்ற விகிதத்தில் உள்ளது. இந்நிலையில் -எம் விகுதியை முன்பழந் தமிழ் விகுதியாகவே கருதலாம். இடைக்காலத் தமிழில் இது வழக்கிழந்த நிலையில் உள்ளது.

| | -எம் | -ஏம் |
|---|---|---|
| பதி | - | 4 |
| ஐங் | 8 | 22 |
| அகம் | 3 | 17 |
| நற் | 18 | 1 |
| குறு | 3 | 16 |
| புறம் | 7 | 41 |
| பத்து | - | 7 |
| பரி | 2 | 16 |
| கலி | - | 49 |
| குறள் | - | 18 |
| சிலம்பு | - | 14 |
| மணி | - | 9 |

-ஏம் விகுதியின் பகிர்விலும் வேற்றுமை உண்டு. முன்பழந்தமிழில் எதிர்மறையில் இது அதிகமாக வர, பின்பழந்தமிழில் கால இடைநிலைகளுக்குப் பின்னர் அதிக எண்ணிக்கையில் வரக் காண்கிறோம்.

| | எதிர்மறை (-ϕ-) | காலஇடைநிலை |
|---|---|---|
| பதி | – | 2 |
| ஐங் | 6 | 10 |
| அகம் | 6 | 8 |
| நற் | 1 | 3 |
| குறு | 6 | 3 |
| புறம் | 8 | 6 |
| பத்து | 4 | 1 |

| | | |
|---|---|---|
| பரி | - | 14 |
| கலி | 10 | 23 |
| குறள் | 3 | 12 |
| சிலம்பு | 6 | 8 |
| மணி | – | 6 |

3.27. 2. -கும், -றும், -ஓம்

-கும் விகுதியும் முன்பழந்தமிழ் நூல்களிலேயே அதிகமாக உள்ளது. கலி, சிலம்பு ஒழிந்த பிற பின்பழந்தமிழ் நூல்களில் இது காணப்படவில்லை. குறுந்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களிலும் இவ்விகுதி இல்லை. இதைப் போன்றே -றும் விகுதியும் கலித்தொகை தவிர்ந்த பிற பின்பழந்தமிழ் நூல்களில் வருவதில்லை, -ஓம் விகுதியும் முன்பழந்தமிழ் நூல்களில் மிக மிக அருகியே காணப்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் ஆராயின் 14 இடங்களே உள்ளன. இது சிலப்பதிகாரத்தில் 10 இடங்களிலும் மணிமேகலையில் இரண்டு இடங்களிலும் ஐங்குறுநூறில் ஒரு இடத்திலும் புறத்தில் ஒரு இடத்திலும் வருதல் காண்கிறோம். இந்நிலையில் இதனையும் பின்பழந்தமிழின் ஒரு கூறாகவே கருதவேண்டும்.

| | -கும் | -றும் | -ஓம் |
|---|---|---|---|
| பதி | 6 | 0 | 0 |
| ஐங் | 9 | 2 | 1 |
| அகம் | 3 | 2 | 0 |
| நற் | 1 | 6 | 0 |
| குறு | 0 | 6 | 0 |
| புறம் | 2 | 1 | 1 |
| பத்து | 0 | 0 | 0 |
| பரி | 0 | 0 | 0 |
| கலி | 2 | 1 | 0 |
| குறள் | 0 | 0 | 0 |
| சிலம்பு | 1 | 0 | 10 |
| மணி | 0 | 0 | 2 |

3. 28. முன்னிலை ஒருமை

3. 28. 1. —ஐ, —ஆய்

பழந்தமிழ் நூல்களில் -ஐ, -ஆய் ஆகிய விகுதிகள் முன்னிலை ஒருமை காட்டி நிற்கும். எனினும் முன்பழந்தமிழ் நூல்களில் -ஐ விகுதி அதிகமாகவும் -ஆய் குறைவாகவும் வருகின்றன. ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் (திருக்குறள், மணிமேகலை ஒழிந்த) -ஆய் அதிகமாகவும் -ஐ குறைவாகவும் வருகின்றன. புறநானூற்றில் 134 இடங்களில் -ஐ வர 23 இடங்களில் மட்டுமே -ஆய் வருகின்றது. குறுந்தொகையில் இவற்றின் விகிதாசாரம் 33 : 2 ஆக உள்ளது. பதிற்றுப்பத்தில் 66 இடங்களில் -ஐ வர 3 இடங்களில் மட்டுமே -ஆய் வந்துள்ளது. ஆனால் கலித்தொகையிலோ -ஆய் 160 இடங்களில் வர -ஐ 97 இடங்களில் மாத்திரமே (3 : 2) உள்ளது. இப்பண்பே இடைக்காலத் தமிழிலும் தொடர்ந்து பின்னர் -ஐ விகுதி வழக்கற்றுவிடக் காணலாம்.

| | -ஐ | -ஆய் |
|---|---|---|
| பதி | 66 | 3 |
| ஐங் | 42 | 13 |
| அகம் | 96 | 32 |
| நற் | 61 | 32 |
| குறு | 33 | 2 |
| புறம் | 134 | 23 |
| பத்து | 12 | 2 |
| பரி | 9 | 10 |
| கலி | 97 | 160 |
| குறள் | 7 | 6 |
| சிலம்பு | 15 | 63 |
| மணி | 66 | 35 |

—ஆய் விகுதியின் பகிர்விலும் வேற்றுமை உண்டு. முன்பழந் தமிழ் நூல்களில் இது எதிர்மறையில் அதிகமாக வர பின்பழந் தமிழ் நூல்களில் காலச்சொற்களில் கூடுதலாக வரக் காண்கிறோம். புறநானூற்றில் — ஆய் இருபது இடங்களில் எதிர்மறையில் வர மூன்று இடங்களிலேயே கால இடைநிலைகளை அடுத்து வருகிறது. பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை,

குறுந்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் இது எதிர்மறையில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் கலித்தொகையில் 36 இடங்களில் எதிர்மறையில் வர 104 இடங்களில் கால இடைநிலைகளை அடுத்து வந்துள்ளது. இதே நிலையைத்தான் பிற பின்பழந் தமிழ் இலக்கியங்களிலும் காண்கின்றோம்.

- ஆய்

| | எதிர்மறை - ф - | கால இடைநிலை |
|---|---|---|
| பதி | 3 | — |
| ஐங் | 12 | — |
| அகம் | 32 | — |
| நற் | 32 | — |
| குறு | 2 | — |
| புறம் | 20 | 3 |
| பத்து | 1 | — |
| பரி | 1 | 4 |
| கலி | 36 | 104 |
| குறள் | 3 | 2 |
| சிலம்பு | 13 | 39 |
| மணி | 13 | 19 |

### 3. 29. முன்னிலைப் பன்மை

### 3. 29. 1. —இர், —ஈர்

முன்னிலைப் பன்மை விகுதிகளாகிய -இர், -ஈர் ஆகிய இரு விகுதிகளும் பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. இவற்றுள் -இர் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் அதிகமாக வர -ஈர் பின் பழந்தமிழ் நூல்களில் கூடுதலாக வருதல் காண்கிறோம். புறநானூற்றில் -இர் 16 இடங்களில் வர -ஈர் 9 இடங்களில் மட்டுமே வருகின்றது. இதே நிலையைத்தான் பிற முன்பழந்தமிழ் நூல்களிலும் காண்கிறோம்.

ஆனால் கலித்தொகையில் -இர் 21 இடங்களிலும் -ஈர் 40 இடங்களிலும் வருதல் காணத்தக்கது. இதே நிலையைத்தான் பிற இலக்கியங்களிலும் (சிலம்பு தவிர) காண்கிறோம்.

| | -இர் | -ஈர் |
|---|---|---|
| பதி | 2 | — |
| ஐங் | 1 | — |
| அகம் | 22 | 5 |
| நற் | 11 | 9 |
| குறு | 8 | 3 |
| புறம் | 16 | 9 |
| பத்து | 54 | 4 |
| பரி | 1 | 1 |
| கலி | 21 | 40 |
| குறள் | 2 | 4 |
| சிலம்பு | 14 | 11 |
| மணி | 4 | 14 |

### 3. 30. ஆண்பால்

#### 3.30.1. -அன், -ஆன்

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் வைத்து ஆராயும்போது முன்பழந்தமிழ் நூல்களில் -அன் விகுதியும் பின்பழந்தமிழ் நூல்களில் (மணிமேகலை, சிலம்பு நீங்கலாக) -ஆன் விகுதியும் பெருவரவிற்றாக வருவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாகப் புறத்தில் -அன் 225 இடங்களில் வர -ஆன் 52 இடங்களில் மட்டுமே வருகின்றது. குறுந்தொகையில் -அன் 83 இடங்களிலும் -ஆன் 12 இடங்களிலும் வருகின்றது. அகத்தில் இவை முறையே 150 : 25 என உள்ளன.

ஆனால் பின்பழந்தமிழ் நூல்களில் இந்நிலை மாறிக் காணப்படுகின்றது. கலித்தொகையில் -அன் 142 இடங்களிலும் -ஆன் 208 இடங்களிலும் வருதல் இப்பண்பை உணர்த்தும். இந்நிலை முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ் பண்பைக் காட்டி நிற்கும்.

| | -அன் | -ஆன் |
|---|---|---|
| பதி | 12 | 6 |
| ஐங் | 110 | 13 |
| அகம் | 150 | 25 |

| | | |
|---|---|---|
| நற் | 58 | 11 |
| குறு | 83 | 12 |
| புறம் | 225 | 52 |
| பத்து | 66 | 8 |
| பரி | 22 | 21 |
| கலி | 142 | 208 |
| குறள் | 75 | 178 |
| சிலம்பு | 183 | 86 |
| மணி | 156 | 32 |

பிற நீட்டுயிர் விகுதிகளைப் போன்றே -ஆன் விகுதியும் முன் பழந்தமிழ் நூல்களில் எதிர்மறையிலேயே அதிகமாக வருகிறது. ஆனால் பின்பழந்தமிழில் கால ஒட்டுக்களுக்குப் பின்னர் அதிகமாக வருவது இவ்விரு காலப்பகுதிகளுக்கிடையே உள்ள வேறு பாட்டைச் சுட்டிக் காட்டும். புறநானூற்றில் எதிர்மறையில் 43 இடங்களில் வர கால இடைநிலைக்குப் பின் 6 இடத்தில் மட்டும் வருகின்றது. ஆனால் கலித்தொகையிலோ எதிர்மறையில் 34 இடங்களிலும் காலத்தில் 126 இடங்களிலும் வந்துள்ளது.

| | எதிர்மறை (-ф-) | காலஇடைநிலை |
|---|---|---|
| பதி | 3 | 3 |
| ஐங் | 8 | 3 |
| அகம் | 20 | – |
| நற் | 10 | 1 |
| குறு | 10 | 1 |
| புறம் | 43 | 6 |
| பத்து | 8 | - |
| பரி | 3 | 17 |
| கலி | 34 | 126 |
| குறள் | 17 | 77 |
| சிலம்பு | 12 | 61 |
| மணி | 15 | 8 |

### 3. 30. 2. -அன்

-அன் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் இறந்த காலத்திலும் இறப்பில் காலத்திலும் வர, பின்பழந்தமிழ் நூல்களில் (மணி மேகலை தவிர) இறப்பில்கால இடைநிலைகளுக்குப் பின்னர் அதிகம் வராமை காணலாம்.

| | -அன் | |
|---|---|---|
| | இறந்தகாலம் | இறப்பில்காலம் |
| பதி | - | - |
| ஐங் | 34 | 4 |
| அகம் | 26 | 4 |
| நற் | 20 | 2 |
| குறு | 14 | 2 |
| புறம் | 67 | 27 |
| பத்து | 5 | 7 |
| பரி | - | - |
| கலி | 27 | 3 |
| குறள் | - | - |
| சிலம்பு | 53 | 2 |
| மணி | 76 | - |

### 3.30.3.-ஒன்

பழந்தமிழ் நூல்களில் காணக்கிடக்கும் ஆண்பால் விகுதி களில்-ஒன் விகுதியும் ஒன்றாகும். இதைப் போன்றே -ஆன் விகுதியும் நெட்டுயிர் கொண்ட ஒன்றாகும். கால இடைநிலை களை மட்டும் வைத்து நோக்கின் -ஆன் விகுதியைவிட -ஒன் விகுதியே முன்பழந்தமிழில் அதிகமாக வரப் பின்பழந்தமிழ் நூல் களில் -ஆன் விகுதி வருதல் (சிலம்பு, மணி நீங்க) அதிகமாக வரக் காணலாம். இடைக்காலத்தமிழில் -ஒன் விகுதி வழக்கற்றுவிடக் காண்கிறோம்.

| | காலஇடைநிலை | |
|---|---|---|
| | -ஆன் | -ஒன் |
| பதி | 3 | 2 |
| ஐங் | 3 | 9 |

| | | |
|---|---|---|
| அகம் | - | 23 |
| நற் | 1 | 9 |
| குறு | 1 | 4 |
| புறம் | 6 | 48 |
| பத்து | – | 5 |
| பரி | 17 | 11 |
| கலி | 126 | - |
| குறள் | 77 | - |
| சிலம்பு | 61 | 87 |
| மணி | 8 | 102 |

பண்டைத்தமிழில் -ஒன் விகுதி வினைமுற்றுக்களில் பெரும்பான்மையாகப் பயின்றுவர பின்பழந்தமிழ் நூல்களில் வினையாலணையும் பெயராகவே அதிகமாக வரக் காணலாம். பரிபாடலில் 4 இடங்களிலும் சிலம்பில் இரண்டு இடங்களிலும் இவ்விகுதி வினைமுற்றாக வரக்காண்கிறோம். ஆனால் கலித்தொகை, குறள், மணி ஆகிய நூல்களில் இவ்விகுதி வினைமுற்றில் வரவில்லை.

| -ஒன் | வினைமுற்று | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| பதி | 3 | 2 |
| ஐங் | 2 | 11 |
| அகம் | 8 | 32 |
| நற் | 6 | 5 |
| குறு | 3 | 7 |
| புறம் | 23 | 79 |
| பத்து | 1 | 22 |
| பரி | 4 | 3 |
| கலி | – | 16 |
| குறள் | – | - |
| சிலம்பு | 2 | 140 |
| மணி | – | 139 |

### 3.31. பெண்பால்

#### 3.31.1. அள், -ஆள்

பண்டைத் தமிழில் -அள், -ஆள் போன்ற விகுதிகள் பெண் பால் காட்டுகின்றன. இவற்றுள் -அள், -ஆள் ஆகிய இரு விகுதிகளையும் எடுத்துக்கொண்டால் -அள் முன்பழந்தமிழ் நூல் களில் பெரும்பான்மையாகவும் -ஆள் பின்பழந்தமிழ் நூல்களில் (மணிமேகலை ஒழிந்த) அதிகமாகவும் வரக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, புறநானூற்றில் -அள் 42 இடங்களில் வர -ஆள் 14 இடங்களில் மட்டுமே காணப்படுகிறது. ஆனால் குறளில் -அள் 12 இடங்களிலும் -ஆள் 42 இடங்களிலும் வந்துள்ளன. இதே நிலையைப் பிற நூல்களிலும் காணலாம்.

| | -அள் | -ஆள் |
|---|---|---|
| பதி | 8 | 1 |
| ஐங் | 75 | 5 |
| அகம் | 159 | 39 |
| நற் | 104 | 22 |
| குறு | 69 | 9 |
| புறம் | 42 | 14 |
| பத்து | 5 | 2 |
| பரி | 12 | 39 |
| கலி | 95 | 142 |
| குறள் | 12 | 42 |
| சிலம்பு | 87 | 144 |
| மணி | 98 | 60 |

பிற நீட்டுயிர் விகுதிகளைப் போன்றே -ஆள் விகுதியும் மு பழந்தமிழ் நூல்களில் எதிர்மறையில் அதிகமாக வரப் பின்பழந் தமிழ் நூல்களில் கால இடைநிலைக்குப் பின் அதிகமாக வருகிறது. புறநானூற்றில் - ஆள் விகுதி எதிர்மறையில் மட்டுமே வருகிறது. இதே நிலையைத்தான் அகநானூற்றிலும் பதிற்றுப் பத்திலும் பத்துப்பாட்டிலும் காண்கிறோம். ஆனால் கலித்தொகை போன்ற நூல்களிலோ கால இடைநிலைக்குப் பின்னரே அதிக மாக வருகிறது.

-ஆள்

| | கால இடைநிலை | எதிர்மறை (-0-) |
|---|---|---|
| பதி | - | 1 |
| ஐங் | 1 | 4 |
| அகம் | – | 38 |
| நற் | 1 | 19 |
| குறு | 2 | 7 |
| புறம் | - | 14 |
| பத்து | – | 2 |
| பரி | 24 | 6 |
| கலி | 86 | 16 |
| குறள் | 17 | 3 |
| சிலம்பு | 89 | 19 |
| மணி | 12 | 10 |

3.32. பலர்பால்

3.32.1. -அர், -ஆர்

பலர்பால் காட்டும் -அர், -ஆர், -ஓர் ஆகிய விகுதிகளை எடுத்துக்கொண்டால் –அர் விகுதி முன்பழந்தமிழில் பெரும் பான்மையாகவும் –ஆர் விகுதி பின்பழந்தமிழில் (சிலம்பு, மணி மேகலை ஒழிந்த) அதிகமாகவும் பயின்று வரக் காணலாம். எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் -அர் விகுதி 301 இடங் களிலும் -ஆர் விகுதி 57 இடங்களிலும் வருகின்றன. ஆனால் குறளில் -அர் விகுதி 263 இடங்களிலும் -ஆர் விகுதி 504 இடங்களிலும் வரக் காண்கிறோம்.

| | -அர் | -ஆர் |
|---|---|---|
| பதி | 150 | 31 |
| ஐங் | 57 | 20 |
| அகம் | 332 | 52 |
| நற் | 107 | 27 |
| குறு | 124 | 69 |
| புறம் | 301 | 57 |
| பத்து | 142 | 4 |

| | | |
|---|---|---|
| பரி | 100 | 85 |
| கலி | 180 | 252 |
| குறள் | 263 | 504 |
| சிலம்பு | 219 | 107 |
| மணி | 84 | 54 |

-ஆர் விகுதி முன்பழந்தமிழ் நூல்களில் எதிர்மறைக்குப் பின்னரும் பின்பழந்தமிழ் நூல்களில் கால இடைநிலைக்குப் பின்னரும் அதிகமாக வரக் காணலாம். புறநானூற்றில் எதிர்மறையும் கால இடைநிலையும் 47:5 என்ற விகிதத்தில் வரக் குறளில் 49:300 என்ற விகிதத்தில் வரக்காணலாம்.

-ஆர்

| | கால இடைநிலை | -ெ- எதிர்மறை |
|---|---|---|
| பதி | 3 | 23 |
| ஐங் | – | 20 |
| அகம் | 5 | 47 |
| நற் | 1 | 25 |
| குறு | 6 | 59 |
| புறம் | 5 | 47 |
| பத்து | – | 4 |
| பரி | 54 | 1 |
| கலி | 136 | 29 |
| குறள் | 300 | 49 |
| சிலம்பு | 54 | 27 |
| மணி | 8 | 25 |

-ஆர் விகுதி, வினைமுற்றுக்கள், வினையாலணையும் பெயர்கள் இரண்டிலும் காணப்படினும் முன்பழந்தமிழ் நூல்களில் முற்று வினைச்சொற்களே அதிகமாகக் காணப்படுகின்றன. பின்பழந்தமிழ் நூல்களில் வினையாலணையும் பெயர்களே அதிகமாக உள்ளன. ஐங்குறுநூற்றில் 19 வினைமுற்றுக்களிலும் ஒரு வினையாலணையும் பெயரிலும் -ஆர் விகுதி காணப்பட குறளில் 51 வினைமுற்றுக்களிலும் 453 வினையாலணையும் பெயர்களிலும் வரக் காண்கிறோம்.

-ஆர்

| | வினைமுற்று | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| பதி | 15 | 16 |
| ஐங் | 19 | 1 |
| அகம் | 31 | 21 |
| நற் | 26 | 1 |
| குறு | 48 | 21 |
| புறம் | 30 | 27 |
| பத்து | 3 | 1 |
| பரி | 36 | 49 |
| கலி | 38 | 214 |
| குறள் | 51 | 453 |
| சிலம்பு | 39 | 68 |
| மணி | 8 | 46 |

முன்பழந்தமிழ் நூல்களில் -ஆர் விகுதியை விட -ஓர் விகுதி அதிகமாகக் காணப்பட, பின்பழந்தமிழ் நூல்களில் (சிலம்பு, மணிமேகலை தவிர்த்து), -ஆர் விகுதியே பெரும்பான்மையாக வரக் காணலாம்.

| | -ஆர் | -ஓர் |
|---|---|---|
| பதி | 31 | 47 |
| ஐங் | 20 | 46 |
| அகம் | 52 | 155 |
| நற் | 27 | 74 |
| குறு | 69 | 74 |
| புறம் | 57 | 226 |
| பத்து | 4 | 79 |
| பரி | 85 | 36 |
| கலி | 252 | 31 |
| குறள் | 504 | 7 |
| சிலம்பு | 107 | 153 |
| மணி | 54 | 220 |

4. தனிநூல்களின் கூறுகளா?

பழந்தமிழ் நூல்களின் மொழிக்கூறுகளை ஆராய்ந்த வையாபுரிப்பிள்ளை, கந்தசாமி, வ. சுப. மாணிக்கம், சாரங்கபாணி போன்ற அறிஞர்கள் பலவேறு மொழிக்கூறுகளைக் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் தனித்தனி நூல்களின் மொழிக்கூறுகளை ஆராய்ந்த நிலையில் அந்தந்த நூல்களில் இக்கூறுகள் வருவதாகக் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர். இக்கூறுகளில் பல பிற பின்பழந்தமிழ் நூல்களிலும் காணக் கிடக்கின்றன. எடுத்துக்காட்டாக பிள்ளை குறிப்பிடும் அல்லால் என்ற வடிவம் குறளில் மட்டுமின்றி கலித்தொகையிலும் காணப்படுகிறது.

-கள் விகுதி இரட்டைப் பன்மையில் கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் உயர்திணையில் பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் காணப்படுகிறது.

-மல் ஈற்று எதிர்மறை வினையெச்சமும் எல்லாப் பின்பழந்தமிழ் நூல்களிலும் உள்ளது.

இதைப்போன்றே பலவேறு நிபந்தனை எச்சங்களும் எல்லாப் பின்பழந்தமிழ் நூல்களிலும் வருகின்றன.

இதே நிலையைத்தான் 'சிலப்பதிகார மொழிக்கூறுகள்' என்ற தலைப்பில் வ.சுப. மாணிக்கம் காட்டும் மொழிக்கூறுகளிலும் காண்கிறோம். -கின்று, செய்யாத வாய்பாட்டுப் பெயரெச்சம், செய்கேன் வாய்பாட்டு தன்மை ஒருமை வினைமுற்று, நான், இந்த, உன், தான், தன் போன்ற சொல்லாட்சிகள் சிலப்பதிகாரத்தில் மட்டுமின்றி எல்லாப் பின்பழந்தமிழ் நூல்களில் சிலவும், ஓரிரு பின்பழந்தமிழ் நூல்களில் பிறவும் காணக்கிடக்கின்றன.

இதுபோன்றே கந்தசாமி குறிப்பிடும் மொழிக்கூறுகளும் உள்ளன. அங்கு, இங்கு, தான், தன் என்ற சொல்லாட்சி, -கள் விகுதி, நிகழ்கால இடைநிலை போன்றவை பிற பின்பழந்தமிழ் நூல்களிலும் உள்ளன. இந்நிலையில் இவர்கள் குறிப்பிடும் பலவேறு கூறுகளைக் குறிப்பிட்ட ஒரு நூலின் தனிக்கூறுகளாக

கருதுவதைவிட பின்பழந்தமிழ் நூல்களின் கூறுகளாகக் கருதுவதே பொருந்தும்.

5. பின்பழந்தமிழ்க் கூறுகளா?

மேற்கூறிய அறிஞர்கள் குறிப்பிடும் இன்னும் சில கூறுகளோ முன்பழந்தமிழ் நூல்களிலும் காணப்படுவதால் அவை பின்பழந்தமிழ்க் கூறுகளாக இங்குக் கருதப்படவில்லை. எடுத்துக்காட்டாக -அன் விகுதியைக் குறிப்பிடலாம். தொல்காப்பியர் இவ்விகுதி பற்றிக் குறிப்பிடாவிடினும் பின்பழந்தமிழ் நூல்களாகிய பரிபாடல், கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை, (பரி (0) கலி (7) குறள் (7) சிலம்பு (11) மணி (15) ) ஆகிய நூல்களில் காணப்படுவது மட்டுமின்றி சங்க இலக்கியங்கள் அனைத்திலுமே (பதி (1) ஐங் (1) அகம் (8) நற் (19) குறு (5) புறம் (13) பத்து (0) வரக் காண்கிறோம். மணிமேகலையில் 15 இடங்களில் மட்டுமே காணப்பட நற்றிணையில் 19 இடங்களில் காணப்படுவது வரவு எண்ணிக்கையின் அடிப்படையிலும்கூட இதை ஒரு பின்பழந்தமிழ்க்கூறாகக் கருதமுடியாத நிலையைத் தோற்றுவிக்கிறது.

| | | |
|---|---|---|
| இலன் | பதி | 77-7 |
| தொடங்கினன் | ஐங் | 428-4 |
| அமைகுவன் | அகம் | 74-14 |
| மறுப்பன் | நற் | 70-11 |
| கண்டனன் | குறு | 311-4 |
| அணைத்தனன் | புறம் | 255-2 |
| நோக்குவன் | கலி | 147-27 |
| இரப்பன் | குறள் | 1067 |
| எழுந்தனன் | சிலம்பு | 16-83 |
| ஓதினன் | மணி | 25-18 |

இதைப் போன்றே மணிமேகலையின் காலத்தை ஆராயும் கந்தசாமி (1978:5-16) ஏவல்வினையில் காணப்படும் "கொண்ம்" போன்ற சொற்கள் பிந்தியது எனக் கூறுவார். அவர் குறிப்பிடுவதுபோல இச் சொற்கள் பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி ஆகியநூல்களில் மட்டுமின்றி பதிற்றுப்பத்து (1), நற்றிணை (1),

புறம் (5) பத்து (2), பரி (1), சிலம்பு (8) ஆகிய நூல்களிலும் காணப்படுகின்றன. புறநானூற்றில் மட்டுமே 5 இடங்களில் வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

| | | |
|---|---|---|
| தம் | பதி | 85-4 |
| சென்ம் | நற் | 71-3 |
| கொண்ம் | புறம் | 152-29 |
| வம் | பத்து | 2-101 |
| கொண்ம் | சிலம்பு | 9 73 |

'ஆளன்', 'ஆட்டி', 'ஆளர்' ஆகிய விகுதிகளும் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, பத்துப்பாட்டு பரிபாடல், கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் எல்லாம் காணப்படுகின்றன.

'ஆளன்' என்ற விகுதி, அகம், நற், குறு, புறம், பரி, கலி, குறள், சிலம்பு ஆகிய நூல்களில் முறையே 6, 6, 2, 8, 3 1, 2, 13, இடங்களிலும் மணிமேகலையில் 12 இடங்களிலும் வந்துள்ளது. இதைப் போன்றே 'ஆட்டி' என்ற விகுதியும் (ஐங் 1, அகம் 3, நற் 4, குறு 1, கலி 1, சிலம்பு 19, மணி 14) 'ஆளர்' என்ற விகுதியும் (ஐங் 3, அகம் 10, நற் 1, புறம் 8, பத்து 4, குறள் 1, சிலம்பு 27, மணி 9) பிற நூல்களில் வந்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

-கள் விகுதி உயர்திணையில் வருவது பற்றியும் மேலே குறிப்பிடப்பட்டது.

இவற்றைப் போன்றே துணைவினைகளும் மணிமேகலையில் மட்டுமின்றி பிற இலக்கியங்களிலும் காணக்கிடக்கின்றன.

மயங்கல் கூடா தம் மரபினவே

என்ற தொல்காப்பியச் சூத்திரமே இதற்கு எடுத்துக் காட்டாக அமையலாம். கூடா என்பது ஒரு துணை வினையே. மேலும்

| | |
|---|---|
| வளர்ந்திட்ட | நற் 344-1 |
| பிளந்திட்ட | நற் 107-1 |
| அணிந்திடு | நற் 395-7 |
| பார்த்திருக்கும் | குறு 283-7 |
| கிளைத்திட்ட | புறம் 325-4 |

போன்ற பலவேறு எடுத்துக்காட்டுகள் முன்பழந்தமிழ் நூல்களிலும் துணைவினைகள் வந்துள்ளமையைக் காட்டும். எனினும் காலம் செல்லச் செல்ல துணைவினைகள் தமிழில் பெருகி வந்தமை கண் கூடு.

'எல்லாம்' என்ற பதிலிடு பெயர் உயர்திணைச் சொற்களுடன் வருவதில்லையென்றும் ஆனால் மணிமேகலையில் வருகின்றது என்றும் கந்தசாமி குறிப்பிட்டு,

| | |
|---|---|
| மக்கட்கெல்லாம் | 9-24 |
| வாழ்வோர்க்கெல்லாம் | 11-95 |

போன்ற உதாரணங்களைத் தருவார். ஆனால் பல சங்க இலக்கியங்களிலும் இப்பண்பு காணப்படுகிறது. அகம் (1), குறு (1), புறம் (5), பத்துப்பாட்டு (2), கலி (6), குறள் (6), சிலம்பு (10) ஆகிய நூல்களிலும் இந்நிலை உள்ளது.[1]

| | |
|---|---|
| உள்ளோர்க்கெல்லாம் | அகம் 258-13 |
| பாணர் எல்லாம் | குறு 127-5 |
| முன்னோர் எல்லாம் | புறம் 43-13 |
| இரவலர்க்கெல்லாம் | பத்து 6-751 |
| கண்டோரெல்லாம் | பத்து 10-495 |
| பெண்டிரெல்லாம் | கலி 97-28 |

[1]புறம் 42-21, 63-5, 285-13. 372-10
கலி 101-50, 107-34, 111-5, 140-1
குறள் 47, 142, 238, 325, 1032
சிலம்பு 11-5, 15-161, 190, 23-87, 25-170, 185, 26-7, 28, 184
மணி 6-29, 12-72, 13-40, 18-6 22-6, 25-40, 28-132, 228

| | |
|---|---|
| வாழ்வார்கட்கெல்லாம் | கலி 145-17 |
| இரப்பாரை எல்லாம் | குறள் 1067 |
| ஊடினீர் எல்லாம் | சிலம்பு 8-வெ. 2-1 |

போன்றவை இப்பண்பைக் காட்டும்.

6. முடிவுரை

எனவே இதுகாறும் கூறியவற்றால் முன்பழந்தமிழில் இல்லாத பல புதிய மொழிக்கூறுகள் பின்பழந்தமிழில் தோன்றி நிலை பெற்றன என்பதும், மேலும் சில கூறுகள் முன்பழந்தமிழிலேயே தோன்றிவிட்டாலும் பின்பழந்தமிழிலேயே பெருமளவு எண்ணிக்கையில் வரத் தொடங்கிப் பின்னர் நிலைபெற்றன என்பதும், இன்னும் சில கூறுகளோ முன்பழந்தமிழில் வழக்கிலிருந்து பின் பழந்தமிழில் மறைந்துவிட்டன அல்லது வரவு எண்ணிக்கையில் மிகக் குறைந்து பின்னர் முற்றிலுமாக மறைந்துவிட்டன என்பதும் புலனாகும். இந்நிலையில்தான் மொழிக் கூறுகளைச் சிலப்பதிகாரக் கூறுகள் என்றோ, மணிமேகலைக் கூறுகள் என்றோ கருதுவதைக் காட்டிலும் மேற்கூறிய வண்ணம் அவற்றின் தோற்றம், வரவு எண்ணிக்கை மறைவு ஆகிய எல்லாவற்றின் அடிப்படையிலும் நோக்கி முன்பழந்தமிழ்க் கூறுகள், பின்பழந்தமிழ்க் கூறுகள் எனக் கருதுவதும் அதன் அடிப்படையில் பழந்தமிழான சங்கத் தமிழையும் சங்கம் மருவிய தமிழையும் முன்பழந்தமிழ், பின்பழந் தமிழ் எனப் பகுத்துக் காணுவதும் சிறப்பாகும்.

## துணை நூல்கள்

அகத்தியலிங்கம், ச. 1978, 'தன்மைப் பன்மை' மொழியியல் தொகுதி 2, எண் 2 அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர்.

—— 979. 'சங்கத்தமிழில் தன்மை ஒருமை' மொழியியல் தொகுதி எண் 1, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1981. 'சங்கத்தமிழில் பலர் பால்' மொழியியல் தொகுதி 4. எண் 3, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர்.

——— 1983. சிலப்பதிகாரமும் பின்பழந்தமிழும், ஆய்வுக் கோவை-16, தொகுதி 4. அண்ணாமலைநகர்.

அருணாசலம், ப. 1968. குறளின் செய்தி, பாரி நிலையம் பிராட்வே, சென்னை.

இராசமாணிக்கம், மா. 1963. பாரிநிலையம், பிராட்வே, சென்னை.

இலட்சுமணசாமி, கொ. 1979. 'திருக்குறளும் சங்க இலக்கியங் களும்', திருக்குறட் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

கந்தசாமி, சோ. ந. 1972, பரிபாடலின் காலம், அபிராமி பதிப் பகம், அண்ணாமலைநகர்.

சாரங்கபாணி, இரா. 1977. பரிபாடல் திறன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம். (முதல் பதிப்பு 1972)

மாணிக்கம், வ. சுப. 1976. 'சிலப்பதிகார மொழிக்கூறுகள்', சிலப்பதிகாரச் சிந்தனைகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

மீனாட்சிசுந்தரன், தெ. பொ. 1977. தமிழ்மொழி வரலாறு, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை.

வையாபுரிப்பிள்ளை, எஸ். 1952. தமிழ்ச்சுடர் மணிகள், பாரி நிலையம், பிராட்வே, சென்னை. (முதல் பதிப்பு 1949)

1952. இலக்கிய தீபம், பாரிநிலையம், பிராட்வே, சென்னை.

——— (n.d) காவியகாலம், பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

Agesthialingom, S. 1978. *A Grammar of Old Tamil with Special Reference to Patiṟṟuppattu*, Annamalai University, Annamalainagar.

Iravatham Mahadevan, 1969. 'Historical Tamil Brahmi Inscriptions' *Proceedings of the First International Conference* Seminar of Tamil Studies, Kualalampur.

Kandasamy, S. N. 1978. *Buddhism as Expounded in Manimekalai*, Annamalai University, Annamalainagar.

Meenakshisundaran, T. P. 1965. *A History of Tamil Language* Deccan College, Poona.

Ramaswami Ayyar, L. V. 1938. The Morphology of old Tamil verbs' *Anthropos*, 33, Wien.

## ஓவிய எழுத்துக்கள்

நாகரிகம் வாய்ந்த மொழிகளுள் சீன மொழியும், எகிப்து மொழியும் எழுத்துக்கள் தோன்றிய வரலாற்றை விளக்க வல்லன வாய்ப் பழைய நிலையில் உள்ளன. சீன மொழியில் மலை என்னும் பொருளைக் குறிக்க, மலையின் உருவமே எழுத்தாக எழுதப்படுகின்றது. மனிதனைக் குறிப்பதற்கும் இவ்வாறே ஓர் எழுத்து அமைந்துள்ளது. நீர் வேட்கையைக் குறிக்க நாக்குப் போல் வளைந்த கோடும், அதன் மேல் நீரைக் குறிப்பிட இரண்டு புள்ளியும் எழுதப்படுகின்றன. 'கேள்' என்ற வினையைக் குறிக்க, ஒரு கதவின் அருகே அமைந்த காது எழுதப்படுகின்றது.

நட்பைக் குறிக்க, இரண்டு கைகள் இணைத்து எழுதப் படுகின்றன. கண்ணீரைக் குறிக்கக் கண்ணும் நீரும் சேர்த்து எழுதப்படுகின்றன. ஞாயிறும் திங்களும் எழுதப்பட்ட உருவம் ஒளியைக் குறிக்கும். வாயும் பறவையும் எழுதப்பட்ட உருவம் பாட்டைக் குறிக்கும். மலையும் மனிதனும் போல் எழுதப்பட்டது ஆசிரமம் எனக் கொள்ளப்பட்டது. மங்கையும் கையும் துடைப் பமும் போல் எழுதப்பட்ட எழுத்து வீட்டுக்காரி என்பதாகும். இடப்பக்கமாகப் பறக்கும் கொடி 'இடம்' என்ற பொருளுடைய தாயிற்று. வலப்பக்கமாகப் பறக்கும் கொடி 'வலம்' என்பதை உணர்த்தியது.

இதுபோன்று சுமார் நாற்பதினாயிரம் அடையாள உரு வங்கள் எழுத்துக்களாக இருந்தன. சீன மொழியில் பேசப்படும் சொற்களின் தொகை, மற்ற மொழிகளைவிடக் குறைவு; ஆனால் எழுதப்படும் எழுத்துக்களின் தொகை மற்ற மொழிகளை விட அதிகம், சீன எழுத்துக்களைப் படிக்கக் கற்றல் அவ்வளவு அருமை அன்று; எழுதக்கற்றல் அருமையாம்; எழுத்துக்களை நன்கு பிழையின்றி எழுதுவதற்கு எட்டாண்டுகள் வேண்டுமாம். ஏனெனில் எழுத்துக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் கருத்தையும் உணர்த்த வெவ்வேறு எழுத்துக்கள் வளரவே சீனமொழி ஏறக்குறைய நாற்பதினாயிரம் எழுத்துக்களை உடையதாக ஒருகாலத்தில் இருந்ததாம்.

டாக்டர் மு. வரதராசனர்
(1975) மொழிவரலாறு,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

மொழியியல் 6. 2. (1982)

# தேம்பாவணியில் செயவென் எச்சம்

பெ. மாதையன்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முன்னுரை

ஆய்வு என்பது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு நடுநிலை நெஞ்சுடன் செய்யவேண்டிய அரும்பணி. உண்மை காணவேண்டும் எனும் உயர்கொள்கையை அடிப்படையாகக் கொண்டதே ஆய்வாகும். காய்தல், உவத்தல் அகற்றி ஆய்தல் எனும் அடிப்படையில் வீரமாமுனிவர், தேம்பாவணி இலக்கியத் தின்கண் ஆண்டுள்ள செயவென் எச்ச வடிவங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்றைய தமிழிலக்கிய உலகில் வீரமாமுனிவரைக் குறித்து இருவகைக் கருத்துகள் நிலவுகின்றன. வீரமாமுனிவர் தமிழைக் கெடுத்துவிட்டார் என்கின்றனர் ஒருசாரார். இவர் எவ்வகை யிலும் தமிழைக் கெடுக்கவில்லை எனச் சொல்லி வாதிடுகின்றனர் பிறிதொரு சாரார். இவ்விரு சாராரும் உண்மைக்குப் புறம்பாய்ச் சென்று வீரமாமுனிவரை விமர்சிக்கின்றனரே அன்றி உண்மை

காண முயலவில்லை என்பதனையும் இவ்விரு சாராரும் ஆய்வியல் நெறிக்கு அப்பாற்பட்டுத் தத்தம் விருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டுக் கருத்துகளை வெளியிடுகின்றனர் என்பதனையும் இங்கே நினைவிற் கொள்ளவேண்டும். இவ்விரு சாராரையும் எவ்வகையிலும் சார்ந்து நில்லாது உண்மைகாணல் என்ற ஆய்வியல் அடிப்படையில் வீரமாமுனிவர் கையாண்டுள்ள செயவென் எச்சச் சொற்கள் இங்கே ஆராயப்பெறுகின்றன.

**செயவென் எச்ச விகுதி**

அ என்பதே செயவென் எச்ச விகுதி, இது க, க்க எனவும் நின்று செயற்படுகின்றது.

(எ–டு) செய் + அ > செய்ய

பார் + க்க > பார்க்க

போ + க > போக

தமிழின் பன்னிரண்டு வினையடிகளுள் ஒன்று முதல் எட்டு வரையுள்ள எட்டு வினையடிகளும் அ விகுதி பெற்றுச் செயவென் எச்சமாகச் செயற்படுகின்றன. எஞ்சிய வினையடிகள் நான்கும் க்க விகுதி பெற்றுச் செயற்படுகின்றன. போ, சா எனும் வினையடிகள் மட்டும் க விகுதி பெறுகின்றன. பின் வரும் அட்டவணை இதனை விளக்கும்.

| வினையடி எண் | செயவென் எச்சம் | வினையடி எண் | செயவென் எச்சம் |
|---|---|---|---|
| 1. | செய்ய | 7. | உண்ண |
| 2. | ஆள | 8. | தின்ன |
| 3. | கொல்ல | 9. | கேட்க |
| 4. | அறிய | 10. | கற்க |
| 5. | அஞ்ச | 11. | பார்க்க |
| 6. | விட | 12. | நடக்க |

இலக்கியத்தில் செயவென் எச்சம்

இலக்கியங்களைப் பொறுத்தவரையில் முதல் எட்டு வினை யடிகளும் இக்கால வழக்கினை ஒத்தே அகர விகுதி பெற்றுச் செயற்பட்டிருக்கின்றன. எஞ்சிய நான்கு வினையடிகளும் பெரும் பாலும் ப்ப விகுதி பெற்றுச் செயவென் எச்சமாகச் செயற் பட்டிருக்கின்றன. ஒரு சில இடங்களில் க்க விகுதி பெற்றும் செயற்பட்டிருக்கின்றன.

இலக்கிய மொழிநடையில் 9, 10, 11, 12 ஆம் வினையடி கள் ப்ப விகுதியுடன் செயவென் எச்சமாகக் கையாளப் பெற்ற மைக்குத் தலையாய காரணம் வியங்கோள் வினைமுற்றுகளே ஆகும். இந்நான்கு வினையடிகளின் வியங்கோள் வினைமுற்று வடிவங்களுக்கும் செயவென் எச்சச் சொற்களுக்கும் இடையே வடிவ வேறுபாடு காட்டவேண்டி 'ப்ப' விகுதி செயவென் எச்ச விகுதியாகவும் 'க்க' விகுதி வியங்கோள் வினைமுற்று விகுதியாக வும் கையாளப் பெற்றுள்ளது எனக் கருதுவது பொருந்தும்.

1. கொடுவரிப் புற்றம் வாய்ப்ப வாங்கி
(நற்றிணை 125 - 2)

2. வல்லே நெஞ்சம் வாக்க நின் வினையே
(நற்றிணை 126 - 12)

3. நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க
எனவேட் டோளே யாயே யாமே
ஐங்குறுநூறு 1 - 1,2)

4. மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
(ஐங்குறுநூறு 42 - 1)

5. பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க எனவாழ்த்தி
(சிலம்பு. 5 – 73,74)

6. சூன்முதிர் கொண்மூப் பெயல் வளம் சுரப்பக்
குடமலை பிறந்த கொழும்பில் தாரமொடு
(சிலம்பு. 10- 105, 106)

மேற்காட்டுகளில் 'ப்ப' விகுதி கொண்ட வாய்ப்ப, சிறப்ப, சுரப்ப என்பன மூன்றும் செயவென் எச்சங்கள் ; 'க்க' விகுதி கொண்ட வாய்க்க, சிறக்க, சுரக்க என்பன மூன்றும் வியங்கோள் வினை முற்றுகள். இவ்வியங்கோள் வினைமுற்று வடிவங்களையே செய வென் எச்சமாகவும் ஆளின் குழப்பம் வரும் என எண்ணிய தமிழிலக்கணப் புலவர்கள் 'ப்ப' விகுதியைச் செயவென் எச்ச விகுதியாகக் கையாண்டனர்.

இக்கால மொழிநடையில் இந்நான்கு வினையடிகளும் 'க்க' விகுதி பெற்றே செயவென் எச்சமாய்ச் செயற்படுகின்றன. 'ப்ப' விகுதி இக்கால வழக்கில் இல்லை. வியங்கோள் வினைமுற்று கள் இக்கால வழக்கில் அருகியே காணப்படுவதால் இவற்றி டையே குழப்பம் ஏதும் எழவழியில்லை.

(எ-டு) கல்வி கற்கப் பள்ளி சென்றான்
விழா நடக்க ஆவன செய்தான்
ஊர் பார்க்க நடந்து சென்றான்
அவன் கேட்க இவன் கொடுத்தான்

இலக்கியங்களில் கற்ப, நடப்ப, பார்ப்ப, கேட்ப எனக் கையாளப் பெற்ற செயவென் எச்சம் இக்கால வழக்கில் கற்க, நடக்க, பார்க்க, கேட்க என 'க்க' விகுதியுடன் மட்டுமே கையாளப் பெறுகின்றன.

**தேம்பாவணியில் செயவென் எச்சம்**

வீரமாமுனிவர் தேம்பாவணியில் 'ப்ப' விகுதி கொண்ட செய வென் எச்சங்களை அதிகமாகவும் 'க்க' விகுதி கொண்ட செய வென் எச்சங்களைக் குறைவாகவும் கையாண்டுள்ளார்.

(எ-டு) வியப்ப (வளன்சனித்தபடலம் 7 – 4)
பகைப்ப ( ,, 16 – 3)
நகைப்ப ( ,, 19 - 3)
இசைப்ப ( ,, 21 1)
உவப்ப ( ,, 54 - 1)
குளிப்ப (பாலமாட்சிப்படலம் 27 – 1)

| | | | |
|---|---|---|---|
| தீர்ப்ப | (திருமணப்படலம் | | 1 - 3) |
| சிதைப்ப | ( | ,, | 2 - 2) |
| மொய்ப்ப | ( | ,, | 3 - 2) |
| அளிப்ப | ( | ,, | 17 - 3, 24 - 3) |
| கேட்ப | ( | ,, | 22 - 3) |
| உவப்ப | ( | ,, | 24 - 2) |
| அளிப்ப | ( | ,, | 24 - 3) |
| தணிக்க | (ஈரறம் பொருந்துபடலம் | | 14 - 1) |
| துணிக்க | ( | ,, | 14 - 2) |
| கணிக்க | ( | ,, | 14 - 3) |
| அளக்க | ( | ,, | 37 - 1) |

வீரமாமுனிவர் பின்வரும் சொற்களையும் வினையெச்சமாகக் கையாண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| (எ-டு) | வருக | (வளன்சனித்தபடலம் 26) |
| | எழுக | (இளவல்மாட்சிப் படலம் 42) |
| | எஞ்சுக | (சோசுவன் வெற்றிப்படலம் 27) |
| | விஞ்சுக | (திருமணப்படலம் 6) |
| | அஞ்சுக | ( ,, 6) |
| | எஞ்சுக | ( ,, 6) |
| | ஆடுக | (சோசுவன் வெற்றிப்படலம் 147) |
| | எண்ணுக | (இளவல் மாட்சிப்படலம் 44) |

இவை வீரமாமுனிவரால் வினையெச்சச் சொற்களாக ஆளப் பெற்றுள்ளன. தமிழிலக்கண விதிப்படி இவை அனைத்தும் வியங்கோள் வினைமுற்றுகள் என்பதனை நினைவிற்கொள்ள வேண்டும். இவ்வாறு இத்தகைய வியங்கோள் வினைமுற்று வடிவங்களைத் தமிழ்ப்புலவர் எவரும் வினையெச்சமாகக் கையாள வில்லை என்பதும் வீராமாமுனிவர் ஒருவர் மட்டுமே இவ்வாறு வினையெச்சமாகக் கையாண்டுள்ளார் என்பதும் இங்கே திட்ட வட்டமாகக் குறிப்பிடத்தக்கது.

தமிழின் வியங்கோள் வினைமுற்றுச் சொற்களுக்கும் செயவென் எச்சச் சொற்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு வீரமாமுனிவர் இத்தகு வியங்கோள் வினைமுற்றுச் சொற்களைச் செயவென் எச்சமாகக் கையாண்டுள்ளார்.

தமிழின் பன்னிரு வினையடிகளுள் இறுதிநான்கு வினையடிகளுக்கும் உரிய கேட்க, கற்க, பார்க்க, நடக்க எனும் சொற்களை நாம் வியங்கோள் வினைமுற்றாகவும் செயவென் எச்சமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இலக்கியங்களில் 'ப்ப' விகுதியே மிகுதியும் வினையெச்ச விகுதியாக ஆளப்பெற்றுள்ளது. ஆனால் முதலெட்டு வினையடிகளும் இவ்வாறு செயற்படுவதில்லை. அவ்வெட்டு வினையடிகளுக்கும் உரிய செயவென் எச்ச வடிவங்களும் வியங்கோள் வினைமுற்று வடிவங்களும் வெவ்வேறானவை என்பது ஆய்வறிஞர் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்த கருத்து. இவை அகர விகுதி பெற்றுச் செயவென் எச்சமாகவும் ககர விகுதி பெற்று வியங்கோள் வினைமுற்றாகவும் செயற்படுகின்றன. இவற்றைப் பின்வரும் அட்டவணை விளக்கும்.

| வினையடி எண் | வினையடி | செயவென் எச்சம் | வியங்கோள் |
|---|---|---|---|
| 1. | செய் | செய்ய | செய்க |
| 2. | ஆள் | ஆள | ஆள்க |
| 3. | கொல் | கொல்ல | கொல்க |
| 4. | அறி | அறிய | அறிக |
| 5. | அஞ்சு | அஞ்ச | அஞ்சுக |
| 6. | விடு | விட | விடுக |
| 7. | உண் | உண்ண | உண்க |
| 8. | தின் | தின்ன | தின்க |

| வினையடி எண் | வினையடி | செயவென் எச்சம் | | வியங்கோள் |
|---|---|---|---|---|
| 9. | கேள் | கேட்ப | கேட்க | கேட்க |
| 10. | கல் | கற்ப | கற்க | கற்க |
| 11. | பார் | பார்ப்ப | பார்க்க | பார்க்க |
| 12. | நட | நடப்ப | நடக்க | நடக்க |

தமிழிலக்கியங்களில் இறுதி நான்கு வினையடிகளும் பெரும் பாலும் 'ப்ப' விகுதி பெற்றே செயவென் எச்சமாகச் செயற்பட்ட போதிலும் சிலவிடங்களில் 'க்க' விகுதி பெற்றும் செயவென் எச்சமாய்ச் செயற்பட்டுள்ளன.[1] இதனை நோக்கிய வீரமா முனிவர் தமிழின் வியங்கோள் வினைமுற்று வடிவங்களையும் வினையெச்சமாகக் கையாளலாம் போலும் எனத் தவறாக எண்ணி முதலெட்டு வினையடிகளுக்கும் உரிய வியங்கோள் வினைமுற்று வடிவங்களையும் சிலவிடங்களில் வினையெச்சமாகக் கையாண் டுள்ளார் என்று கருத இங்கு இடம் ஏற்படுகிறது.

9, 10, 11, 12 ஆம் வினையடிகளுக்குரிய கேட்க, கற்க, பார்க்க, நடக்க எனவரும் 'க்க' ஈற்று வடிவங்கள் முற்றுப் பொருண்மை நோக்கியவழி வியங்கோளாகவும், எச்சப் பொருண்மை நோக்கியவழி செயவென் எச்சமாகவும் கொள்ளப் பெறும். இவற்றை இவ்விருவகை இலக்கணக் கூறுகளுக்கும் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்புண்டு. ஆனால் முதலெட்டு வினையடிகளும் வியங்கோள் வினைமுற்று; செயவென் எச்சம் எனும் நிலைகளில் வெவ்வேறாய்ச் செயற்படுகின்றன. அவ் வெட்டு வினையடிகளுக்குமெனத் தனியே வினையெச்ச வடிவங்கள் இருக்கின்றன. இந்நிலையில் அவற்றிற்குரிய வியங்கோள் வினைமுற்றுச் சொற்களை வினையெச்சமாய்க் கையாள்வதென்பது எவ்வகையிலும் பொருந்தாது. இது தமிழின் செயவென் எச்ச அமைப்பிற்கு முற்றிலும் முரணானதாகும் என்பதைத் தமிழின் சொல்லமைப்பினை உணர்ந்த யாரும் மறுக்கமாட்டார்கள்.

**வினைமுற்று – செயவென் எச்சம்**

பிறிதொரு சூழலில் வீரமாமுனிவர் பலர்பால் வினைமுற்றுச் சொற்களையும் பலவின்பால் வினைமுற்றுச் சொற்களையும் வினையெச்சமாகக் கையாண்டுள்ளார். பின்வரும் எடுத்துக் காட்டுகளைக் காண்க.

ஆகுப (திருமணப் படலம் 62)
நீக்குப (ஐயம்தோற்று படலம் 90)
நாணுப (மகிழ்வினைப் படலம் 42)
எய்துவ (பாலமாட்சிப் படலம் 17)
எழுவ (சோகுதோல்விப் படலம் 5)
இரிவ சோதையோன் வெற்றிப்படலம் 50)
தீர்க்குவ (ஏசித்துசேர் படலம் 2)

இவை எல்லாம் தேம்பாவணியில் செயவென் எச்சமாய் ஆளப் பெற்றுள்ளன. இவை முறையே ஆக, நீக்க, நாண, எய்த, எழ, இரிய, தீர்க்க எனும் பொருளில் செயவென் எச்சமாய்க் கையாளப்பெற்றுள்ளன.

மேற்காணும் சொற்களுக்குத் தமிழிலக்கணங்கள் பின்வருமாறு இலக்கணவரையறை கூறுகின்றன

அர் ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே[2]
அர் ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கைமார் வினையொடு முடிமே[3]

'செய்ப' வாய்ப்பாட்டுப் பகரவீற்றுச் சொற்களைத் தொல் காப்பியமும் நன்னூலும் பலர்பால் படர்க்கை வினைமுற்றுச் சொற்கள் என்கின்றன.

அஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை[4]

மேற்கண்ட தோல்காப்பிய இலக்கண வரையறைப்படி இரிவ, எழுவ என்பன போன்ற வகரவீற்றுச் சொற்கள் பலவின்பால் படர்க்கை வினைமுற்றுச் சொற்களாம்.

மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே

(குறுந்தொகை 17)

ஊர்ப, சூடுப, படுப, ஆகுப என்பன முறையே ஊர்வர், சூடுவர், படுவர், ஆகுவர் என்னும் பொருளின. இவை பலர்பால் படர்க்கை வினைமுற்றுகள்.

போர்தோற்றுக் கட்டுண்டார் கைபோல்வ கார்தோற்று
(பரிபாடல் 18. 34)

இவ்வெடுத்துக்காட்டில் வரும் 'போல்வ' என்பது பலவின்பால் படர்க்கை வினைமுற்று. இச்சொல் ஒத்தன எனும் பொருளில் வந்துளது.

வீரமாமுனிவரும் இவற்றை வினைமுற்றுச் சொற்களாகவும் கையாண்டுள்ளார்.

மிடையெ னச்சொரி வியன்முகில் – வரைவிய பொழிவ
(நாட்டுப்படலம் 1)

இடித்து அறாஒலி எழத் திரை எறிந்து உருண்டு இரிவ
(நாட்டுப்படலம் 4)

மேற்காட்டுகளில் வரும் 'பொழிவ' என்பது 'பொழிந்தன' எனும் பொருவிலும் 'இரிவ' என்பது 'இரிந்தன' எனும் பொருளிலும் வந்துள்ளன.

இவ்வாறு இத்தகைய சொற்களை வினைமுற்றாகவும் கையாண்ட வீரமாமுனிவர் கேட்ப, பார்ப்ப எனும் 'ப்ப' ஈற்றுச் செயவென் எச்சங்களை நோக்கி முதலெட்டு வினையடிகளுக்கும் உரிய பலர்பால் பலவின்பால் படர்க்கை வினைமுற்றுகளையும் (செய்ப, செய்வ, வாய்பாட்டுச் சொற்கள்) செயவென் எச்சமாகக் கையாண்டுள்ளார்.

கேட்க, கற்க, பார்க்க, நடக்க எனும் வினையெச்சச் சொற்களை நோக்கி செய்க, ஆள்க, கொல்க என்பன போன்ற வியங்கோள் வினைமுற்றுகளை வினையெச்சமாகவும்; கேட்ப, நடப்ப, கற்ப, பார்ப்ப எனும் 'ப்ப' ஈற்றுச் செயவென் எச்சங்களை நோக்கிச் செய்ப, ஆள்ப, நாணுப, ஆடுவ, பாடுவ என்பன போன்ற வினைமுற்றுச் சொற்களை வினையெச்சமாகவும் கையாண்டுள்ளார் வீரமாமுனிவர். அவர் ஆண்டுள்ள முறைப்படி முதல் எட்டு வினையடிகளும் பின்வருமாறு மூவகையாக நின்று செயவென் எச்சமாகச் செயற்படுகின்றன.

| வினையடி எண் | வினையடி | வீரமாமுனிவரின் வரையறைப்படி அமையும் செயவென் எச்சங்கள் | | |
|---|---|---|---|---|
| 1. | செய் | செய்ய | செய்க | செய்ப |
| 2. | ஆள் | ஆள | ஆள்க | ஆள்ப |
| 3. | கொல் | கொல்ல | கொல்க | கொல்ப |
| 4. | அறி | அறிய | அறிக | அறிப |
| 5. | அஞ்சு | அஞ்ச | அஞ்சுக | அஞ்சுப |
| 6. | விடு | விட | விடுக | விடுப |
| 7. | உண் | உண்ண | உண்க | உண்ப |
| 8. | தின் | தின்ன | தின்க | தின்ப |

இவற்றுள் செய்ய, ஆள என்பன போன்றவை மட்டுமே தமிழிலக்கண மரபுப்படி செயவென் எச்சங்களாம். ஏனைய இரண்டும் வினைமுற்றுவடிவங்கள். பின் நான்கு வினையடிகளுக்கும் (9, 10, 11, 12ஆம் வினையடிகள்) உரிய வினையெச்ச வடிவங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட வீரமாமுனிவர் மட்டுமே இவ்வினைமுற்றுச் சொற்களையும் வினையெச்சமாகக் கையாண்டுள்ளார். தமிழிலக்கணப் புலவர் எவரும் செய்க, செய்ப எனும் வாய்பாட்டுச் சொற்களை வினையெச்சமாகக் கையாளவில்லை.

இவற்றை எல்லாம் ஒருங்குவைத்து நோக்கும்போது வீரமாமுனிவர் தமிழின் செயவென் எச்ச அமைப்பினை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது.

தமிழின் பன்னிரண்டு வினையடிகளுள் இறுதி நான்கு வினையடிகளின் செயவென் எச்சச் செயற்பாடே வீரமாமுனிவரின் குழப்பமான செயவென் எச்ச ஆளுகைக்குக் காரணமாம்.

இறுதி நான்கு வினையடிகளின் செயவென் எச்சம், வியங்கோள் வினைமுற்று எனும் இரண்டனுக்கும் இடையே வேறுபாடு காட்ட வேண்டி 'ப்ப' விகுதியைச் செயவென் எச்ச விகுதியாகவும் 'க்க' விகுதியை வியங்கோள் வினைமுற்று விகுதியாகவும் கையாண்ட தமிழ்ப்புலவர்கள் கேட்க, கற்க, பார்க்க, நடக்க என்பனவற்றைச் சிலவிடங்களில் வினையெச்சமாகவும் கையாண்டுள்ளனர். இவற்றை நோக்கிச் 'செய்ப' வாய்ப்பாட்டுப் பலர்பால் வினைமுற்றுகளையும் 'செய்க' வாய்பாட்டு வியங்கோள் வினைமுற்றுகளையும் எச்சமாகக் கையாளலாம் போலும் எனத் தவறாக எண்ணிக்கொண்டு முதலெட்டு வினையடிகளுக்கும் உரிய இவ்விரு வினைமுற்றுச் சொற்களையும் வினையெச்சமாகவும் கையாண்டுள்ளார் வீரமாமுனிவர். இது தமிழின் செயவென் எச்ச அமைப்பினுக்கு முற்றிலும் முரணானதாகவும் ஏற்றுக்கொண்டு பின்பற்ற இயலாததாகவும் உள்ளது. தமிழின் செயவென் எச்ச அமைப்பினை முழுமையாகப் புரிந்துகொண்ட எவரும் இவற்றை வினையெச்சமாகக் கொள்ளத் துணியமாட்டார்கள். மேலும் தமிழ்மொழியின் இலக்கணம் உணராதவரும் தமிழைத் தாய்

மொழியாகக் கொண்ட கல்வியறிவிலாப் பாமரரும்கூட *ஆடுக வந்தான், *நாணுப வந்தாள் என்பனவற்றைச் செயவென் எச்சமாகக் கொள்ளத் தயங்குவர். வினைமுற்றுச் சொற்களை வினையெச்சமாகப் பயன்படுத்திய வீரமாமுனிவரின் செய்கை எவ்வகையிலும் பொருத்தமில்லை. தேம்பாவணிக் காவியம் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வீரமாமுனிவர் எழுதியதே என்பதை இத்தகைய மொழியியற் சான்றுகள் உறுதிப் படுத்துகின்றன என்பதையும் இங்கே குறிப்பிடுதல் தகும்.

## அறிஞர் கருத்துரையும் மறுப்புரையும்

டாக்டர் மா. சு. திருமலை அவர்கள் வீரமாமுனிவரின் இத்தகைய வினையெச்ச ஆட்சிகள் சரியே என்ற அடிப்படையில் பின் வரும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.

> வீரமாமுனிவர் வினையெச்ச அமைப்பைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தால் அவர் சரியாகப் பயன்படுத்துகிற மற்ற வினையெச்சப் பிரயோகங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றன அல்லவா? மேலும் தவறென்று இங்கே சொல்லப்படும் எல்லா எடுத்துக்காட்டுகளுக்குமிடையே ஓர் ஒப்புமை இருப்பதுபோல் தெரிகிறது.[5]

> வீரமாமுனிவர் அக்காலப் பண்டிதரிடம் காட்டாமலா இருந்திருப்பார்? இப்பிரயோகம் ஏதோ ஒரு காரணத்தினால் சரியில்லை என்றால் சுட்டிக் காட்டியிருக்கமாட்டார்களா?[6]

> தொல்காப்பியத்தினின்றும் சங்கவழக்கு மாறுபடுவதை இயல்பென்றும், வளர்ச்சியென்றும் ஒத்துக்கொள்கிறோம். பிற காலங்களைப் பற்றியும் அதே மனநிலையைக் காட்டுகிறோம். அதே அடிப்படையில் பார்த்தால் ஏன் தேம்பாவணி ஆசிரியர் மட்டும் தவறு செய்கிறார் என்று சொல்ல வேண்டும்.[7]

இன்னோரன்ன பிற கருத்துக்களையும் அவர் எடுத்துரைக்கின்றார்.

ஒரு மாணவர் ஒரு சொல்லைப் பல இடங்களில் சரியாக எழுதிவிட்டு ஒரு சில இடங்களில் பிழைபட எழுதிவிடுவாராயின் அவர் சரியாக எழுதியவற்றை நோக்கிப் பிழைபட எழுதியவற்றையும் சரி என்று ஒத்துக்கொள்வது எவ்வாறு பொருத்தமில்லையோ அதைப்போன்றதுதான் இதுவும். வீரமாமுனிவர் செய்ய, ஆள, கொல்ல, அறிய எனும் செயவென் எச்சங்களையும் கையாண்டுள்ளார் என்பதற்காகச் செல்க, ஆள்க எனும் வியங்கோள்களையும் செல்ப, ஆள்ப, விடுவ, நாணுவ எனும் பலர்பால், பலவின்பால் படர்க்கை வினைமுற்றுகளையும் செயவென் எச்சமாகக் கொள்ள வேண்டும், இவையும் சரியான பிரயோகம்தான் என ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது சரியன்று. சரியானவற்றைச் சரியென்று ஒத்துக்கொள்வதைப்போல் தவறானவற்றைத் தவறு என்று சுட்டிக்காட்டுவதுதான் ஆய்வுநேர்மை.

அக்காலப் பண்டிதர்கள் இதைச் சரியென்று ஒத்துக்கொண்டிருப்பார்களாயின் அதுவும் தவறுதான். அது வீரமாமுனிவர் செய்த தவறினுக்கும் மேலான தவறாய் முடியும். தமிழின் செயவென் எச்ச அமைப்பினை முழுமையாகப் புரிந்துகொண்ட எப்பண்டிதரும் இதனைச் சரியென்று ஒப்புக்கொண்டிருக்க மாட்டார்கள்.

சங்க இலக்கியங்களில் அளபெடை வடிவச் செய்தென் எச்சங்கள் வழக்கு மிகுந்து காணப்பெறுகின்றன ; ஆனால் திருக்குறளில் அத்தகு எச்சங்கள் மிக அருகியே காணப்பெறுகின்றன. ஒரு காலகட்ட இலக்கியங்களில் பல்வேறு வாய்ப்பாட்டெச்சங்களும் வழக்கு மிகுந்து காணப்பெறுகின்றன; பிறிதொரு காலகட்ட இலக்கியங்களில் அவற்றில் பல வாய்பாட்டெச்சங்கள் வழக்கு வீழ்ந்துள்ளன. இவை போன்றவற்றை மாற்றங்கள் என்று ஒப்புக் கொள்வதில் தவறேதும் இல்லை. ஒருவர் வியங்கோள் வினை முற்றுகளை வினையெச்சமாகத் தவறாகக் கையாள்வதையும் மாற்றமென ஒத்துக்கொள்ள வேண்டும் என்பது எவ்வகையிலும் பொருந்தாது. செயவென் எச்சத்திற்கே உரிய சொல்வடிவங்கள் இருக்கும் போது வினைமுற்றுகளையும் வினையெச்சமாகக் கையாண்டு மொழிக் குழப்பத்தை ஏற்படுத்துவதும் மாற்றம் என்றால் ஒருவர் ஆண்பால் வினைமுற்றுகளைப் பெண்பால் வினைமுற்

றாகக் கையாள்வதும் மாற்றம்தானே. இதனை நாம் எவ்வாறு தவறென ஒதுக்கிவிடுகின்றோமோ அதேபோல் வியங்கோள் வினைமுற்றுகளை வினையெச்சமாகக் கையாள்வதும் தவறு என்று ஒதுக்கத்தக்கதுதான்.

தொன்றுதொட்டு வரும் மரபினின்றும் மாறுபட்டு ஒருவர் ஒருவகை இலக்கணக்கூறினுக்குரிய சொற்களைப் பிறிதொரு இலக்கணக்கூறினுக்கும் பயன்படுத்துவதை எவ்வாறு மாற்றமென ஒத்துக்கொள்ளவியலும். இது மொழியமைப்பினைச் சரியாகப் புரிந்துகொள்ளாதலால் ஏற்பட்ட குழப்பமே அன்றிப் பிறிதில்லை என்று கருதுவது இயல்புதானே.

வீரமாமுனிவர் இதனை எவ்வகையிலும் புதுச்சொல்லாய்ப் படைக்கவில்லை. முன்பே தமிழில் உள்ள வியங்கோளையும் பலர்பால், பலவின்பால் படர்க்கை வினைமுற்றையுமே உருவ ஒப்புமைக் குழப்பத்தால் இவ்வாறு பிழைபட வினையெச்சமாகக் கையாண்டுள்ளார்.

சங்க இலக்கியங்களில் வியங்கோட் பொருண்மை இக்கால வழக்கிலும் மிக்கிருந்தது என்பதிலும் செய்க, ஆள்க, கொல்க, அறிக, அஞ்சுக, உண்க, தின்க என்பன வியங்கோள் வினை முற்றுகள் என்பதிலும் கேட்க, கற்க, பார்க்க, நடக்க என்பன சங்க இலக்கிய வழக்கில் பெரும்பாலும் வியங்கோளாகவே ஆளப் பெற்றன என்பதிலும் எள்ளளவும் ஐயமில்லை. 9, 10, 11, 12 ஆம் வினையடிகள் 'க்க' விகுதி பெற்று வியங்கோளாகவும் 'ப்ப' விகுதி பெற்று வினையெச்சமாகவும் இயன்ற தன்மைக்கு 'இலக்கியத்தில் செயவென் எச்சம்' என்ற பகுதியில் எடுத்துக்காட்டுகள் தரப்பெற்றுள்ளன.

## முடிவுரை

தமிழிலக்கிய வரலாற்றிலேயே வீரமாமுனிவர் ஒருவர் மட்டுமே வியங்கோள் வினைமுற்றையும், பலர்பால் பலவின்பால் படர்க்கை வினைமுற்றுகளையும் வினையெச்சமாகவும் கையாண் டுள்ளார். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எப்புலவரும்

செய்யாத இத்தவறினை வீரமாமுனிவர் ஒருவர் மட்டுமே செய்துள்ள சூழலில் 'வெளிநாட்டவரான வீரமாமுனிவர் தமிழின் வினையெச்ச அமைப்பினைத் தவறாகப் புரிந்துகொண்டார்' எனச் சொல்வது சரியான முடிவே ஆகும். இது எவ்வகையிலும் குறையான முடிவோ அவசர முடிவோ அன்று.

தமிழின் பன்னிரு வினையடிகளுள் 9, 10, 11, 12 ஆம் வினையடிகள் மிகுதியும் 'ப்ப' விகுதியையும் ஒருசில இடங்களில் 'க்க' விகுதியையும் பெற்றுச் செயவென் எச்சமாகச் செயற்பட்ட சூழலில் 'கேட்ப' எனும் செயவென் எச்ச அமைப்பினை நோக்கி உண்ப, தின்ப, எழுவ, இரிவ எனும் பலர்பால், பலவின்பால் படர்க்கை வினைமுற்றுகளையும் 'கேட்க' எனும் செயவென் எச்ச அமைப்பினை நோக்கிச் செய்க, உண்க, ஆடுக எனும் வியங்கோள் வினைமுற்றுகளையும் வினையெச்சமாகக் கையாண்டு வீரமாமுனிவர் சொல்லாட்சியில் செய்த தவறுகட்குச் சமாதானம் கூறி அது சரிதான் என்று வாதிடுவது அறிவாராய்ச்சிக்குப் பொருந்தாது.

வேற்றுப் பண்பாட்டையும் வேற்று மொழியையும் சார்ந்த வீரமாமுனிவர் மலையளவாகச் செய்திருக்கும் தமிழ்ப்பணியை எண்ணித் தலைவணங்கி அவரைப் போற்றுவோம். அதே நேரத்தில் அவர் எழுத்தில் ஏற்பட்டுவிட்ட தவறுகளையும் ஆய்வு நோக்கில் அடக்கத்தோடு நாம் சுட்டிக்காட்டத்தான் வேண்டும். அது ஆய்வாளரின் கடமைமட்டுமல்ல, உரிமையும் ஆகும்.

## இணைப்பு

**தேம்பாவணியின் செயவெண் எச்சச் சொற்கள் சில**

1. **ஆர்த்த ஓதைகேட்டு அரக்கன்நின்று அமர்க்கு எதிர்வருகப்**
   **பார்த்த பாலனைப் பழித்துஎழுந்து யாவரும் அஞ்ச**
   **கூர்த்த வேலொடு குறுகவந்து அகல்கரு முகிலில்**
   **போர்த்த கோடை நாட்பேரிடி யெனஉரை செய்தான்**

   (வளன்சனித்த படலம் 26)

வருக-வர

2. அழைத்து உமர் இக்கணத்து எழுகச்
சொல்என இரைப்ப அனைவரும் உவந்து

(இளவல்மாட்சிப் படலம் 42-3, 4)

எழுக-எழ

3. கண்ணுக படுமா மதகரி மாவும்
கடிந்தனர் தகைப்பான் என்று அயில் கொண்டு
எண்ணுக இடமற்று அபயர்மா கடல் சூழ்ந்து
எய்தகோல் பின்னுறத் தொடர்ந்தான்

(இளவல்மாட்சிப் படலம் 44-3, 4)

எண்ணுக-எண்ண

4. தேர்இ ரண்டுவலம் இடப் இரிந்து அகல
வரு(க)எ திர்ந்து தம்முள் திரியவே

(இளவல்மாட்சிப் படலம் 96-1)

வருக-வர

5. இருகார்பல எரிஏறுஉக விளையாடின எனவே
செருவார்கள் மிடைஆடுக திரள்தீஎழ அலறி
பொருயானைகள் கதைவீசிய பொருவா இசைபடலோடு
அருகாயின படையாவையும் அடிநூறின-பொருதே

(இளவல்மாட்சிப் படலம் 147)

ஆடிக-ஆடவும்

6. எஞ்சுக பயன் இயற்றிய அறங்களே இன்னா
விஞ்சுக பகை வினைசெயும் பழம்பழிப் பேய்அந்
நஞ்சுக பகுவாய் அரவு உருக்கொடு அந்நாளில்
அஞ்சுக புவி அனைத்துமே தோன்றிய வாமால்

(திருமணப்படலம் 6)

'எஞ்சுக, விஞ்சுக, அஞ்சுக என்னும் காரியப்பொருளான வினைச் செவ்வெண்கள் குச் சாரியை பெற்று வந்தன.

அச்சாரியை பெறாவிடின் எஞ்ச, விஞ்ச, அஞ்ச எனவரும். நஞ்சுக என்பதொன்று நஞ்சு உக என இருசொல்லாய்ப் பிரிக்கப்படும்'.

(தேம்பாவணி விருத்தியுரை, (உரை) ஏ. எஸ். ஜெகராவுமுதலியார், 1901. சென்னை. பக்கம் 214, 215.)

7. இன்தெ ளித்து எவ ரும்நசை எய்துவ
பொன்தெ ளித்துஎழு தும்படப் பொற்பினான்

(பாலமாட்சிப் படலம் 17-1, 2)

எய்துவ-கொள்ளும்படி

8. போய்முகம்உ டன்றுஎரிபு கைந்துஎழுவ திங்கள்
தேய்முகஎ யிற்றெதிர்தி ரங்கரன்உ ரைத்தான்

(சேதையோன் வெற்றிப்படலம் 46-3, 4

எழுவ-எழும்படி

9. உதைத்தனன்உ தைப்பஉரும் ஒப்பஅவன் ஆர்த்து
புதைத்தனஎ யிற்றுஇரிவ புணபுனல்க டித்தான்

கோகு
சேதையோன் வெற்றிப்படலம் 50-4

இரிவ-ஓடும்படி

10. அழுந்துஅழல் முனிவன் மற்ற அலகையோடு எழுவகண்டு
விழுந்துஅழல் உளத்தில் என்ன விண்ணவர் இரங்கி நொந்தார்

(சோகுதோல்விப் படலம் 5-3, 4)

எழுவ-புறப்பட

11. சுரரோ மணம்ஆ குபதா து அறைவார்

(திருமணப்படலம் 62-2)

ஆகுப-ஆகும்படி

12. துறவாய் மண(ம்) நீக் குபசொல் லியபின்
உறவா(ம்) மணமோ எனஉள் ளினனால்

(திருமணப்படலம் 104-3, 4)

நீக்குப-நீக்கும்படி

13. இரிந்(த)உளி இருண்டுஉறும் இரவின் நாப்பணில்
சரிந்தஉளி நீக்குப தனில்க ணிந்தனன்
(ஐயம்தோற்று படலம் 90-3, 4)

நீக்குப-நீங்கிச்செல்ல

14. தேம லிந்தகனி ஆர்தரு யாவும்
செல்ம லிருந்ததலை தாழ்ந்துவணங்க
பூம லிந்தநெறி மூவரும் ஏகிப்
புரைம லிந்தவினை தீர்க்குவ போனார்
(ஏசித்துசேர் படலம் 2-3, 4)

தீர்க்குவ-தீர்க்கும்படி

15. பாநாணுப இசைஓதைகள் பகல்நாணுப மணிகள்
பூநாணுப மதுவார்அருள் புயல்நாணுப கொடைகள்
நாநாணுப கலைமாட்சிமை நகைநாணுப நிறைசீர்
கோநாணுப நலம்பாவிலும் குறையாவளர் நகரம்
(திருமணப்படலம் 69)

'நாணுப எனும் வினையெச்சங்கள் ஏழும் செவ்வெண்'.
(தேம்பாவணி விருத்தியுரை, (உரை) ஏ. எஸ்.
ஜெகராவு முதலியார், 1901. சென்னை. பக்கம் 114.)

அடிக்குறிப்பு

1. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய இலக்கியங்களில் 'ப்ப' விகுதி கொண்ட செயவென் எச்சங்கள் அதிகமாகவும் 'க்க' விகுதி கொண்ட செயவென் எச்சங்கள் மிகக் குறைவாகவும்; கையாளப் பெற்றுள்ளன. கம்பராமாயணம், பெரிய புராணம் போன்றவற்றில் 'க்க'. 'ப்ப' ஈற்றுச் செயவென் எச்சங்கள் இரண்டும் ஒத்த அளவினவாய்க் கையாளப் பெற்றுள்ளன. 'ப்ப' ஈறு பெறும் ஒவ்வொரு வினையடியும் 'க்க' ஈறுபெற்றும் வந்துள்ளது. புறநானூற்றில் 'ப்ப' ஈற்றுச் செயவென்

எச்சங்கள் ஏறத்தாழ 146 இடங்களில் வந்திருக்க 'க்க' ஈற்றுச் செயவென் எச்சங்கள் 12 இடங்களில் மட்டுமே வந்துள்ளமை ஈண்டு கருத்திற்கொள்ளத் தக்கது.

(எ - டு)

| | | | |
|---|---|---|---|
| அளக்க | (புறம் 331-10) | செருக்க | (புறம் 37-9) |
| இருக்க | ( ,, 315-5 ) | நிற்க | ( ,, 126-13 ) |
| உரைக்க | ( ,, 28-7 ) | நினைக்க | ( ,, 76-19 ) |
| எடுக்க | ( ,, 255-2 ) | படைக்க | ( ,, 337-6 ) |
| ஒழிக்க | ( ,, 216-12 ) | முகக்க | ( ,, 386-3 ) |
| கேட்க | ( ,, 67-11 ) | வியக்க | ( ,, 197-9 ) |

இவையே புறநானூற்றில் வந்துள்ள 'க்க' ஈற்றுச் செயவென் எச்சங்கள்.

2. தொல்காப்பியம்-சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, நூற்பா 200.

3. நன்னூல், மயிலைநாதர் உரை, உ. வே. சா. நூலகம், நூற்பா 326.

4. தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, நூற்பா 210.

5. "தமிழ் ஆய்வேடுகளில் காணும் சில குறைகள்". மா. சு. திருமலை, மொழியியல், பக். 241.

6. மேற்படி, பக். 241.

7. மேற்படி, பக். 242.

துணை நூல்கள்

கழகம் (பதிப்பு) 1968. சிலப்பதிகாரம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை, சென்னை.

—— 1971. தேம்பாவணி-நாட்டு நகரப்படலம், ரா. சேதுரகு நாதன் உரை, சென்னை.

—— 1965. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், தெய்வச் சிலையார் உரை, சென்னை.

சாமிநாதையர், உ. வே. (பதிப்பு) 1953. நன்னூல் மூலமும் சங்கரநமச்சிவாயர் உரையும், உ. வே. சா. நூலகம், சென்னை.

தமிழிலக்கியக்கழகம் (பதிப்பு) 1961. தேமபாவணி-முதற்பாகம், ரா. வே. ஆரோக்கியம் பிள்ளை உரை, தூத்துக்குடி.

—— 1964. தேம்பாவணி - இரண்டாம் பாகம், ரா. வே. ஆரோக்கியம் பிள்ளை உரை, தூத்துக்குடி.

—— 1964. தேம்பாவணி - மூன்றும் பாகம், ரா. லே. ஆரோக்கியம் பிள்ளை உரை, தூத்துக்குடி.

திருமலை, மா. சு. 1980. ''தமிழ் ஆய்வேடுகளில் காணும் சில குறைகள்'', மொழியியல், தொகுதி 4. பகுதி 1, 2, அண்ணாமலைநகர், பக்கம் 237-246.

மாதையன், பெ. 1980. தமிழில் வினையெச்சங்கள் - வரலாற் றாய்வு, (அச்சிடப்பெறா ஆய்வேடு), சென்னைப் பல் கலைக் கழகம், சென்னை.

வையாபுரிபிள்ளை, எஸ். (பதிப்பு) 1963. சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), முதறபகுதி, இரண்டாம் பகுதி, சென்னை.

ஜெகராவு முதலியார், ஏ. எஸ். 1901. உரை, பதிப்பு) தேம்பாவணி விருத்தியுரை, சென்னை.

Subramoniam, V. I. 1962. *Index of Puranaanuuru*, University of Kerala, Trivandrum.

# தானாக்கமும் தற்சுட்டாக்கமும்

ப. பத்மநாப பிள்ளை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தானாக்கம் (tanization) என்னும் மாற்றியம் ஒரு வாக்கியத்தில் இரண்டு பெயர்த் தொடர்கள் ஒருவரைக்/ஒன்றைக் குறித்து நிற்குமாயின் இரண்டாவது வரும் பெயர்த்தொடரைத் தான் என்னும் பதிலிடுபெயராக மாற்றுகிறது (Kumaraswami Raja, 1972) தற்சுட்டாக்கம் (reflexivization) என்னும் மாற்றியம் ஒரு வாக்கியத்தில் எழுவாயும் செயப்படுபொருளும் ஒருவரைக்/ஒன்றைக் குறிக்குமாயின் அங்கு தற்சுட்டுப்பண்பினைச் சேர்க்கிறது. தமிழில் இம்மாற்றியங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஸ்ரீவீரமணிகண்டன் பிள்ளை (1980, 1981), ஜோசப் (1978) போன்றோர் தான் பதிலிடுபெயர்தான் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனக் குறிப்பிடுகின்றனர். கால்டுவெல் (1856) இலத்தின் இலக்கணப் பாரம்பரியத்தைப் பின்பற்றி இப்பதிலிடுபெயர் தான்

- ஐ தற்சுட்டுப்பதிலிடுபெயர் எனக் குறிப்பிட்டுள்ளார். பின்னர் கந்தப்ப செட்டி (1968), சண்முகம் (1971) போன்றோரும் இப் பதிலிடுபெயரைத் தற்சுட்டுப்பதிலிடுபெயர் என்றே குறிப்பிட்டுள்ள னர். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டே ஸ்ரீவீரமணி கண்டன் பிள்ளையும் (1980, 1981) ஜோசப்பும் (1978) தற்சுட்டாக் கத்தின் வெளிப்பாடு தான் என்று கூறியுள்ளனர்.

லங்கண்டன் (1969) ஆங்கில மொழியியல் தற்சுட்டாக்கத்தை விளக்கும் போது இவ்வாறு கூறுகிறார்: "Reflexivization is the transformation which adds a reflexive feature to the pronoun of a noun phrase which is coreferential with another noun phrase in the same clause". ஆங்கில மொழியில் self என்னும் உருபு பதிலிடுபெயருடன் சேர்க்கப்படுவதால் அவ்விளக்கம் சரி யானதே. ஆனால் தமிழில் தற்சுட்டாக்கத்தின்போது கொள்என்னும் துணைவினை வினைச்சொல்லோடு இணைக்கப்படுகிறது. காட்டாக வாக்கியம் (1), அதன் புதைநிலை வடிவம் (1') -ஐயும் எடுத்துக் கொள்வோம்.

1. மாலா தன்னை அடித்துக் கொண்டாள்

1'




மேலே உள்ள வாக்கியத்தில் ஒரே பெயர்த்தொடர் எழுவாயும் செயப்படுபொருளுமாக வருவதால் அங்கு தற்சுட்டாக்கம் நடை பெறுகிறது. அதுபொழுது துணைவினை கொள் வினைச்சொல் லோடு சேர்க்கப்படுகிறது.

1a.




இப்பொழுது தானாக்கம் என்னும் மாற்றியத்தால் வினைத்தொடரின் பெயர்த்தொடர் தான் ஆக மாறுகிறது.

1b.




தொடர்பு விதியை (concord rule) செயற்படுத்தினால் வாக்கியம் (1) நமக்குக் கிடைக்கும். மேலே கண்ட ஆய்வின் விளைவாக பதிலிடுபெயர் தான் தானாக்கத்தின் வெளிப்பாடு எனவும் துணை வினை கொள் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனவும் நிர்ணயிக்கலாம்.

பதிலிடுபெயர் தான் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனக் கொண்டால் வாக்கியத்தின் எழுவாய் தன்மை முன்னிலை பதிலிடு பெயராக இருக்கும்போதும் பொருந்த வேண்டும். ஆனால் இங்கு முரண்பாடு காணப்படுகிறது. கீழ்க்காணும் வாக்கியங்கள் இதை தெளிவுறுத்துகின்றன.

2. நான் என்னை அடித்துக் கொண்டேன்

3. நீ உன்னை அடித்துக் கொண்டாய்

வாக்கியங்கள் (2-3) -இன் புதைநிலை வடிவம் கீழே தரப் பட்டுள்ளன.

2'




3'




மேலே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் எழுவாயும் செயப்படு பொருளும் ஒருவரைக் குறிப்பதால் தற்சுட்டாக்கம் நடைபெற வேண்டும். பதிலிடுபெயர் தான் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனக் கொண்டோமேயானால் கீழ்க்காணும் பிழையான வாக்கி யங்களே கிடைக்கும்.

2a. *நான் தன்னை அடித்துக்கொண்டேன்.

3a. *நீ தன்னை அடித்துக்கொண்டாய்.

இப்பொழுது படர்க்கை எழுவாய்க்கு மட்டும் தற்சுட்டாக் கத்தின்போது தான் கிடைக்கிறது. எனவும் தன்மை, முன்னிலை

எழுவாய்களுக்கு அதனதன் வேற்றுமை அடிச்சொற்கள் வரும் எனவும் வாதிக்கலாம். ஆனால் கீழ்க்காணும் வாக்கியங்களில் படர்க்கைப் பெயர் எழுவாயாக வந்த பின்னரும் பதிலிடுபெயர் தான் வரவில்லை. இருந்தும் அவை தற்சுட்டு வாக்கியங்களாக்வே இருக்கின்றன.

4. இராமன் அவனைத் திட்டிக்கொண்டான்.

5. சீதா அவளை அடித்துக் கொண்டாள்.

வாக்கியங்கள் (4-5) -இன் புதைநிலை வடிவம் கீழ்வருமாறு இருக்கும்.

4'




5'




இப்பொழுது தற்சுட்டாக்கத்தின் பின்னர் பதிலிடுபெயராக்கம் நடைபெறுவதால் வாக்கியங்கள் (4-5) கிடைக்கின்றன. பின்னரும் தற்சுட்டுப்பொருள் அவ்வாக்கியங்களில் கிடைக்கிறது.

ஆகையால் தற்சுட்டுப்பொருளைப் பதிலிடுபெயர் தான் உணர்த்த வில்லை எனவும் துணைவினை கொள் -தான் அதை உணர்த்து கிறது எனவும் முடிவாக கருதலாம். கீழ்வரும் தற்சுட்டு இல்லா வாக்கியங்கள் இதை மேலும் தெளிவுறுத்தும்.

6. கண்ணன் தான் போனதைக் கூறினான்.

7. சுசிலா தான் தருவதாக வாக்களித்தாள்.

வாக்கியங்கள் (6–7) தற்சுட்டில்லா வாக்கியங்களாக இருந்த பின்னரும் அவற்றில் பதிலிடுபெயர் தான் வந்திருக்கிறது.

ஒரு வாக்கியத்தில் துணைவினை கொள் இருப்பதால் அதை தற்சுட்டு வாக்கியம் எனக் கூற முடியாது. ஏனெனில் துணை வினை கொள் பல பொருட்களில் வரும் (ஜோசப் 1978; திலகவதி, 1978), துணைவினை கொள் -இன் பொருள் இரண்டாக பிரிக்கப் பட்டிருக்கிறது. (1) தற்சுட்டு கொள் (2) தற்சுட்டில்லா கொள். வசதிக்காகத் தற்சுட்டுப் பொருளில் வரும் கொள் துணைவினையைக் கொள் $_1$ எனவும் தற்சுட்டில்லாப் பொருளில் வரும் கொள் துணைவினையைக் கொள் $_2$ எனவும் குறிக்கப்பட்டிருக்கிறது.

கீழ்வரும் வாக்கியங்களில் எழுவாயும் செயப்படுபொருள் ஒருவரேயானதால் அதில் வரும் கொள் தற்சுட்டுப்பொருளை உணர்த்துகிறது.

8. இராமன் தன்னை அடித்துக் கொண்டான்

9. சீதா தன்னைத் திட்டிக் கொண்டாள்

கீழ்வரும் வாக்கியங்களில் தற்சுட்டில்லாப் பொருளில் வரும் கொள்-ஐக் காணலாம்.

10. இராமன் படுத்துக் கொண்டான்

11. இராணி உட்கார்ந்து கொண்டாள்

12. கண்ணன் தன் குடையை எடுத்துக்கொண்டான்

13. மூர்த்தி தன் கையை வெட்டிக்கொண்டான்

வாக்கியங்கள் (10–12) –இல் வரும் துணைவினை கொள் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனக் கருத முடியாது. ஏனெனில் அவற்றின் எழுவாயும் செயப்படுபொருளும் ஒருவரைக் குறித்து நிற்கவில்லை. வாக்கியங்கள் (8–13)- இன் புதைநிலை வடிவம் கீழ்வருமாறு இருக்கும்.

8'




9'




10'



11’




12’




13’




கொள்$_1$, கொள்$_2$ இவற்றின் தொடரியல் பண்புகளைக் காண்போம். கொள்$_2$ உள்ள வாக்கியங்களைச் செயப்பாட்டு வினையாக மாற்ற முடியும். ஆனால் கொள்$_1$ உள்ள வாக்கியங் களை அவ்வாறு மாற்ற முடியாது. இது சரியானதா தவறானதா என்பதைக் காண்போம். செயப்பாட்டு வினையாக்க (passivization) மாற்றியத்தை (8’–9’)-இல் செயற்படுத்தினால் கீழ்வரும் பிழையான வாக்கியங்கள் கிடைக்கும்.

8a. *இராமன் தன்னால் அடித்துக்கொள்ளப்பட்டான்.

9a. *சீதா தன்னால் திட்டிக்கொள்ளப்பட்டாள்.

வாக்கியங்கள் (10-'11')- இன் வினைச்சொல் செயப்படுபொருள் குன்றிய வினையாக இருப்பதால் செயப்பாட்டு வினையாக மாற்ற முடியாது. செயப்பாட்டு வினையாக்கம் (12'-13')-இல் நடை பெறுவதால் கீழ்வரும் வாக்கியங்கள் கிடைக்கும்.

12a. கண்ணனால் அவன் குடை எடுத்துச் செல்லப்பட்டது.

13a. மூர்த்தியால் அவன் கை வெட்டிக் கொள்ளப்பட்டது.

மேலே கண்ட ஆய்விலிருந்து கொள்$_1$ உள்ள வாக்கியங்களைச் செயப்பாட்டு வினையாக மாற்ற முடியாது எனவும். கொள்$_2$ உள்ள வாக்கியங்களை அவ்வாறு மாற்ற முடியும் எனவும் முடி பாகக் கருத முடிகிறது.

தற்சுட்டுப் பொருள் துணைவினை கொள் இல்லாமலே பெற முடியும் எனக் கருதுவாரும் உண்டு. அப்படியிருப்பின் கீழ்க் காணும் வாக்கியங்கள் (14-15) பிழையற்ற வாக்கியமாக கருத வேண்டும்.

14. *மாலா தன்னை அடித்தாள்.

14a. மாலா தன்னை அடித்துக் கொண்டாள்.

15. *கண்ணன் தன்னைத் திட்டினான்

15a. கண்ணன் தன்னைத் திட்டிக் கொண்டான்

வாக்கியங்கள் (14-15) பிழையான வாக்கியங்களே. ஏனெனில் எழுவாயும் செயப்படுபொருளும் ஒருவரைக் குறித்து நிற்கும்போது துணைவினை கொள் இல்லாமல் வரும் வாக்கியத்தைத் தமிழில் காண முடியாது.

பதிலிடுபெயர் தான் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு இல்லை எனவும் அது தானாக்கத்தின் வெளிப்பாடே எனவும் முடிபாகக் கூறலாம். துணைவினை கொள்$_1$- தான் தற்சுட்டாக்கத்தின் வெளிப்பாடு எனபதும் நிறுவப்படுகிறது. ஆகையால் தானாக்கமும் தற்சுட்டாக்கமும் இரண்டு தனித்தனி மாற்றியங்கள் எனக் கொள்ள வேண்டும்.

Caldwell, R 1856. *A Comparative Grammar of the Dravidian or South - Indian Family of Languages* [Reprinted, 1974], Oriental Books Reprint Corporation. New Delhi.

Joseph, N. 1978. *koḷ* as an Auxilliary, *Ayvukko:vai, vol .2*, Coimbatore.

Kandappa Chetty, M. 1968 Personal and Reflexive Pronouns in Dravidian, *Seminar on Dravidian Linguistics-II*, Annamalai University, Annamalainagar.

Kumaraswami Raja,N. 1972. "Tanization and Reflexivization" *The Third All-India Conference of Linguist* Hyderabad.

Langendoen, D.T. 1969. *The Study of Syntax. The Generative Transformational Approach to American English*, Holt, Rinehart and Winston, New York.

Shanmugam, S.V. 1971. *Dravidian Nouns: A Comparative Study*, Annamalai University, Annamalainagar.

Sreeveeramanikandan Pillai, R. 1980. 'Reflexivization as a Cyclic Rule in Tamil', *Seminar on Tamil Linguistics* Annamalai University, Annamalainagar.

——— 1981. When Two N Ps are Identical,' in S. Agesthialingom and N. Rajasekharan Nair, [eds.], *Dravidian Syntax*, Annamalai University, Annamalai nagar.

Thilagavathi, K. 1981. 'An evidence for the Claim: Tamil Auxiliaries are derived from Main verb', in S. Agesthialingom and N. Rajasekharan Nair, [eds.], *Dravidian Syntax*, Annamalai University, Annamalainagar.

# இரண்டாம் மொழி பயிற்றலில் கவிதை

ந. நடராசபிள்ளை
விமலா நடராசன்
இந்தியமொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்.

மொழி செய்திப் பரிமாற்றத்திற்கு ஒருகருவி; இலக்கியம் மொழியில் ஓர் உயிர், ஒருக்கலை. இலக்கியம் மனிதனின் மொழிச் சிந்தனையையும் பிறச் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து அதை இறவாத் தன்மைக்கு எடுத்துச் செல்கின்றது. எனவே தான் 'இலக்கியம் மனித வாழ்வின் திறனாய்வு' என்றும் 'வாழ்க்கையைப் பிரித்துணர வழிசெய்கிறது' என்றும் கூறப்படுகின்றது. ஆக, கவிதை கற்பித்தல் எனும்போது அதன் அடிப்படைகளைப் புரிந்து கொண்டு மொழிக் குறிக்கோள்களைத் தெளிவாக்கிக் கொள்தல் நலம்.

மொழிகற்பித்தல், சமூகத்தின் தேவைக்கேற்ப பலமுகங்களையும் பல நிலைகளையும், பல முறைமைகளையும் உடையதாக அமைந்திருக்கின்றது. முறைசார் கல்வி, முறைசாராக்கல்வி, கட்டாயக்கல்வி, பயன்சார்கல்வி போன்றவற்றில் மொழி முதல்

மொழியாகவோ இரண்டாம் மொழியாகவோ அயல்மொழியாகவோ கற்பிக்கப்படுகின்றது. தொடக்கநிலை, உயர்நிலை, மேல்நிலை, இள நிலை, முதுநிலை எனப் பலநிலைகளாகவும் அமைகின்றது. மொழியியல், உளவியல் ஆய்வுகளின் அடிப்படையில் பல மொழி கற்பிக்கும் முறைமைகளையும், இலக்கண மொழிபெயர்ப்பு முறைமை, நேர்முக முறைமை, கேட்டுப்பேசல் முறைமை, இருமொழி முறைமை, சூழல்சார் முறைமை போன்ற பல முறைமைகளையும் கொண்டுள்ளது. கற்பிக்கும்போது படங்கள், மின்கருவிகளின் துணை போன்ற பல உத்திகளையும் கைக்கொண்டுள்ளது.

## பாடத்திட்டத்தில் கவிதை

இவ் வேறுபாடுகளின் ஒவ்வொரு அங்கமும் தனக்கென ஒரு பாடத்திட்டத்தையும் பாட அமைப்பையும் கொண்டிருக்கின்றது. இவ்வமைப்புகளில் கவிதை கற்பித்தலின் பங்கு பெரிதும் வேறுபடுகின்றது.

கவிதைக்கேயுரிய சிறப்பு, சொல்லொழுங்கு, சொல்தேர்வு, சொற்சிக்கனம், வெளிப்படையாகப் பொருள் அமையாதிருத்தல், அணிநலம் மிகுந்தநடை, கற்பனைவளம், சிந்தனைத் திறனின் வெளிப்பாடு, உணர்ச்சி இவைகளின் கூட்டு. இக்கூட்டமைப்பு மேற்கூறியவற்றை, படிப்பவருள்ளும், கேட்பவருள்ளும் செயலூக்கியாக நிற்கின்றது.

இச்செயலூக்கியாக நிற்கின்ற கவிதையையும் அதன் கவிதைப் பண்புகளையும் இரண்டாம் மொழியாகக் கற்போர் எந்தஅளவு புரிந்து கொள்கிறார்கள் எனும் கேள்வி எழுகின்றது. இக்கேள்வியை முதலாகக் கொண்டு மொழிப் பாடத்திட்டத்தில் கவிதை அவசியமா எனும் கேள்வி எழுகின்றது. பாடத்திட்டத்தில் கவிதையைச் சேர்த்தால் வெற்றிகரமாகக் கற்பிக்க முடியுமா? எனும் ஐயமும் கூடவே எழுகின்றது. இவ்வையங்களும் ஓரளவு சரியானவையே! எனினும் பல்வேறு காரணங்களால் அவைகள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

கவிதை கற்பித்தல் எனும் போது சிலகுறிப்புகளை மனதிலிருத்திக் கொண்டு தொடங்கவேண்டும்.

அ. முதல் மொழியாகக் கற்பவர்களுக்கா? இரண்டாம்மொழியாக /அயல்மொழியாகப் பயில்பவர்களுக்கா?

ஆ. கற்பவரின் வயது.

இ. கவிதைக் கற்பிக்கத் தொடங்கும்போது மாணவர்கள் பெற்றிருக்கிற மொழியறிவு.

இக்கட்டுரை இரண்டாம் மொழி பயிற்றலில் கவிதையின் பங்கைப் பற்றி ஆராய்கிறது. இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப் பல்வேறு மொழி கற்பித்தல் முறைமைகள் இருப்பினும் பெரும்பான்மையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேட்டுப்பேசல் முறைமையை (Audio lingual method) மனதிற்கொண்டு இக்கட்டுரை, கவிதை கற்பிப்பதை ஆராய்கின்றது.

### மொழிப்பாடம் ஒரு திறன் பாடம்

கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய திறன்களை வளர்க்கப் பயிற்றுவதால் மொழிப்பாடம் ஒரு திறன்பாடமாகும். பாடநூலில் உள்ள செய்திகளை மட்டும் கற்பித்து அவற்றை மாணவர்கள் அறிந்துள்ளார்களா என்று சோதித்துப் பார்த்தால் அது அறிவுப்பாடமாகும். ஆனால் மொழிப்பாடத்தைப் பொறுத்தவரையில், அதன்மூலம் கேட்டுணர்தலையும், படித்துணர்தலையும், பேசுதல் எழுதுதலைச் செம்மைப் படுத்துதலையும், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதலையும் வளர்க்க முயல்வதால் அது ஒரு திறனபாடமாகும்.

இத்திறன்களுள் கேட்டலும் பேசுதலும் ஒலியை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும்; படித்தல் எழுதுதல் ஆகிய இரண்டும் வரிவடிவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். கேட்டலும் படித்தலும் செய்திகளை அல்லது கருத்துகளை அறிந்துகொள்ள உதவுகின்றன. அதனால் இவற்றை உட்கொள்ளும் திறன்கள் (Receptive skills) என்றும்

கூறுவார்கள். பேசுதல் அல்லது எழுதுதல் மூலம் நாம் பிறருக்கு அறிவிக்க வேண்டிய செய்திகளை வெளியிடுகின்றோம். அதனால் இவற்றை வெளியிடும் திறன்கள் (Expressive skills) என்று கூறுவார்கள்.

இத்திறன்களை வளர்ப்பதை அடிப்படையாகக் கொண்ட கேட்டுப் பேசல் முறைமை வாய்பாட்டுப் பயிற்சியின் (drills) மூலம் அடிப்படை வாக்கிய அமைப்புக்களை மனப்பாடம் செய்வதை வலியுறுத்துகின்றது. இந்நோக்கில் பார்க்கும் போது கவிதையைத் திருப்பித் திருப்பிச் சொல்வதால் மொழியின் அமைப்புக்களை எளிதாகத் தன்னகப் படுத்த முடியும். ஓரளவு இது சிறந்த வாய்பாட்டுப் பயிற்சியாக அமைகின்றது.

பயில் மொழியின் (Target language) ஒலியமைப்பில் பயிற்சி கொடுக்கும் போது அவைகள் வருமுறையை மனப்பாடமாக்க, ஒலிப்பு முறையைச் செம்மைப்படுத்த, கவிதைகளைக் கொடுக்கலாம். அவற்றின் ஒலிநயமும், எதுகை, மோனை நயங்களும் இம் முயற்சிக்கு வலுவூட்டுகின்றன. சான்றாக,

1. ''அறி வறை போகியது பொறிய நெஞ்சத்துறு
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே''

எனும் பாடலில் 'ற'வை பயன்படுத்துவதால் எழுகின்ற ஒலி நயமும்

2. ''நிழல் திகழ் மழுவினை யானையின் தோல்
அழல் திகழ் மேனியில் அணிந்தவனே
கழல் திகழ் சிலம்பொலி யலம்ப நல்ல
முழ வொடும் அருநட முயற்றினனே''

எனும் பாடலில் தமிழின் சிறப்பெழுத்துக்களில் ஒன்றான ழ-வின் பயனால் எழுகின்ற ஒலிநயமும் வாய்பாட்டுப் பயிற்சிக்கு மிகவும் உதவி செய்கின்றன.

கவிதையில் அமைந்துள்ள ஓசை, தொடைநயம் அமைப்பொழுங்கு போன்றவை கவிதையை எளிதில் மனதில் பதித்துக்

கொள்ளத் துணை செய்கின்றன. பல்வேறு இலக்கண அமைப்புகளை உள்ளடக்கிய உரை நடையை விட, ஒரே இலக்கண அமைப்பால் இயன்ற ஒரு கவிதையைக் கற்றுக்கொள்வது எளிமையல்லவா! இதே காரணத்தால்தான் குழந்தைகளுக்கும் மழலைப் பள்ளிகளிலும் தொடக்கநிலைப் பள்ளிகளிலும் ஒரே அமைப் பொழுங்கால் இயன்ற பாடல்களை (rhymes) மனனம் செய்யக் கற்பிக்கின்றனர். வயது வந்தவர்களுக்கு இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதாக இருந்தாலும், இரண்டாம் மொழியாகப் பயிலும் போது அவர்களுடைய அணுகு முறைகளும் குழந்தைகளைப் போலவே இருக்கின்றன. இதைப் பலருடைய ஆராய்ச்சிகளும் உறுதிப்படுத்தியுள்ளன. சான்றாக,

3. ''கோயில் முழுதும் கண்டேன் - உயர்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான் - தோழி
தேடியும் கண்டிலனே.
தெப்பக் குளம் கண்டேன் - சுற்றித்
தேரோடும் வீதி கண்டேன்
எய்ப்பால் வைப்பாம் அவனைத் - தோழி
ஏழையான் கண்டிலனே.''

இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழியமைப்பு, தொடை ஓசை போன்றவை ஒரு வாய்பாட்டுப் பயிற்சி போன்று அமைந்து எளிதில் மனனம் செய்ய உதவுகின்றன.

கவிதையில் அமைந்திருக்கும் சொல்லொழுங்கு எளிதாக மனதில் பதியும் வண்ணம் அமைகின்றது. இப்பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கவிதை அவ்வந் நிலைக்குப் பொருந்துமாறு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். சான்றாக,

4. ''நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூ கொண்டுவா

தங்கக் கிண்ணம் பார்த்து
தயிரும் சோறும் சேர்த்து
அள்ளி அள்ளி எடுத்து
அழகாய் வாயில் ஊட்டு''

எனும் பாடலை எடுத்துக் கொள்வோம். இப்பாடலில் ஓடி, ஏறி, கொண்டு, பார்த்து, சேர்த்து, அள்ளி, எடுத்து போன்ற வினை எச்ச வடிவங்கள் அமைந்திருப்பதால் குறிப்பிட்ட இலக்கண அமைப்பைக் கற்பிக்கவும் கற்கவும் எளிதாக அமைகின்றது. ஆகவே, வாக்கிய அமைப்புகளை எளிதில் தன்னகப் படுத்திக் கொள்ள கவிதை ஒரு துணையாக அமைகின்றது,

பாடலை மனனம் செய்து, அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லும் போது தெளிவாகவும் எளிதாகவும் பேசும் ஆற்றல் வளர்கின்றது. மொழியின் ஒலியனியல் நினைவிலி நிலையிலேயே தன்னகப்படுத்தப்படுகின்றது. இதனால் சரளமாகப் பேசுந்திறன் வளர்கின்றது.

கவிதையைப் பயில்தலும் அதைப் புரிந்து கொண்டு அழகை உணர்தலும் வெவ்வேறானவை. அதாவது, கவிதை நயத்தைப் புரிந்து கொள்ளாமலேயே ஒருவர் கவிதையை மனப்பாடம் செய்து கொண்டு அதைத் திருப்பிச் சொல்லிவிட முடியும். ஆனால் புரிந்துணர்தல் என்பது கவிதையை ஆழமாகப் படிப்பதைப் பொறுத் திருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே நயம் பாராட்டல் அமைகின்றது. பொருள்நயம், சொல்நயம், உவமைநயம், சிலேடைநயம் போன்றவைகளும் கற்பிக்கப்பட வேண்டும்.

நயம் பாராட்டுவதோடு கவிதையை வாழ்க்கைப் பிரச்சினை களின் பிரதிபலிப்பாகக் கொண்டால் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் சுருங்கக் கூறும் முறையால் நேரடியாக அணுகும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இது கவிதை மொழியைச் சிக்கனமாகக் கையாளுகின்ற பண்பை வெளிப்படுத்துவதோடு மாணவரின் கருத்து வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது. சான்றாக,

5. ''இரவிலே பெற்றோம்
இன்னும் விடியவே இல்லை''

6. ''செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம்தாம் கலந்தனவே''

எனும் இரு பாடலடிகளிலும் உள்ள சொற் சிக்கனத்தையும் அவை தரும் விரிந்த பொருள் நயத்தையும் கவிதை கற்பதால் தான் பெற முடியும்.

இப்பயன்களின் அடிப்படையில் இரண்டாம்/அயல் மொழிப் பாடத்திட்டத்தில் கவிதைக்கு இடம் அளிக்கப்பட வேண்டும்.

**கற்பித்தல் கூறுகள்**

இனிப் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற கவிதையை எவ்வாறு கற்பிக்கலாம் என்பதை நோக்குவோம்.

**கவிதையைத் தெரிவு செய்தல்**

பாடத்திட்டத்திற்கென கவிதையைத் தேர்ந்தெடுக்கும் போது மூன்று முக்கியக் குறிப்புகளை மனதிற் கொள்ள வேண்டும்.

அ. கவிதையின் காலம்

ஆ. கவிதையில் ஆளப்பட்டிருக்கும் மொழிநடை

இ. கவிதைக் கரு (பாடுபொருள்)

கவிதை இயன்றுள்ள மொழிநடையைப் பொறுத்த வரையில் சமகால இலக்கியம் – அதாவது இக்காலக் கவிதைகளையே தேர்ந்தெடுப்பது நல்லது. ஏனெனில் வகுப்பில் கற்றுத் தரப்படும் மொழி நடையும் இக்காலக் கவிதை நடையும் ஓரளவு ஒத்திருப்பதால் புரிந்து கொள்ள எளிமையாக இருக்கும். ஆயினும் சமகால இலக்கியம் மட்டுமே போதுமானதாக அமைந்து விடுவதில்லை. பயில்மொழிச் சமூகத்தின் பல்வேறு கூறுகளையும் மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்னும் குறிக்கோள் இருப்பதால்

அவ்வம் மொழி இலக்கியப் பரப்பையொட்டிக் காலவாரியாகக் கவிதைகளைத் தெரிந்தெடுத்து அமைத்துக் கொள்ளலாம். சான்றாகத் தமிழ் இலக்கியத் தெரிவில்,

அ. சங்க கால இலக்கியம்

ஆ. இடைக்கால இலக்கியம்

இ. பிற்கால இலக்கியம்

ஈ. தற்கால இலக்கியம்

எனத் தெரிந்தெடுக்கலாம். இவற்றையும் கற்பிக்கும்போது, இக் கால இலக்கியங்களிலிருந்து படிப்படியாகச் சங்ககாலக் கவிதை களுக்குச் செல்வதே நல்லது. ஏனெனில் மாணவர்கள் கற்றறிந்த இக்காலத் தமிழ் நடையிலிருந்து படிப்படியாக ஆழம் மிகுந்த பழைய இலக்கிய நடையை அறிந்து கொள்வதற்கு வசதியாக அமையும். அல்லாமல் முதலிலேயே சங்கத் தமிழ் நடையை அறி முகப்படுத்தினால் புதிதாக இன்னொரு மொழி கற்கின்ற ஒரு புதிய சூழலில் சிக்கிக் கொண்டது போன்ற உணர்வு மாணவரிடையே தோன்றி ஆர்வம் குன்றக் காரணமாகிவிடும்.

மாணவரின் வயது, கல்வித் தகுதி போன்றவற்றைக் கவனத் தில் கொண்டு கவிதைப் பாடுபொருளின் அடிப்படையில் கவிதை களைத் தெரிவு செய்து கொள்ளலாம். அதுவே சிறப்பு.

**கவிதை கற்பித்தல் முறை**

இனி கவிதை கற்பிக்கும் முறையைப் பார்ப்போம். கவிதை பெருப்பான்மையும் தெரிந்தெடுத்த சொற்களால் எளிதில் நினை விலிருத்திக் கொள்ளத்தக்க வகையில் எதுகை மோனை போன்ற தொடை நயங்களுடனும் ஓசை நயத்துடனும் அமைந்திருக் கின்றன. புதுக் கவிதைகள் பெரும்பான்மையும் இவ்விளக்கத்திற்கு மாறுபட்டு அமைந்துள்ளன. ஆயின் அவையும் வேறு பல ஒழுங்கு வரன்முறைகளுக்குள் அடங்குவனவே. முதலில் மாணவர்கள் கேட்டு உணரும் வகையில் பாடலை ஆசிரியர் வாய்மொழியாகவே படிக்க வேண்டும். ஏனெனில்,

அ. கவிதை முதலில் கேள்வியின்பமாகவே உணரப்படு கின்றது.

ஆ. கவிதையைப் புரிந்துகொள்ள, கவிதை மொழியைக் கேட்டுக் கேட்டுப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இ. கவிதையில் அமைந்திருக்கும் சுவைகளை - உணர்ச்சி வெளிப்பாடுகளை வாய்மொழி மூலமாகவே சரிவர உணர்த்த முடியும்.

ஈ. பாடல் பொருளோடு ஓசைக்குள்ள தொடர்பை விளக்கும் அடிப்படையே கவிதையை வாய்மொழியாகக் கூறும் போது தான் விளக்கமுறும்.

கவிதை, எதுகை, மோனை, ஓசையொழுங்கு, நயம் போன்ற வற்றையும், சொற்சிக்கனம், உவமை, உருவகம் போன்ற அணி நலங்களையுமே முக்கியமாகச் சார்ந்து நிற்கின்றது. புதுக்கவிதை களில் இவை இல்லாவிடினும், படிம, குறியீடு, உவமை, உரு வகம், போன்றவையும் 'காடன்ஸ்' (cadence) என்னும் குரல் ஏற்ற இறக்கமும் அமைந்துள்ளன. இவற்றை மனதிலுறும் வண்ணம் கற்பிக்க வாய்மொழியாகக் கூறுவதே நல்லது. அன்றி யும் கவிதையின் ஓசை, ஒலிப்புமுறை, குரல் ஏற்றத்தாழ்வு (உணர்ச்சி வெளிப்பாடு) போன்றவைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகே கவிதைச் சுவையை அறிய முடியும்.

கவிதையைப் பார்த்துப் படித்துப் புரிந்து கொள்வதை விடப் பலமுறையும் கேட்டுப் பழகுவதால் எளிமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் புத்தகத்தைப் பார்க்காமல் கேட்கும்போது கேட்பதிலேயே மாணவனுடைய கவனம் முழுமையும் செலுத்தப் படுகின்றது. அப்போது அவனுக்கு, ஏற்கனவே தெரிந்த சொற்கள் அக்கவிதையில் இருக்கின்றனவா எனக் கூர்ந்து கவனிக்க முடிகிறது. தெரிந்த சொற்களைக் கொண்டு பாடல் பொருளை ஊகித்து அறிந்து கொள்ள முயல்கிறான். இதற்கு மாறாகக் கவிதையைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும்

மாணவன் ஒரே நேரத்தில் கூர்ந்து கவனிக்கவும் கேட்கும் சொற்களைக் கையிலிருக்கும் புத்தகத்தில் தேடிக் கண்டு பிடிக்கவும் வேண்டியுள்ளது. இவ்விரு வேலைகளும் ஒரே வேளையில் நிகழ வேண்டியிருப்பதால் அவன் கவனம் பொருளை அறிவதிலும், தெரிந்த வார்த்தைகளை உணர்ந்து கொள்வதிலும் ஈடுபட முடியாமல் திண்டாட நேர்கிறது. அதனால்தான் முதலிலேயே பாடலைக் கையில் கொடுக்காமல், பாடலில் உள்ள சொற்கள் ஓரளவு பழகும் வரை ஆசிரியர் வாய்மொழியாகப் பயிற்றுவதே பரிந்துரைக்கப்படுகின்றது. கேட்டுணருந்திறன் மிகுந்த மாணவர் கற்பதில் சிறந்தவராய் இருக்கின்றார். புரிந்து கொள்வதற்குக் கவனித்தலும் பேசுதலும் இன்றியமையாதன என்பதைக் 'கேட்டுப் பேசல்' முறைமையும் வற்புறுத்துகின்றது.

கவிஞரின் அகமன உணர்தலும், அவற்றின் வெளிப்பாடுகளுமே கவிதையாய் அமைகின்றன. இவ்வுணர்வுகள் கவிதையின் வாயிலாக வெளிப்பட்டிருப்பதை மாணவர்களுக்குத் தெளிவாக உணர்த்துதற்கும், வாய் மொழியாகப் படிப்பதே நல்லது. அவ்வப்பாடல்களில் அமைந்திருக்கும் உணர்ச்சிச் சிறப்பு, ஓசை நயம் போன்றவற்றிற்கேற்ப ஆசிரியரும் ஆர்வத்தோடு பாடலைப் படிக்கும் போது மாணவர்களால் அப்பாடல விளக்கும் உணர்ச்சி வெளிப்பாட்டை உணர்ந்து கொள்ள முடியும்.

தெளிவாகவும் ஓசை நயத்தோடும் ஆசிரியர் பல முறையும் பாடலைச் சுத்தமாகப் படிக்கும்போது அது, மாணவர்கள் மனனம் செய்யத் துணை புரிகின்றது. அதே போலப் பின்னும் பாடல் பொருளை ஆசிரியரும் மாணவர்களும் விவாதிக்கும் போதும் ஒலியைப் பொருளோடு பொருத்திப் பார்க்கவும் உதவுகின்றது.

இவ்வாறு பலவிதங்களிலும் நன்மை பயப்பதால் கவிதை கற்பித்தலில் பாடலை மாணவர்கள் கையில் கொடுக்காமல் ஆசிரியர் உரக்க, ஓசை நயத்தோடு படிப்பதே முதலிடம் பெற வேண்டும். இதைத் தொடர்ந்து பாடல் பொருளைத் தொகுத்துச் சொல்வதும், பின்னர் ஒவ்வொரு அடியாக விளக்குவதும் நடக்க வேண்டும்.

அ. கவிதை கற்பிப்பதின் முக்கியக் குறிக்கோள்களான பயில்மொழியின் கவிதைப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கும் கவிதை நலம் பாராட்டுவதற்கும் உதவி செய்தல்.

ஆ. பயில் மொழிக் கவிஞர் வாழ்க்கைச் சிக்கல்களை அணுகும் முறையை அறிந்து கொள்ள உதவுதல்.

இ. பயில்மொழிக் கவிதையின் யாப்பு, அணி போன்ற கவிதைப் பண்புகளைப் புரிந்து கொள்ள உதவுதல்.

இவற்றில் கவிதைப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதும் கவிதை நலம் பாராட்டுவதுமே முக்கியக் குறிக்கோள்களாக அமைவதால் கற்பித்தலின் போதும் கலந்துரையாடலின் போதும் சில குறிப்புகளை மனதிலிருத்திக் கொள்வது தேவையாகிறது.

அ. கலந்துரையாடலின் போது அளவிற்கு அதிகமான விளக்கம் கொடுக்கக் கூடாது.

ஆ. குறிப்பிட்ட கவிதைக்கு மட்டுமே உள்ள சில இயல் பல்லா இயல்புகளுக்கு அளவிற்கு மிஞ்சி முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.

இ. மாணவர்கள் கவிதையைப் புரிந்துகொண்டு அதன் நலம் பாராட்ட ஆசிரியர் உறுதுணை புரிய வேண்டும்.

பாடுபொருளைத் தொகுத்துச் சொல்லிய பிறகு ஒவ்வொரு அடியாக ஆசிரியர் விளக்கிக் கூறவேண்டும். அவ்வாறு விளக்கும் போது கவிதையின் பாடு பொருளுக்குக் குறைந்த அளவே துணை புரியும் சொற்களுக்கு மிகுந்த விளக்கம் கொடுக்கத் தேவையில்லை. சான்றாக,

7. ''எய்ப்பில் வைப்பாம் அவனைத் — தோழி
ஏழையான் கண்டிலனே''

8. ''பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்
பெய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனுணுண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்''

எனும் பாடல்களில் 'எய்ப்பில் வைப்பாம்' எனும் தொடருக்கும் '-மின்' எனும் ஒட்டுக்கும் பொருள்மட்டும் கூறிப் பாடுபொருளோடு அதற்குள்ள தொடர்பினை விளக்கினாலே போதுமானது. 'எய்ப்பில் வைப்பும்', '-மின்' ஆகிய இரண்டும் மாணவர்கள் அடிக்கடி பயன்படுத்தும் வழக்கு இல்லை. அதனால் பொருளைக் கூறினால் போதும். அப்படியில்லாமல் 'எய்ப்பு', 'வைப்பு', 'மின்' என்பவைகளின் அடிச்சொல், அவைகளின் ஆக்கம், வருமுறை போன்ற பலவற்றையும் விளக்கிக் கூறவேண்டியது இல்லை. ஒருவேளை மாணவனுக்கு அதையும் விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டும் எனும் ஆர்வம் இருப்பின் அதைக் கலந்துரையாடலின் கடைசியில் ஆசிரியர் விளக்கலாம். மொழிப் பயன்பாட்டில் அடிக்கடி இடம்பெறாமல் இவ்வாறு எங்கோ ஒருமுறை வரும் இது போன்ற சொற்களுக்குக் குறைந்த அளவு விளக்கம் போதுமானது.

அதேபோலக் கவிதையில் அமைந்திருக்கும் புது அமைப்புக்களையும் அதிகம் விளக்க வேண்டியது இல்லை. அந்த அமைப்புகளுக்கு ஈடாக அவர்களுக்குத் தெரிந்த அவர்கள் ஏற்கனவே படித்த அமைப்புக்களைக் கூறி விளக்கலாம். சான்றாக,

9. ''தேவாதி தேவனையான் - தோழி
தேடியும் கண்டிலனே''.

இங்கு 'கண்டிலனே' எனும் அமைப்பு மாணவர்களுக்குத் தெரியாதது. இதை, கண்டு + இலன் + ஏ எனப் பிரித்து விளக்கம் கூறுவதை விட அவர்கள் அறிந்துள்ள 'காணவில்லை' எனும் அமைப்பிற்கு ஈடானது எனக் கூறுவது போதுமானது.

கவிதை கற்பித்தலின் முக்கிய நோக்கம் கவிதை நலம் பாராட்டுவது. என்பதால் விளக்கும் போதும், கலந்துரை

யாடலின் போதும் பாடு பொருளும், பாடுபொருளைக் கவிஞன் அணுகியிருக்கும் முறையும் விளக்கமுறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டியது ஆசிரியரின் கடமை. மாணவரின் தாய்மொழியில் அதே போன்ற பாடல் ஏதேனும் உள்ளதா எனக் கேட்கலாம். இதனால் மாணவர்களுக்கு ஆர்வம் தோன்றுவதோடு, திறனாய்வு நோக்கிலும் கலந்துரையாட வாய்ப்பு உண்டாகும்.

கிளைமொழிக் கூறுகளைக் கற்பித்தல்

பயில்மொழி ஓர் இருவழக்கு நிலை மொழியாக இருக்கு மானால், கவிதையில் இருவழக்குகளும் - பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் பயன்படுத்தப்படுமானால், மாணவர்கள் ஓரளவுக்குச் சிரமப்பட வேண்டியது வரும். அதிலும் இரண்டாம் மொழிப் பாடத் திட்டத்தில் எழுத்து வழக்கு மட்டும், அல்லது பேச்சு வழக்கு மட்டும் கற்பிக்கப்படுமானாலும் இப்பிரச்சினை எழுவது இயல்புதான். இருவழக்குகளுமே கற்பிக்கப்படுமாயின் இப் பிரச்சினையின் அளவு குறையும் கவிதைகளில் பயன்படுத்தப் பட்டுள்ள பேச்சு மொழிச் சொற்களுக்கு, அல்லது அமைப்பு களுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களை மாணவர் களையே தரச் சொல்லலாம்.

10. "... ... ... — மலை
யாள மின்னல் ஈழ மின்னல்
சூழ மின்னுதே
நேற்றும் இன்றும் கொம்பு சுற்றிக்
காற்றடிக்குதே ...
... ... ... ...
கூப்பிடுகுதே"
... ... ... ... ... ...

11. "பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே"

12. "இரண்டு வாரம் தேயுது
இறுதி நாளில் மறையுது

இரண்டு வாரம் வளருது
இறுதி நாளில் நிறையுது''

போன்ற பாடல்களில் வினைச் சொற்களின் எழுத்து வழக்கு அமைப்புகளைக் கொடுக்க வேண்டியதும் அவைகள் ஏன் பயன் படுத்தப் பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கங்களும் கொடுக்கப் பட வேண்டியது மிகத் தேவையான ஒன்றாகும். பேச்சு வழக்கைக் கற்பிக்கும் போது இம்மாதிரியான பாடல்களைக் கொடுப்பது சிறப்பாக அமையும்.

கவிதை கற்பித்தல், கவிதைத் தெரிவு, கவிதை கற்பித்தல் கூறுகள் என்னும் மூன்று நிலைகளை இக்கட்டுரையில் கண்டோம். ஒவ்வொரு ஆசிரியரின் கற்பிக்கும் முறையும் உத்தியும் வேறு பட்டு அமையும் எனினும் அடிப்படையாக அமையும் மேற்கூறிய மூன்றையும் மனதிற்கொண்டு, அவரவர் திறமைக்கும் கற்பனைக் கும் ஏற்றவாறு கவிதையைக் கற்பிக்கலாம்.

---

* இக்கட்டுரை இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் கிளை நிறுவனங்களான வட்டார மொழிப்பயிற்சி மையங்களில் கவிதை கற்பிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டது. இங்கு பயில்பவர்கள். (1) தமிழை இரண்டாம் மொழி யாகப் பயில்பவர்கள், (2) பள்ளி ஆசிரியர்கள். பயிற்சியின் இடைநிலை மற்றும் முதுநிலைகளில் கவிதை கற்பிக்கப் படுகின்றது.

பாடற் குறிப்புகள்

| | |
|---|---|
| 1. சிலப்பதிகாரம் | 2. திருஞான சம்பந்தர் |
| 3. கவிமணி | 4. தனிப்பாடல் |
| 5. மேத்தா, மு. | 6. குறுந்தொகை |
| 7. கவிமணி | 8. சிலப்பதிகாரம் |
| 9. கவிமணி | 10. முக்கூடற் பள்ளு |
| 11. பாரதியார் | 12. சகந்நாதன், ஏ கே. |

# வியங்கோள் வினை

பி. பெ. சுயம்பு.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

0. இலக்கண நூற்கள் கூறும் வியங்கோள் வினைபற்றிய விளக்கத்தினை இலக்கியவழக்குகளின் துணையால் ஆய்தலே இவண் நோக்கம்.

## 1.0. இயல்பு (Definition)

1.1. வியங்கோள் வினையை ஒரு விரவுவினையாக இலக்கண நூற்கள் [1] கருதுகின்றன.

1.2. 'வியம்' எனற்கு 'ஏவல்' எனப் பொருளுரைக்கும் உரையாளர்கள்[2], ''வாழ்த்தல் முதலிய பிற பொருளும் ''உடைத்தாகலான் வியங்கோளென்றது மிகுதி நோக்கிச் சென்ற குறி'' என விளக்கம் தருகின்றனர்.

1.3. 'விதித்தல்', 'வேண்டிக்கோடல்', 'வாழ்த்தல்' முதலிய பொருண்மைக்கண் வியங்கோள்வினை வருதலை இலக்கணிகள்[3] எடுத்துரைக்கின்றனர்.

1.4. இவ்வினை படர்க்கையில் மட்டும் வருமென்கிறது தொல்காப்பியம் (தொ. சொ. 6 : 29). ஆனால் பிற்காலத்தைய நன்னூல் (338), இலக்கணவிளக்கம் (239) முதலியன தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வியங்கோள் வருமெனக் கூறுகின்றன.

தொல்காப்பிய மொழியில் (Lauguage of Tolkāppiyam) முன்னிலையில் வியங்கோள் வினை வருதலைக் காணமுடிகின்றது.

'இற்றெனக் கிளத்தல்' (தொ. சொ. 1: 19)

'மரீஇய தொரால்' (தொ. சொ. 9: 47)

தொல்காப்பியத்திற்குப் பிந்திய இலக்கியங்களில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களிலும் வியங்கோள் வினை வருகின்றது. தொல்காப்பிய உரையாளர்கள் [4] இவ்வினை மூவிடங்களிலும் வருதலைத் தெரிவிக்கின்றனர்.

தன்மை

'யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே' (குறுந். 49:5)
'மடவ மாக மடந்தை நாமே' (குறுந். 20 : 4)

முன்னிலை

'நீ-நீடு வாழிய பெரும' (பதிற். 88:22)
மன்னிய பெருமநீ நிலமிசை யானே' (புறநா. 6:29)

படர்க்கை

'இவள்தந்தை வாழியர்' (நற்.8.4)
'செல்க தீயன சிறக்கநின் புகழே' (சூளா. சீய. 5:2)

தொல்காப்பிய மொழியில் முன்னிலையில் பயின்று வந்தபோதிலும் தொல்காப்பியர்,

'முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி''

என வரையறுக்கின்றார்.

இதனால், தொல்காப்பியருக்கு முந்தைய இலக்கண இலக்கிய வழக்குகளில் வியங்கோள் வினை படர்க்கையில் மட்டுமே வந்தது எனவும் தொல்காப்பியர் முந்தைய மரபினைப்பற்றி இலக்கணம் கூறியுள்ளார் எனவும் கருதலாம். மேலும், தம்கால வழக்கினை எடுத்துரைப்பதினும் முன்னோர் மொழியை எடுத்துரைப்பதற்குத் தொல்காப்பியர் முதலிடம் தந்துள்ளார் எனவும் கருதவியலும்.

பிற்கால வழக்கினைப் பற்றி நன்னூல், இலக்கணவிளக்கம் முதலியன வியங்கோள் வினை மூவிடங்கட்கும் உரித்து எனக் கூறுகின்றன.

1.5. வியங்கோள் வினை இன்ன காலத்திற்கு உரித்து எனத் தொல்காப்பியம் குறிப்பிடவில்லை, ஆனால் பிற்கால இலக்கண நூல்கள் [5] எதிர்காலத்தில் வருமெனக் கூறுகின்றன.

2.0. குறியீடு

தொல்காப்பியம் வியங்கோளை உணர்த்தும் குறியீட்டினைக் குறிப்பிடவில்லை.

நன்னூல் (338) '-க', '-ய', '-ர்' ஆகியவற்றை வியங்கோட் குறியீடுகளாகக் கூறுகின்றது.

இலக்கண விளக்கத்தில் (239) '-க', '-ய', '-ர்', '-அல்', -'ஆல்,' -'உம்', -'மார்,' -'ஐ' ஆகியவை வியங்கோளை உணர்த்தும் குறியீடுகளாகக் கூறப்பட்டுள்ளன. இலக்கணவிளக்கத்தின் குறியீடுகள் நன்னூல், உரையாளர்கள்,[6] இலக்கிய வழக்கு ஆகியவை பற்றிக் கூறப்பட்டவையாகத் தோன்றுகின்றன. இக்குறியீடுகள் விதித்தல், வேண்டிக்கோடல், வாழ்த்தல் ஆகிய பொருண்மைக்கண் வருதலை வைத்தியநாத தேசிகரின் உரை (இ.வி. 239) புலப்படுத்துகின்றது.

2.1. -க

வினையடியுடன் '-க' சேர்க்கப்பட்டு விதித்தல், வாழ்த்தல், வேண்டிக்கோடல் ஆகிய பொருண்மைக்கண் வருகின்றது.

விதித்தல்

அவன் செல்க

வாழ்த்தல்

அவள்வாழ்க

வேண்டிக்கோடல்

'கேட்டிது மறக்க நம்பி' (சீவக. 475:1)

2.2. -ய

வாழ்த்தற் பொருண்மைக்கண் - ய வருகின்றது.

யான்வாழு நாளும் பண்ணன் வாழிய' (புறநா. 173:1 மன்னிய பெருமநீ நிலமிசை யானே' ('புறநா. 6:29) உரையாளர் களின் இச்சான்றுகளில் -'இய' என்பதே வியங்கோட் குறியீடா கும். 'இய' வினையடியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

2.3.- ர்

வாழ்த்தற் பொருண்மைக்கண் இக்குறியீடு வருகின்றது.

'வாழியர்' (நற். 8:4) நடுக்கின்றி நிலியர்' (புறநா. 2:20) இச்சான்றுகளில் –'இயர்', வினையடியுடன் வருகின்றது. இலக் கணிகள் இதனை -'ர்' எனப் பிறழப் பிரித்திருக்கின்றனர்.

2. 4. - அல்

உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருநிலைகளில் விதித்தற் பொருண்மைக்கண் - 'அல்' - வருகின்றது (இ. வி. 46, 239)

உடன்பாடு

'வழாஅ லோம்பல்' (தொ. சொ. 1:13)

'மக்கட் பதடியெனல்' (திருக். 196:2)

எதிர்மறை

'மகனெனல்' (திருக். 196:1)

இச்சான்றுகளில் - 'அல்' பலபொருள் குறித்த வடிவமாக (Homophonous form) வினையடியுடன் சேர்ந்து வருகின்றது.

2. 5. - ஆல்

'மரீஇய தொரால்' (தொ. சொ. 9:47)

விதித்தற் பொருண்மைக்கண் வினையடியுடன் - 'ஆல்' வருகின்றது.

2. 6. - உம்

'வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்' (புறநா. 367 : 9)

'வேண்டும்' என்பதன் - உம் வாழ்த்தற் பொருளில் வருவதாக உரையாளர்கள்[7] கருதுகின்றனர். 'வேண்டும்' என்பது விருப்பத்தை வெளிப்படுத்தும் பொருண்மையில் வருதலைக் கருத்திற் கொண்டு இலக்கணிகள் இச்சொல்லின் ஈற்று உறுப்பான - 'உம்' ஐப் பிரித்து வியங்கோட் குறியீடாகக் குறிப்பிட்டிருக்கலாம். உண்மையில் 'வேண்டும்' என்னும் சொல்லே துணை வினையாக வியங்கோட் பொருண்மையில் வருகின்றது.

2. 7. - மார்

வாழ்த்தற் குறித்து இக்குறியீடு வருகின்றது.

'பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே

(புறநா. 375 : 20-21)

'நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே'

(நற். 64:13)

ஈண்டு வரும் - 'மார்' உண்மையில் படர்க்கைப் பலர் பால் குறியீடாகும்.[8]

2. 8. - ஐ

விதித்தற் பொருண்மைக்கண் வருகின்றது என நச்சினார்க்கினியரும் (தொ. சொ. 228) வைத்தியநாத தேசிகரும் (இ. வி. 46, 50).

'அஞ்சாமை யஞ்சுவ தொன்றின்'

(நச். தொ. சொ. 228; வைத். இ. வி. 46, 50)

'அஞ்சாமை யஞ்சுக ஒன்றின்' (நான்மணி. 27:1)

இச்சான்றுகளில் வரும் 'அஞ்சாமை' (< அஞ்ச் + ஆ + மை) தொழிற்பெயர் வடிவமாகும். இங்கு இவ்வடிவம் எதிர்மறைத் தொழிற்பெயராக வருகின்றது; வியங்கோளாக வருதல் இல்லை -'மை' என்பதே 'ஐ' எனப் பிறழப் பிரிக்கப்பட்டுள்ளது.

–'மை' வியங்கோட் குறியீடாக வருதலை நான்மணிக் கடிகை (27)யில் காணலாம்.

அஞ்சாமை அஞ்சுக ஒன்றின் தனக்கொத்த
எஞ்சாமை எஞ்சும் அளவெல்லாம் – நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினும் நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

இவண் எஞ்சாமை, கோடாமை, நாடாமை ஆகியன வியங்கோள் வினையாக வருகின்றன; எதிர்மறைக் குறியீட்டுடன் (–ஆ-) - மை வருகின்றது.

வியங்கோள் வினையைக் குறிப்பிடும் தொல்காப்பியம் அவ்வினையின் குறியீடு (Marker) பற்றி யாதும் குறிப்பிடவில்லை.-'அ' ஈற்றுச் சொற்களின் சந்திமாற்றங்களைக் கூறுமிடத்து (தொ. எ. 7:8) வியங்கோளைத் தொல்காப்பியம் கூறுகின்றது. இதனால் வியங்கோள் வினைகளின் ஈறு -'அ' எனவும் அமையும் எனத் தொல்காப்பியம் கருதுவதாகக் கொள்ளவியலும். மேலும், 'வாழிய' (தொ. எ. 7:9), 'முடிக' (தொ. பொ. 1:51), 'கூறல்' (தொ. சொ. 1:20), 'கொளாஅல்' (தொ. பொ. 7:34), 'இது ஆகியர்' (தொ. பொ. 2:19) போன்ற வியங்கோள் வடிவங்கள் தொல்காப்பிய மொழியில் காணப்படுகின்றன. இவற்றில் வரும் –'க', -'அல்', -'ஆல்' (-ஆஅல்); –'இயர்' ஆகியன வியங்கோட் குறியீடுகளாகக் கொள்ளத்தக்கன.

வியங்கோட் குறியீடுகள் தொல்காப்பிய மொழியில் காணப்படினும், இலக்கணத்தில் அவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் பிற்கால இலக்கணிகள் குறியீடுகளைக் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியச் சொல்லதிகாரம் தொடரனியல் நோக்கிலும் பிற்கால இலக்கணநூற்களின் சொல்லதிகாரம் உருபனியல் நோக்கிலும் விளக்கப்பட்டிருப்பதே இத்தகைய வேற்றுமைக்குக் காரணமாகும்.

3. பாகுபாடு

இலக்கணநூற்கள் வியங்கோள் வினைக்கு எவ்விதமான பாகுபாட்டினையும் பருமநிலையில் மேற்கொள்ளவில்லை. ஆயினும் உரையாளர்கள்[9] 'ஏவல்கண்ணிய வியங்கோள்' ஏவல் கண்ணாத வியங்கோள்' என்னும் இருவகைப் பாகுபாட்டினை அமைத்துள்ளனர். எழுத்ததிகாரத்தில், 'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி (7:8) எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டிருத்தலே இவ்வாறு பகுத்திட உரையாளரைத் தூண்டியிருக்கின்றது. வியங்கோட் குரித்தாய பொருண்மைகளுள் 'வாழ்த்தல்' ஏவல் கண்ணாத வியங்கோள் என்னும் பகுப்பினுள் அடங்குமென இளம்பூரணர் (தொ. எ. 211) கருதுகின்றார். விதித்தலையும் வேண்டிக் கோடலையும் ஏவல் வினையின் கீழ் அடக்கிக் கூற முடியும்; எனினும் வாழ்த்தலை ஏவல் வினையுள் அடக்கிக் கூறமுடியவில்லை என ச. அகத்தியலிங்கம் (1979:99-100) கூறுதல் ஈண்டு குறிக்கத்தக்கது.

குறிப்புக்கள்

1. தொ. சொ. 6:25, நன். 330, இ. வி. 236, மு. வீ. 616, சுவா. 51.

2. இளம். தொ சொ. 217, சேனா. தொ. சொ. 222, நச். தொ. எ. 210, கல். தொ. சொ. 228, வைத். இ.வி. 236, சங்கர. நன். 338.

3. சேனா. தொ. சொ. 226, நச். தொ. சொ. 228, தெய்வ. தொ. சொ. 220, வைத். இ. வி. 239, சங்கர. நன். 338.

4. இளம். தொ. சொ. 221, சேனா. தொ. சொ. 226, நச். தொ. சொ. 228, கல். தொ. சொ. 228.

5. நன். 145, இ. வி. 50.

6. சேனா. தொ. சொ. 226 நச். தொ. சொ. 228, கல். தொ. சொ. 228.

7. நச். தொ. சொ. 228

8. சிவஞானமுனிவர் இ. வி. சூறா. ப. 125.

9. இளம். தொ. எ. 211, நச். தொ. சொ. 228, கல். தொ. சொ. 228, வைத். இ. வி. 239.

### துணை நூல்கள்


1. இளம்பூரணர். 1969. தொல்காப்பியம் - எழுத்ததிகார
கழகவெளியீடு, சென்னை.

2. — 1973. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழ
வெளியீடு, சென்னை.

3. சேனாவரையர், 1974. தொல்காப்பியம்- சொல்லதிகார
கழகவெளியீடு, சென்னை.

4. நச்சினார்க்கினியர். 1972. தொல்காப்பியம் - எழுத்த
காரம், கழகவெளியீடு, சென்னை.

5. — 1962. தொல்காப்பியம் - சொல்லதிகாரம், கழகவெ
யீடு, சென்னை.

6. கல்லாடனார். 1964. தொல்காப்பியம் - சொல்லதிகார
கழக வெளியீடு, சென்னை.

7. தெய்வச்சிலையார். 1974. தொல்காப்பியம் - சொல்ல
காரம், கழக வெளியீடு, சென்னை.

8. சங்கரநமச்சிவாயர். 1980. நன்னூல், கழகவெளியீடு, சென்னை.

9. சிவஞானமுனிவர். 1952. இலக்கண விளக்கச் சூறாவளி, ஆறுமுகநாவலர் பதிப்பு, சென்னை.

10. சேயொளி. (பதி.) 1973. இலக்கண விளக்கம், கழக வெளியீடு, சென்னை.

11. சுப்பிரமணியன், ச. வே. (பதி.). 1978. தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை.

12. திருப்பாற்கடனாதன். 1972. முத்து வீரியம், கழக வெளியீடு, சென்னை.

13. சண்முகம், செ. வை. 1975. சுவாமிநாதம், அண்ணா மலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

14. Israel, M. 1973. *The Treatment of Morphology in Tolkappiyam*, Madurai University, Madurai.

15. Agesthialingom, S. 1979. *A Grammar of Old Tamil*, Annamalai University, Annamalainagar.

## பிறமொழியுள் தமிழ்ச்சொல்

உலகத்தில் எழுத்தானியன்ற பழைய நூல்களிடைக் காணப் பெறும் பண்டைய திராவிடச் சொல் மயிலின் பெயர்க்குரிய சொல்லாகும். கி. மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தர்ஷிஷ், உபரி முதலிய இடங்களிலிருந்து மன்னன் சாலமனுடைய கப்பல் களில் ஏற்றிக்கொண்டு வரப்பட்ட வாணிபப் பொருள்களுள் மயிலிறகும் ஒன்றாகும் என்பது எபிரேய விவிலிய நூலிற் காணப் படும் சான்றாகும். இவ்விடத்தில் மயிலிறகு என்பதற்கு அரசர் பகுதியில் 'துகி' என்ற சொல்லும் வரலாற்றுப் பகுதியில் 'தூகி' என்ற சொல்லும் வருகின்றன.

—கால்டுவெல் ஒப்பிலக்கணம்

## பகுதிப்பொருள் விகுதிகள்

பகுதிப் பொருள் விகுதிகளை, தனிமொழியில் நிகழும் பகுதிப் பொருள் விகுதிகள், தொடர் மொழியில் நிகழும் பகுதிப்பொருள் விகுதிகள் என இரு வகையாகப் பிரிக்கலாம். தனிமொழியில் நிகழும் பகுதிப்பொருள் விகுதிகளைச் சார்ந்து நிற்கும் பகுதிகள் இரு திறத்தனவாகும்.

ஒரு திறத்தன விகுதிகளைக் கண்டிப்பாக வேண்டி நிற்கும். எடுத்துக்காட்டாக கூடு/கூட்டு (<கூள்—து/த்து, DED, 1595), காற்று (<கால்-த்து), தோண்டு (< தோள் + ந்து , தோளா முத்திற்றெண்கடற் பொருநன் (அகம். 137:13) கேட்பினும் கேளாத்தகையவே கேள்வியால், தோட்கப்படாத செவி (குறள். 418) ஆகியவை இவ்வகையில் அடங்கும். தெலுங்கில் கூடு (<கூழ்-து) 'உணவு' போன்ற சொற்களில் நிகழும் துகரக் கிளவி யையும் பகுதிப்பொருள் விகுதியாகவே துணியலாம். திராவிட மொழியியலார் இவ்வெடுத்துக் காட்டுக்களில் ழகரம் டகரமாகச் சந்தியின் உந்துதல் இல்லாமலேயே திரிந்தது என்று கருதுவர். இன்னொரு திறத்தன இத்தகைய விகுதிகளை வேண்டியும் வேண்டாமலும் நிகழும்: குன்று-குன்றம்; வான்-வானம்.

தொடர்மொழியில் நிகழும் பகுதிப்பொருள் விகுதி நிலை மொழியாகிய தனிமொழியீற்றில் உள்ள பகுதிப்பொருள் விகுதி யின் மாற்றுருபனாக அமையும். எடுத்துக்காட்டாக, புடலை (<புடல்-ஐ) என்னும் தனி மொழியீற்றில் நிகழும் -ஐ என்னும் பகுதிப் பொருள் விகுதி புடலங்காய் (<புடல்-அம்-காய்) என்னும் தொடர்மொழியில் -அம் எனத் திரிந்து நிற்கும். இதில் -ஐ, -அம் ஆகிய இரண்டும் துணைநிலை வழக்கில் அமைந்தவையாகும். வரலாற்றுநிலையில் இவ்விரண்டும் ஆகு என்னும் வினையின் பொருண்மையை உணர்த்தியவையாகும்.

டாக்டர் இரா. கோதண்டராமன்
''பகுதிப்பொருள் விகுதிகள்'' தமிழியல்
9.140-41.

மொழியியல் 6. 2. (1982)

# ஒலியன் நிலையும் ஒலியனியலும்

**என். இராமசாமி**

**இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்.**

அமைப்பு மொழியியலாளரின் கொள்கைப்படி ஒரு மொழியின் ஒலியமைப்பானது மூன்று நிலைகளைக் கொண்டதாகும். அவை யாவன : ஒலிநிலை, ஒலியன் நிலை, உருபொலியன் நிலை. இம்மூன்றும் ஒன்றுக் கொன்று தொடர்புடையன.

மொழியியல் கோட்பாட்டு வளர்ச்சிக் காலக்கட்டத்தில, அமைப்பு மொழியியலாளருக்குப் பின் வந்த பிறப்பு மொழியிய லாளர்கள், ஒலியமைப்பில் மேற்கூறிய மூன்று நிலைகளும் இருப்பது அவசியம் இல்லை என்று கூறியுள்ளனர். இக் கட்டுரையில், அமைப்பு மொழியியலாளர்களின் ஒலியனியல் கொள்கைகளில் ஒன்றான 'ஒலியன் நிலை' என்பதை எடுத்துக் கொண்டு, இவ்வொலியன் நிலை எவ்வாறு பிறப்பு மொழியிய லாளர்களால் மறுக்கப்பட்டுள்ளது என்பதைக் காணலாம்.

ஒவ்வொரு ஒலியனும் ஒரு ஒலியோடுத் தொடர்புடையதாக இருக்க வேண்டும் என்பது அமைப்பு மொழியியலாளர்களின்

ஒலியனியல் கொள்கைகளில் ஒன்று. ஒரு சொல்லை எடுத்துக் கொண்டால், அச்சொல்லிலுள்ள ஒலியன்களின் எண்ணிக்கையும் ஒலிகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்கவேண்டும். அப்பொழுது தான் ஒவ்வொரு ஒலியனும் அதற்குண்டான ஒலியோடுத் தொடர்புடையதென்று கூற முடியும். எடுத்துக் காட்டாக /paṭi/ 'படி' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால், இதில் நான்கு ஒலியன்களும் [p∧ṛi] என்ற நான்கு ஒலிகளும் இருப்பதாகக் கொண்டால், ஒவ்வொரு ஒலியனும் ஒரு குறிப்பிட்ட ஒலியோடுத் தொடர்புடையதென்று கூறமுடியும். ஒவ்வொரு ஒலியனும் ஒரு ஒலியோடுத் தொடர்புடையதென்பதைக் கீழ் வருமாறு காட்டலாம்.

/ p a ṭ i /
↓ ↓ ↓ ↓
[ p ∧ ṛ i ]

ஆனால் சில சொற்களிலுள்ள எல்லா ஒலியன்களுக்கும் தொடர்புடைய ஒலிகள் காணப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக 'படித்தான்' என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் /paṭittaan/ என்று ஒலியன் நிலையிலும் [paṛittāã] என்று ஒலிநிலையிலும் எழுதலாம். இச்சொல்லிலுள்ள எல்லா ஒலியன்களோடும் தொடர்புடைய ஒலிகள் உள்ளன. ஆனால் [n] என்ற ஒலியோடுத் தொடர்புடைய ஒலி காணப்படவில்லை.

/ p a ṭ i t t aa n /
↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓ ↓
[ p ∧ ṛ i t t aã ϕ ]

இவ்வெடுத்துக் காட்டின்படி முன்னர் கூறப்பட்ட அமைப்பு மொழியியலாளரின் கொள்கையான, ஒரு சொல்லில் ஒவ்வொரு ஒலியனோடும் தொடர்புடைய ஒலி அமையப்பெறும் என்பது மறுக்கப்படுகின்றது.

மேலே சொன்ன ஒலியனியல் கோட்பாட்டோடுத் தொடர்புடைய மற்றொன்றை இங்குக் காணலாம். ஒரு ஒலியன், ஒலியன் நிலையில் எங்கெல்லாம் வருகின்றதோ அங்கெல்லாம் அவ்வொலியனோடுத் தொடர்புடைய இயல்புகளும் ஒலிநிலையில் வர வேண்டும். பெரும்பான்மையான இடங்களில் ஒலியனோடுத் தொடர்புடைய ஒலியின் இயல்புகள் வரக் காண்கின்றோம். ஆனால், சில நேரங்களில் இக்கோட்பாட்டிற்கு மாறான அமைப்புக்களை மொழியில் காண நேரிடுகின்றது. எடுத்துக்காட்டாக 'மனம்' என்ற சொல்லிலுள்ள ஒலியன்களின் இயல்புகளையும் அவ்வொலியன்களோடுத் தொடர்புடைய ஒலிகளின் இயல்புகளையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

| /ம் | அ | ன் |
|---|---|---|
| — உயிர் | + உயிர் | — உயிர் |
| + நெகிழ் | — மேல் | + நெகிழ் |
| — தொடர் | + பின் | — தொடர் |
| + முன் | + கீழ் | + அணரி |

| அ | ம்/ 'மனம்' |
|---|---|
| + உயிர் | — உயிர் |
| — மேல் | + நெகிழ் |
| + பின் | — தொடர் |
| + கீழ் | + முன் |

[ம் அ ன் அ] 'மனம்'

[mʌ ñʌ.]

| | | | |
|---|---|---|---|
| — யிர் | + உயிர் | — உயிர் | + உயிர் |
| + நெகிழ் | — மேல் | + நெகிழ் | — மேல் |
| — தொடர் | + பின் | — தொடர் | + பின் |
| + முன் | + கீழ் | + அணரி | + கீழ் |
| | | | + மூக்கு |

மேலேயுள்ள ஒலியன்களையும் அவைகளோடுத் தொடர்புடைய ஒலிகளையும் அவைகளுக்குண்டான இயல்புகளையும் கவனித்தால் சொல்லின் இறுதியில் உள்ள /ம்/ என்ற ஒலியனோடுத் தொடர்புடைய ஒலியும், அவ்வொலிக்குண்டான இயல்பு

களும் காணப்படவில்லை. இவ்வெடுத்துக்காட்டின் மூலம் அமைப்பு மொழியியலாரின் ஒலியனியல் கோட்பாடு இங்கும் மறுக்கப்படுகின்றது. இவற்றிலிருந்து ஒலியன் நிலைக்கும் ஒலி நிலைக்கும் சில நேரங்களிள் தொடர்பில்லாமல் இருப்பதை அறிய முடிகின்றது அல்லவா!

ஒலிநிலை, ஒலியன்நிலை, உருபொலியன் நிலை ஆகிய மூன்று நிலைகள் ஒலியனியலில் இருப்பதால் சில நேரங்களில் ஒரு மொழியின் ஒலிக் கொள்கையை நன்கு விளக்க முடிவதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக தமிழில் உள்ள மூக்கொலிகளையும் மூக்கு மெய்ப்பிரிதாதல் (nasal assimilation) விதியையும் பார்க்கலாம்.

தமிழில் ம், ந், ன், ண், ஞ், ங், என்பன மூக்கொலிகள். பேச்சுத்தமிழில் /ம், ன், ண்/ என்ற மூக்கொலிகளை ஒலியன் களாகவும் மற்ற மூக்கொலிகளை மாற்றொலிகளாகவும் அமைக்க லாம். [ந், ஞ், ங்] என்ற மூக்கொலிகளை /ன்/ என்ற மூக் கொலியனின் மாற்றொலியாக அமைக்கலாம். இப்பொழுது இம் மூக்கொலிகள் சொற்சேர்க்கையில் அடையும் மாற்றங்களையும் அம்மாற்றங்களைச் சொல்லும் விதிகளையும் காணலாம்.

/என் + பேரு → எம்பேரு/ [என்னுடைய பெயர்]

/உன் + பேரு → உம்பேரு/ [உன்னுடைய பெயர்]

/அவன் + போனான் → அவம்போனான்/

இச் சொற்களில் /ன்/ என்ற மூக்கொலியன் /ம்/ என்ற மூக்கொலி யனாக மாற்றமடைகின்றது.

1. /ன்/ → /ம் /-ப்

அவன் + தான் → அவந்தான்

நான் + தான் → நாந்தான்

இச் சொற்களில் /ன்/ என்ற மூக்கொலியன் [ந்] என்ற மூக் கொலியாக மாறுகின்றது.

2. /ன்/ → [ந்] / –த்

கடன் + காரன் → கடங்காரன்.

என் + கூடெ → எங் கூடெ

இச்சொற்களில் /ன்/ என்ற மூக்கொலியன் [ங்] என்ற மூக்கொலியாக மாறுகின்றது.

3. /ன்/ → [ங்] / -க்

இம்மூன்று விதிகளும் மூக்கு ஒலிமெய்ப்பிரிதாதலைக் குறிக்கின்றன. மொழியில் நடக்கும் மாற்றம் ஒன்று, ஆனால் விதிகள் மூன்று. அமைப்பு மொழியியல் கோட்பாட்டின்படி இம்மூன்று விதிகளையும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்ல முடியாது. ஏனெனில் விதி- 1 உருபொலியன் நிலையிலும் மற்ற இருவிதிகளும் ஒலி நிலையிலும் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லுகின்றன. ஒரு மாற்றத்தை மூன்று விதிகள் இருவேறு நிலைகளில் சொல்லப்படுமானால், அது எவ்வாறு ஒலிக் கொள்கையின் உண்மையான விளக்கமாகும். இந்த இடையூறு ஏனென்றால் ஒலியன் என்ற நிலை, உருபொலியன் நிலைக்கும் ஒலிநிலைக்கும் இடையில் வருவதால்தான். ஒலியன் நிலை இல்லையெனில் மூன்று விதிகளையும் ஒரே விதியாகச் சேர்த்துச் சொல்லிவிடலாம்.

இக்கட்டுரையில் ஒலியன் நிலைக்கும் ஒலிநிலைக்கும் சில நேரங்களில் தொடர்பில்லாமல் இருப்பதையும், ஒலியன்நிலை இருப்பதால் மொழியின் ஒலிக் கொள்கையை நன்கு விளக்க முடிவதில்லை என்பதைப் பற்றியும் பார்த்தோம்.

### துணை நூல்கள்

1. Anderson, S.R. 1974. *Organization of Phonology*, New York: Academic Press.

2. Chomsky, N. 1964. *Current Issues in Linguistic Theory*, Mouton: The Hague.

## குமரித் தமிழில் சில இலக்கணக்கூறுகள்

1. நான்காம் வேற்றுமை உருபன்: - இல்
   எ. கா. வீட்டில் (வீட்டுக்கு)
2. ஐந்தாம் வேற்றுமை உருபன்கள்
   1. -லெண்டு : காட்டுலெண்டு (காட்டிலிருந்து)
   2. -லெண்ணு : காட்டுலெண்ணு (காட்டிலிருந்து)
3. ஆறாம் வேற்றுமை உருபன்கள்
   1. - {அ / உ} க்க எ. கா. எனக்க (என்னுடைய)
      அவனுக்க (அவனுடைய)
   2. அ எ. கா. அவள (அவளுடைய)
      இராமன (இராமனுடைய)
4. ஏழாம் வேற்றுமை உருபன்: - இ
   எ. கா. வீட்டி (வீட்டில்)
   காட்டி (காட்டில்)
5. நிகழ்கால உருபன்: -ϕ-
   எ. கா. படியான் (படிக்கிறான்)
   ஓடவன் (ஓடுகிறவன்)
   திரியாவ (திரிகிறார்கள்)
6. எதிர்கால உருபன்கள்: 1) -க்குவ்-
   2) -ச்சுவ்-
   எ. கா. குடுக்குவான் (குடுப்பான்)
   ஓடிச்சுவா(ள்) (ஓடிப்பாள்)
7. எதிர்மறை உருபன்: -ஆத்த்-
   எ. கா. செய்யாத்த (செய்யாத)
   படிக்காத்த (படிக்காத)
8. செயவென் எச்ச உருபன்: -ச்ச-
   எ. கா. படிச்ச (படிக்க)
   நடச்ச (நடக்க)

குமரி மாவட்ட மொழியியல் கள ஆய்வுக் குறிப்புக்களிலிருந்து தொகுக்கப்பட்டவை:

நன்றி: மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

# பல மொழிகளிடையே தமிழ்மொழி வளர்ச்சி

கி. கருணாகரன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இந்திய நாட்டுச் சூழலில் நான்கு மொழிக்குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. இவற்றில் பல பேச்சு வழக்கினை மட்டுமே கொண்டு செயற்பட்டு வருகின்றன. இது போன்ற மொழிகளுள் பல, பழங்குடி மக்களாலும், சிறுபான்மைச் சமூகப் பிரிவினராலும் பேசப்படுபவையாகும். பதினைந்து பதினாறு மொழிகளே எழுத்து வழக்கு பெற்று, இலக்கிய இலக்கண வளம் நிறைந்த மொழிகளாக உள்ளன. இம்மொழிகள் தேசிய மொழிகளாகவும் இவற்றுள் ஒரே ஒரு மொழி மட்டும் ஆட்சிமொழியாகவும் அதற்குத் துணையாக ஆங்கில மொழியும் பயன்பட்டு வருவதைக் காண்கிறோம். இந்தியாவின் பல பகுதிகள் நாட்டு விடுதலைக்குப் பின் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டவையாகும். ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு பெரும்பான்மை மொழி வழக்கில் உள்ளது. இம்மொழியே அம்மாநிலத்தின் அதிகார பூர்வமான ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் வெவ்வேறு மொழிக்

குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் சில வழக்கில் இருந்து வருகின்றன. அதாவது, நம் நாட்டின் எல்லா பகுதிகளும் இரண்டுக்கும் மேறபட்ட மொழி வழக்குகளைக் கொண்டு விளங்கு கின்றன. இதனால், இந்தியா முழுவதும் பலமொழி வழக்கு நிலை (Multilingualism) பரவலாக இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் தமிழ் மொழி பெரும்பான்மை மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருப்பதோடு இன்றைய மொழிப் பயன்பாட்டில் கல்வித்துறை, பரவல் செய்தித் தொடர்பு, நீதித்துறை போன்ற பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

இந்தியா அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் பல்லாண்டு காலம் தொடர்ந்து இருந்து வந்தது. இதனால் சில அன்னிய மொழி கள் நம்மிடையே நிறைந்த செல்வாக்கோடு விளங்கி வந்தன. இவ்வாறு செல்வாக்குப் பெற்ற மொழிகளுள் ஆங்கிலம் தன்மை யானது. நாடு விடுதலை பெற்ற பிறகும் கூட, ஆங்கிலத்தின் செல்வாக்கு ஆட்சித்துறை, கல்வித்துறை, நீதித்துறை போன்ற பல பொது அமைப்புக்களில் சிறிதும் குறையாமல் இருந்து வந்தது. மொழிப்பயன்பாட்டில் ஆங்கிலம், மற்ற இந்திய மொழி களைக் காட்டிலும் ஆற்றல் பெற்றது என்பது உண்மையே என்றாலும் இந்நிலைக்கு மற்றொரு காரணம் இந்தியாவில் வாழும் பல்வேறு சமுதாயப் பிரிவினரின் மொழி மனப்பாங்குகளே (Language Attitudes) ஆகும். சிறுகச்சிறுக, இத்தகைய மனப் பாங்குகள் குறைய ஆரம்பித்த நிலையில், தற்போது தேசிய மொழிகளாகக் கருதப்பட்டு வரும் மொழிகளின் வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. இன்றைய நிலையில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமுதாய அறிவியல் வளர்ச்சிகளை இம்மொழிகளின் வாயிலாக அறிந்து கொள்வது, கற்பிப்பது ஆகியவை ஆரம்ப காலத்தில் நமக்கு எளிதாகத் தோன்றவில்லை. ஆனால், இம்மொழிகளின் பல்வேறு பிரிவுகளில் புதுமையாக்கம். நிலைபேறாக்கம் போன்றவை ஓரளவிற்கு நடைபெற்ற நிலையில் மேற்கூறிய அறிவியல் வளர்ச்சிகளைக் கற்பிப்பது - கற்றுக் கொள்வது எளிதாக அமையத்தொடங்கி இருக்கிறது. தமிழ் மொழியின் இன்றைய நிலையும் இதுவேயாகும்.

அன்னியராதிக்கத்தின் கீழ் பல்லாண்டு காலம் இருந்ததற்காக எந்த ஒரு நாடும் அதன் விடுதலைக்குப் பிறகும்கூட, அன்னிய மொழிகளை மொழிப்பயனில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும் என்ற நியதியோ கட்டுப்பாடோ இருந்ததில்லை - இந்நிலை இருக்கவும் கூடாது. அதே சமயத்தில், நாடு விடுதலை பெற்று விட்டது என்பதற்காக மொழிப் பயன்பாட்டிலிருந்த அன்னிய மொழிகளை உடனடியாக நீக்கிவிடுவது விடுதலை பெற்ற ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு - அந்நாட்டு மொழிகளின் வளர்ச்சிக்கு உண்மையிலேயே துணைசெய்யாது. ஆகவே, இவ்விரண்டு நிலை களையும் திடீரென மேற்கொள்ளாமல் மொழிப் பயன்பாட்டின் பலதுறைகளில். அன்னிய மொழியோடு தேசிய மொழிகளையும் ஈடு படுத்தி அன்னிய மொழிகள் பெற்றுள்ள மொழித்திறனை, செல் வாக்கினைத் தேசிய மொழிகளும் பெற்றிடும் வகையில் அவற்றின் வளர்ச்சிக்கு வழிகாண்பது வரவேற்கத் தக்கதாகும். தேசிய மொழிகளைப் பேசும் பல்வேறு சமுதாயப் பிரிவினரின் மொழி மனப்பாங்குகளை அறிந்து, அதற்கேற்றவாறு மொழிக் கொள்கை களை - திட்டங்களைச் செயல்படுத்துதல் விவேகமானதாக அமைவ தோடு தேசிய மொழிகளின் உண்மையான வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை. சமுதாய வளர்ச்சியில் மொழியின் பங்கு எவ்வளவு சிறப்பானதோ அந்த அளவுக்கு, அச்சமுதாயம் பயன்படுத்தும் மொழிகளின் வளர்ச்சியில் சமுதா யத்தின் பங்கும் சிறப்பு வாய்ந்ததாகும். ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியினுடைய மொழிப்பயன்பாட்டைக் (Language use) கருத்தில் கொண்டே பெரும்பாலும் அளவிடப் படுகிறது. ஒரு மொழி எந்த அளவுக்கு சமுதாயத்தின் பணிகளை (Social Functions) நிறைவேற்றுவதில் பங்கு பெறுகிறது என் பதைப் பொறுத்தே அதன் உண்மையான வளர்ச்சி வெளிப் படுகிறது. ஆங்கிலம் போன்ற சிலமொழிகள் உலக மொழிகளாக விளங்குகின்றன என்று சொன்னால், அதற்குக் காரணம் அம் மொழிகள் மொழிப்பயன்பாட்டில் பெற்றுள்ள நவீன வளர்ச்சியே யாகும். இம்மொழிகளில் காணப்படும் சொல்வளம், சொற் றொடர் வளம், பொருள் வளம். எளிமை வளம் போன்றவை வேகமாக வளர்ந்து வரும் சமுதாய, அறிவியல் முன்னேற்றங்

களை எளிதிலும் விரைவிலும் பெருமளவிலும் வெளிப்படுத்து வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன எனலாம். ஆனால் இதுபோன்ற நிலை, இந்திய மொழிகளில் காணப்படவில்லை யென்றே சொல்லவேண்டும். தமிழ் போன்ற, சில மொழிகள் நீண்ட நெடிய இலக்கண இலக்கியப் பாரம்பரியத்தைப் பெற் றுள்ள தொன்மை மொழிகளாகும். ஆனால், நாளும் வளர்ந்து வரும் - மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, இம்மொழிகள் அவற்றின் திறனை வளர்த்துக் கொள்ளவே இல்லை. இம் மொழி கள் தம்திறனை வளர்த்துக்கொள்ளவில்லை என்று சொல்வதை விட அம்மொழிகளைப் பேசும் சமுதாயம் அவற்றைத் திறன்மிக்க வகையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று சொல்வதே சாலப் பொருந்தும். விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்து வந்துள்ள வரலாற்றினை நோக்கும்பொழுது, இம்மொழி மொழிப்பயன் பாட்டில் அவ்வப்போது உரிய இடத்தைப் பெறாமல் செயல் படுத்தப்பட்டு வந்துள்ளதை நம்மால் உணர முடிகிறது. குறிப்பாக கல்வித்துறை, ஆட்சித்துறை, நீதித்துறை, பொருளாதாரத் துறை போன்றவற்றில் மிகவும் குறைந்த அளவிலேயே தமிழின் பங்கு இருந்து வந்துள்ளது. இந்திய மொழிகளின் மொழிப்பயன்பாட்டு வரலாற்றினை நோக்கும் பொழுதும் இத்தகைய வழக்கு நிலை இருந்து வந்துள்ளதையே நம்மால் பெருமளவில் காணமுடிகிறது. இந்நிலை 20-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நீடித்து வந்துள்ளது. 1960 க்குப் பிறகே இந்திய மொழிகளின் வளர்ச்சி குறித்துத் திட்டங்கள் சில மேற்கொள்ளப்பட்டன. இன்றும் இது போன்ற திட்டங்கள் அரசாங்கத்தாலும் வேறுசில நிறுவனங் களாலும் தனி நபர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்மொழி வளர்ச்சிக்கென, தமிழக அரசு ''தமிழ் வளர்ச்சி இயக்கம்'' என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்தி அதன் வாயிலாகச் சிலத் திட்டங்களைச் செயல்படுத்தி அதன் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து வருகிறது. இதைப் போன்றே மொழிபெயர்ப்பு, சட்டத் தமிழ், அகராதி, போன்றவற்றை வளர்க்கச் சில அமைப்புக்களை உருவாக்கி அவற்றின் மூலம் தமிழ் மொழி திறன் மிக்க மொழியாக அமையும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்தியும் வருகிறது.

இன்றையச் சூழலில் தமிழ் மொழியில் குறிப்பாக மொழிப்பயன்பாட்டில் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப ஓரளவிற்குப் பல புதிய சொற்களையும் பழைய சொற்களில் சில மாற்றங்களைச் செய்து அவற்றையும் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளமையைக் காண்கிறோம். ஆட்சித்துறைக்கென கலைச்சொல் அகராதிகள் சில வெளியிடப்பட்டும் வந்துள்ளன. ஆனால் இவ்வகையான கலைச்சொற்கள் போன்றவை மொழிப்பயன்பாட்டில் ஓரளவிற்கு இடம்பெற்று வந்தபோதும், அவை ஆற்றல் மிக்கவகையில் பயன்படுகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, அண்மைகாலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட பல்வேறு சொற்கள், சொற்றொடர்கள், கலைச்சொற்கள் (technical terms) ஆகியவற்றிற்குப் பதிலாக, ஆங்கிலச் சொற்களே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருவதைத் தமிழின் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் நாம் காண்கிறோம். இந்நிலைக்குக் காரணம், பிறமொழிக் கருத்துக்களை மற்றும் சொற்களை எடுத்தாளும் போது அவற்றை அப்போது நடைமுறையிலிருக்கும் சமுதாய மொழியியற் சூழலுக்கு ஏற்றவாறு (Sociolinguistic Situation) அமைத்துக் கொள்ளாத நிலையேயாகும். ஆகவே ஒரு குறிப்பிட்ட வழக்குமுறையில், நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டச் சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப்பயன்பாட்டில் எளிமை, ஆற்றல் பெற்று விளங்கவில்லையென்றால், அதற்கான காரணங்களை நன்கு ஆராய்ந்து அவற்றிற்கேற்ப மீண்டும் அச்சொற்களை மொழிப்பயன்பாட்டின் தன்மைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வது விவேகமானதாகும். இன்னொரு முறையையும் மேற்கொள்ளலாம். அதாவது, ஒருமுறை மொழிப்பயனில் புகுத்தப்பட்ட சொற்கள், சொற்றொடர்கள் போன்றவை மொழிப்பயன்பாட்டில் ஒரு குறிப்பிட்டத் துறைக்கு ஏற்றவையாக அமையாவிட்டால் அவற்றை அப்படியே நிலைநிறுத்திக் கொண்டு அக்குறிப்பிட்ட மொழிப்பயன்பாட்டிற்கெனப் மீண்டும் மொழிக்கூறுகளைப் புதுமை.ாக்கம் (Modernization), நிலைபேறாக்கம் (Standardization) ஆகிய முறைகளின் மூலம் உருவாக்கி அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மொழியில் அவ்வப்போது தோன்றும் மாற்றங்களுக்கு ஏற்றவகையில் மொழிப்

பயன்பாட்டிலும் எளிதில் மாற்றங்கள் செய்து கொள்ள வழி உண்டாகும். புதுமையாக்கத்தின் ஒருபகுதியாக எளிமையாக்கம் (Simplification) செயல்படுகிறது. தமிழ் எழுத்துக்கள், சந்தி, மற்றும் சொற்றொடர் அமைப்புக்கள் ஆகியவற்றை எளிமைப்படுத்தும் முயற்சி பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இதைப் போன்றே, தமிழின் மொழிப்பயன்பாட்டில் ஒப்புமையாக்கத்தின் மூலம் சில புதுச் சொற்கள் ஆக்கப்பட்டுவந்துள்ளன. தமிழில் இன்று வழக்கில் உள்ள மொழிநடை (Style) பல்வேறு துறைகளில் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது. கல்வி கற்பித்தலுக்கென ஒரு மொழி நடை, ஆட்சித்துறைக்கென ஒரு மொழி நடை, அறிவியல் துறைக்கென ஒரு மொழிநடை, செய்தித் தொடர்புக்கேற்ற ஒரு மொழி நடை, இவ்வாறு பல்வேறு சமுதாயப் பணிகளுக்கேற்ப மொழிநடைகளில் மாற்றங்கள் செய்துகொள்ள வேண்டிய சூழ்நிலை இன்று பெருமளவில் ஏற்பட்டு வருகிறது. தமிழ்மொழியின் வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. கலைச் சொல்லாக்கம், எந்த முறையில் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகிறது என்பதைவிட அது அம்மொழி பேசும் சமுதாயத்திற்கு எந்த அளவில் பயன்படுகிறது என்பதே இன்றியமையாததாகும். இப்பயனைக் கருதியே கலைச்சொல்லாக்கம் தமிழில் இன்று பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கலைச்சொற்களின் வளர்ச்சியினால், தமிழ் மொழியின் சொற்களஞ்சியம் பெருகுவதோடு இச்சொற்களைப் பயன்படுத்துவதற்கெனச் சிலப் புது அமைப்புக்களும் மொழிநடைகளும் தோன்ற இடமுண்டாகிறது. இவ்வாறு பல்வேறு வகையான மொழி வளர்ச்சித் திட்டங்களை (Language Development Activities) மேற்கொள்வதன் மூலம் தமிழ் மொழியைக் காலத்திற்கேற்ற மொழியாக, ஆற்றல் நிறைந்த மொழியாக, எளிமையான மொழியாக, செய்தித்தொடர்புக்கு எல்லா வகையிலும் ஏற்ற மொழியாக, கல்வி மொழியாக, ஆட்சிமொழியாக, சட்டமொழியாக, சமுதாயத் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கேற்ற மொழியாக அமைத்துக் கொள்ளமுடியும். இத்திட்டங்கள் தமிழ்மொழியை, ஆக்கத்தமிழ் (Potential Tamil) என்ற நிலைக்கு உயர்த்துவதாக அமையும்.

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistic

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

டாக்டர் க. புஷ்பவல்லி

பக்கம் 458) (விலை ரூ 16/-

2. கிளை மொழியியல் (Dialectology)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 226) (விலை ரூ 10/-

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

டாக்டர் கி. கருணாகரன்

பக்கம் 165) (விலை ரூ 7/

4. உலக மொழிகள் - திராவிட மொழிகள் - 1

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 250) (விலை ரூ 12/-

5. உலக மொழிகள் - திராவிட மொழிகள் - 2

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 265) (விலை ரூ 15/-

6. நரிக்குறவப் பழங்குடிமக்கள்

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 96) (விலை ரூ 4/-

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 240) (விலை ரூ 12-50/-

8. ஒலியியல் (Phonetics)

டாக்டர் சு. இராசாராம்

பக்கம் 180) (விலை ரூ 15/-

9. எழுத்திலக்கணக் கோட்பாடு
(Phonological Theories in Tamil Grammars)

டாக்டர் செ. வை. சண்முகம்

பக்கம் 306) (விலை ரூ 20/-

10. சொல்லியல் - 1 (Morphology) - பெயரியல் (Noun)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 280) (விலை ரூ 21/-

11. Linguistic Convergence

Dr. K. Karunakaran

pp. 188) (Price Rs. 10/-

12. இருமொழியம் (Bilingualism)

டாக்டர் கோ. சீனிவாச வர்மா

பக்கம் 152) (விலை ரூ 15/-

13. **Study of Social Dialects in Tamil**

Dr. K. Karunakaran

pp. 141) (Price Rs. 12/-

14. சொல்லியல் (Morphology) - வினையியல் - 1 (Verb-1)

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

பக்கம் 212) (விலை ரூ 16/-

15. சங்கத் தமிழ்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்

(அச்சில்)

16. பாடல் பயிற்றுமுறை

டாக்டர் மா. சு. திருமலை

(அச்சில்)

17. **Studies in Applied Tamil Sociolinguistics**

Dr. K. M. Irulappan

(in press)

18. **Aspects of Language Use**

Dr. M. S. Thirumalai

pp. 140) (Price Rs. 18/-

19. **Aspects of Language Development**

Dr. S. V. Shanmugam

pp. 112) (Price Rs. 14/-

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பானஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

## மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு


1. வெளியீட்டாளர் & ஆசிரியர்: டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
செயலாளர், அனைத்திந்தியத்
தமிழ் மொழியியற் கழகம்,
மொழியியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608 002.

2. அச்சிட்டோர்: சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608 002.

# மொழியியல்

தொகுதி 6 அக்டோபர் - டிசம்பர் 1982 எண் 2

## உள்ளுறை


| வ. எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்பழந்தமிழும் பின்பழந்தமிழும் — ச. அகத்தியலிங்கம் | 1 - 59 |
| 2. | தேம்பாவணியில் செயவென் எச்சம் — பெ. மாதையன் | 61 - 80 |
| 3. | தானாக்கமும் தற்சுட்டாக்கமும் — ப. பத்மநாப பிள்ளை | 81 - 90 |
| 4. | இரண்டாம் மொழி பயிற்றலில் கவிதை — ந. நடராச பிள்ளை & விமலா நடராசன் | 91 - 104 |
| 5. | வியங்கோள் வினை — பி. பெ. சுயம்பு | 105 - 114 |
| 6. | ஒலியன் நிலையும் ஒலியனியலும் — எ.ன். இராமசாமி | 115 - 119 |
| 7. | பலமொழிகளிடையே தமிழ் மொழி வளர்ச்சி — கி. கருணாகரன் | 121 - 126 |